புதிய ஏற்பாடு

– ஓர் இறையியல் கண்ணோட்டம்



அருட்திரு. டாக்டர் ஜி. ராஜாபகதூர்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

புதிய ஏற்பாடு

- ஓர் இறையியல் கண்ணோட்டம்

அருட்திரு

Rev. Dr. *ஜி. ராஜாபகதூர்* M.A., B.D., D.D.,

பேராசிரியர், சென்னை இறையியல் கல்லூரி (MTSC)

WORD OF CHRIST
WOC

100/3, Nirmala Apartments,
Medavakkam Tank Road,
Kellys, Chennai - 600 010.
Phone : 26613242, 42640111

புதிய ஏற்பாடு – ஓர் இறையியல் கண்ணோட்டம்

- Rev. Dr. G. Raja Bahadur

விலை : ரூ. 60/-

Published by

100/3, Nirmala Apartments,
Medavakkam Tank Road,
Kellys, Chennai - 600 010.
Phone : 26613242, 42640111

முன்னுரை

புதிய ஏற்பாட்டின் 27 நூல்களிலும் வருகிற கிறிஸ்துவைப் பற்றிய இறையியல் சத்தியங்களை எளிதில் எவரும் படித்தறிய இந்த நூலினை எழுதியுள்ளேன். இது எழுதப்பட்டதன் மற்றோர் நோக்கம் ஊழிய வாஞ்சையுள்ள விசுவாசிகள் அஞ்சல் வழிப் பயிற்சியின்மூலம் வேதாகம இறையியல் கல்வி பெற வேண்டும் என்பதே. இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, எல்ஷடாய் வேதாகமக் கல்லூரியின் ஸ்தாபகரும் இயக்குனருமான டாக்டர் டேவிட் ராஜா அவர்கள் நடத்தும் அஞ்சல் வழிப் பயிற்சிக்கென இரண்டாவது பாட புத்தகமாக இதனை எழுதியுள்ளேன். இயேசு கிறிஸ்துவை அறிந்த எவரும் அவரைப் பற்றி அறியாத மக்களுக்கு கிறிஸ்து தரும் மீட்பின் செய்தியை தெளிவாக அறிவிக்க இது போன்ற அஞ்சல் வழிப் பயிற்சி பெரிதும் உதவும்.

''வேதாகம சத்தியங்கள்'' என்ற முதல் நூலை எழுதிய பின் ஒரு மாத இடைவெளியில் இந்த இரண்டாவது நூலை எழுதிட தேவன் கிருபை செய்தார். எனது மூன்றாவது நூலாக, ''பழைய ஏற்பாடு – ஓர் இறையியல் கண்ணோட்டம்'' என்ற நூல் வெளிவர இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அநேக ஆண்டுகளுக்கு முன் ராபர்ட் லீ என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய "The Outlined Bible" என்ற பழமையான பயனுள்ள குறிப்பேடு இந்த நூலை நான் எழுதிட, எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. பல வருடங்களுக்கு முன்பு வேதாகமக் கல்லூரி மாணவர்களுக்கு பாடம் சொல்லி கொடுக்க இதனை நான் அதிகம் பயன்படுத்தி வந்தேன். அத்துடன் வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள எனக்கும் இந்தக் குறிப்பேடு மிகவும் உதவியாக இருந்தது.

குறிப்பாக இந்நூலில் புதிய ஏற்பாட்டில் ஆங்காங்கே மிளிரும் இறையியல் கருத்துக்களை சுட்டிக்காட்டி, இறையியல் கண்ணோட்டத்தில் விசுவாசிகள் புதிய ஏற்பாட்டினைப்படித்திட ஒரு சிறிய அளவில் நான் முயன்றுள்ளேன். எனது எளிய இம்முயற்சியினை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

சென்னை – 10
10.7.2004

ஜி. ராஜாபகதூர்

"கிறிஸ்து எனக்கு ஜீவன்" (பிலி. 1:21).

கிறிஸ்துவை அதிகம் நேசித்திருந்த
கிறிஸ்துவின் அடியவர்

திருமதி டாக்டர் டேவிட் சந்திரலேகா

அவர்களின் ஞாபகார்த்தமாக இந்நூல்
வெளியிடப்படுகிறது

பொருளடக்கம்

அத்தியாயம்	பக்கம்
1. புதிய ஏற்பாடு - ஓர் அறிமுகம்	9
2. நான்கு நற்செய்தி நூல்கள் - ஒரு முகவுரை	13
இயேசுவின் வாழ்க்கையும் ஊழியமும்	
3. மத்தேயு நற்செய்தி நூல்	16
4. மாற்கு நற்செய்தி நூல்	21
5. லூக்கா நற்செய்தி நூல்	26
6. யோவான் நற்செய்தி நூல்	30
திருச்சபை தோன்றிய வரலாறு	
7. அப்போஸ்தலர் நடபடிகள்	35
பவுலடியார் எழுதிய திருமுகங்கள்	
— சபைகளுக்கு எழுதப்பட்டவை	
8. ரோமர் திருமுகம்	41
9. I கொரிந்தியர் திருமுகம்	47
10. II கொரிந்தியர் திருமுகம்	53
11. கலாத்தியர் திருமுகம்	56
12. எபேசியர் திருமுகம்	62
13. பிலிப்பியர் திருமுகம்	66
14. கொலோசெயர் திருமுகம்	73
15. I தெசலோனிக்கேயர் திருமுகம்	78
16. II தெசலோனிக்கேயர் திருமுகம்	83

— தனிநபர்களுக்கு எழுதப்பட்டவை

17. I திமோத்தேயு நிருபம் 87

18. II திமோத்தேயு நிருபம் 91

19. தீத்து நிருபம் 97

20. பிலமோன் நிருபம் 101

பொதுவான நிருபங்கள்

21. எபிரேயர் 105

22. யாக்கோபு 111

23. I பேதுரு நிருபம் 116

24. II பேதுரு நிருபம் 120

25. I யோவான் நிருபம் 124

26. II யோவான் நிருபம் 128

27. III யோவான் நிருபம் 131

28. யூதா நிருபம் 136

தீர்க்க தரிசன நூல்

29. வெளிப்படுத்தின விசேஷம் 140

30. முடிவுரை 146

புதிய ஏற்பாடு

– ஓர் இறையியல் கண்ணோட்டம்

அத்தியாயம் - 1

புதிய ஏற்பாடு - ஓர் அறிமுகம்

'புதிய ஏற்பாடு' என்பதன் அர்த்தம்

வேதாகமத்தில் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்று இரு பகுதிகளைக் காண்கிறோம். முந்திய பகுதியை பழைய ஏற்பாடு என்கிறோம். பிந்திய பகுதியை புதிய ஏற்பாடு என்று அழைக்கிறோம்.

இயேசுவின் சீடர்களான அப்போஸ்தலர்களாலும் அவர்களுக்கு அறிமுகமான மற்றவர்களாலும் எழுதப்பட்ட 27 நூல்கள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. 'ஏற்பாடு' என்பது சட்டம் சம்பந்தப்பட்ட ஒரு பதம். இதனை 'உடன்படிக்கை' என்றும் கூறலாம். தனது மரணத்திற்கு முன்பு ஒருவர் எழுதும் 'உயில்' (Will) போன்றது. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது மரணத்திற்கு முன்பாக தம்முடைய சீடர்களோடு தமது இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி எப்போதும் தமது மரணத்தை நினைவு கூரும்படி சொன்னார்.

பழைய ஏற்பாட்டில் இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்ற சத்தியத்தை தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலர் அறிந்திருந்தனர். எனவே மிருகங்களில் இரத்தத்தின் மூலம் தேவன் மனிதர்களோடு தமது உடன்படிக்கையை செய்திருந்தார். அதனை மனிதர்கள் சரியாக கைக்கொள்ள முடியாத நிலையில் தமது சொந்தக் குமாரனின் இரத்தத்தின் மூலம் பாவம் நிவிர்த்தியாவதற்கான புதிய உடன்படிக்கையை மனிதர்களோடு செய்வதற்கென இயேசு கிறிஸ்துவை இவ்வுலகுக்கு அனுப்பினார்.

இந்தப் புதிய உடன்படிக்கையை அல்லது புதிய ஏற்பாட்டை விளக்கிப் போதிப்பதற்காக பரிசுத்த மனிதர்களை தமது பரிசுத்த ஆவியினால் தேவன் ஏவி, இந்த 27 நூல்களை எழுதும்படி செய்தார். பழைய ஏற்பாடு, நியாயப் பிரமாணமாகிய தேவனுடைய கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் புதிய ஏற்பாடு, தேவனுடைய நித்திய கிருபையை அடிப்படையாகக் கொண்டது.

எனவே புதிய ஏற்பாட்டுச் செய்திகள் யாவும் இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டவை. நான்கு சுவிசேஷங்களும் இயேசுவை தேவனால் முன்னறிவிக்கப்பட்ட மேசியாவாகவும் மனுக்குலத்தின் மீட்பராகவும் சித்தரிக்கின்றன. இயேசு கிறிஸ்துவை அன்றைய

ரோமப்பேரரசின் கிழக்குப் பகுதியில் உள்ள நாடுகளில் அப்போஸ்தலர்களும் விசுவாசிகளும் பிரசங்கித்தனர் என்ற செய்திகளை அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் காண்கிறோம் அதன் பயனாக சபைகள் எங்கும் தோன்றலாயின. நிருபங்களைப் படிக்கும் போது அவற்றில் இயேசு கிறிஸ்து மெய் விசுவாசிகளின் வாழ்க்கையில் பிரசன்னராயிருந்து, அவர்களின் அனுதின வாழ்க்கையில் அவர்களை நடத்திச் செல்பவராகக் காணப்படு கிறார். கடைசி நூலான வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிற ராஜாதி ராஜாவாகவும், சரீர உயிர்த்தெழுத லுக்குப் பின் மனிதர்களை நியாயத் தீர்க்கப் போகிற வெள்ளை சிங்காசன நியாயாதிபதியாகவும் யோவானுக்கு தரிசனமாகக் கிடைத்த வெளிப்பாட்டின் மூலம் முன்னுரைக்கப் படுகிறார்.

புதிய ஏற்பாடு கிடைக்கப் பெற்ற விதம்

இதில் காணப்படும் 27 நூல்களும் பரிசுத்த ஆவியானவர் தந்த தேவனுடைய வார்த்தை என்பதையும், இவைகளை பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலோடு தேவ மனிதர்கள் எழுதினார்கள் என்பதையும் நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். ஆனால் இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் அவர் செய்த அற்புதங்களைக் குறித்தும் அதிகமாக மிகைப்படுத்திக் கூறும் அநேக நூல்கள் பிற்காலத்தில் எழுதப்பட்ட காரணத்தால், இன்னின்ன நூல்களை மட்டுமே தூய ஆவியானவரின் ஏவுதலோடு பரிசுத்த தேவ மனிதர்கள் எழுதினார்கள் என்பதை கி.பி. நான்காம் நூற்றாண்டில் வேதாகம ஆய்வுக் குழுவினர் கூடி மதிப்பீடு செய்து அவற்றை மட்டுமே புதிய ஏற்பாடாகத் தொகுத்துத் தந்தனர். ஆங்கிலத்தில் இப்படி மதிப்பீடு செய்து தொகுக்கப்பட்ட முறையை 'கேனோன்' (Canon) என்று குறிப்பிடு கிறார்கள். கி.பி. 397 ல் கார்தேஜ் என்ற இடத்தில் கூடிய ஆய்வுக் குழுவினரும் (Council of Carthage), கி.பி. 451ல் சால்சிடோன் என்ற இடத்தில் கூடிய ஆய்வுக் குழுவினரும் (Council of Chalcedon)இவை தேவனுடைய வார்த்தை என்று இவர்கள் தீர்மானித்தபடியே, இந்த 27 நூல்களையும் புதிய ஏற்பாடு என்று திருச்சபை ஏற்றுக் கொண்டது.

இரு ஏற்பாடுகளுக்கும் உள்ள உறவு

பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு உண்டானதற்கான முன்னோடியாக அமைந்திருந்தது எனலாம். புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றம் கண்ட

நிகழ்ச்சிகளுக்கும் காரியங்களுக்கும், பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளும் காரியங்களும் நிழலாட்டமாக இருந்து வருகின்றன. இதனை ஆங்கிலத்தில் 'டைப்ஸ்' (Types) என்கிறார்கள். தமிழில் நாம் இவற்றை 'மாதிரிகள்' என்று குறிப்பிடலாம். உதாரணமாக பழைய ஏற்பாட்டில் 'தகன பலிக்கான ஆட்டுக்குட்டி' (ஆதி. 24 : 7,8) 'ஆசாரியத்துவம்', 'ஆசரிப்புக் கூடாரம்' ஆகியவை, இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய பிராயச்சித்த பலிக்கும் இணையான மாதிரிகளாக இருந்ததாக எடுத்துக் கொள்கிறோம். இன்னும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட அநேக பலிகளை, தம்மையே சிலுவையில் தியாக பலியாக்கி இயேசு கிறிஸ்து நிறைவேற்றி முடித்தார். பழைய ஏற்பாட்டின் காரியங்கள் யாவும் புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றம் கண்டன எனலாம்.

புதிய ஏற்பாட்டைப் புரிந்து கொள்வதெப்படி?

கீழ்க்காணும் ஆலோசனைகளைப் பின்பற்றி புதிய ஏற்பாட்டு நூல்களை நாம் புரிந்து கொள்ள முடியும்.

1. பொதுவாக, வார்த்தைகளின் சாதாரண அர்த்தத்தைக் கொண்டு ஒரு நூலின் ஒரு பகுதியை நாம் புரிந்து கொள்ள முடியும். ஆனால் குறிப்பிட்ட பகுதியில் அடங்கியுள்ள வேத சத்தியத்திற்கு அந்த அர்த்தம் முரண்பாடாக இருக்கக் கூடாது.

2. ஒரு குறிப்பிட்ட வசனத்தின் பொருளை அதற்கு முன்வரும், பின் வரும் வசனங்களை வைத்து நாம் புரிந்து கொள்ளப் பிரயாசப்பட வேண்டும். அந்த முழு அத்தியாயத்தையும், அந்த நூல் எழுதப்பட்ட நோக்கத்தையும் கருத்தில் கொண்டு நாம் அந்த வசனத்தைப் படிக்க வேண்டும்.

3. ஒரு வேத வசனத்தை அதற்கொத்த மற்ற வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதன் சரியான அர்த்தம் நமக்குக் கிடைக்கும். மற்ற வசனங்களில் வரும் விஷயங்களை நாம் அறிய வரும்போது இந்த வசனத்தை நாம் தவறாகப் புரிந்து கொள்ள ஏதுவிருக்காது.

4. ஒரு வேதப்பகுதியை எடுத்துக் கொள்ளும்போது இந்தப் பகுதி யாருக்காக எழுதப்பட்டது என்பதை முதலாவது தீர்மானிக்க வேண்டும். சீஷர்களுக்கா? வேதபாரகருக்கும் பரிசேயருக்குமா? இப்பகுதி இஸ்ரவேல் ஜனங்களுக்காக எழுதப்பட்டதா அல்லது

அத்தியாயம் - 2

நான்கு நற்செய்தி நூல்கள் - ஒரு முகவுரை

சமநோக்கு நற்செய்தி நூல்கள் (Synoptic Gospels)

இறையியலில் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்றும் 'சம நோக்கு நற்செய்தி நூல்கள்' என அழைக்கப்படுகின்றன. காரணம், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடந்த அநேக சம்பவங்களை இவை ஒன்று போல் எழுதியிருக்கின்றன. நிகழ்ச்சிகளை ஒன்று போல் கூறின போதிலும் வித்தியாசமான நூல்களாக இவை கருதப்படக் காரணம் என்ன? இதனை இறையியலார் 'சமநோக்கு நற்செய்தி நூல்களின் பிரச்சினை' (Synoptic Problem) என்கின்றனர்.

மத்தேயு நூலிலும் லூக்கா நூலிலும் பாதி அளவில், மாற்கு எழுதின விஷயங்களில் 90 சதவிகிதம் காணப்படுகிறது. அடுத்த பாதியில் வரும் சம்பவங்களில் பெரும் பகுதியை மத்தேயுவும் லூக்காவும் ஒன்று போல் எழுதியுள்ளனர். ஆனால் யோவான் நற்செய்தி நூலில் உள்ள நிகழ்ச்சிகளில் பத்தில் ஒரு பங்கு நிகழ்ச்சிகளே சமநோக்கு நூல்களான மற்ற மூன்று நற்செய்தி நூல்களிலும் காணப்படுகின்றன.

இப்பிரச்சினைக்கான காரணம் குறித்து இன்றைய இறையிய லாரின் கருத்து விளக்கம் என்னவெனில், மாற்கு சுவிசேஷம் முதலாவது எழுதப்பட்டதாகவும், மற்ற நற்செய்தி நூல்கள் அவற்றிலிருந்து எடுத்தெழுதப்பட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர். இவற்றில் காணப்படும் இயேசுவின் உரையாடல்கள் வரும் (Discourses) பகுதிகள் பொதுவான மற்றோர் ஆதார நூலிலிருந்து எடுத்தெழுதப் பட்டவை என்கின்றனர்.

ஆனால் பாரம்பரியக் கருத்து என்னவென்றால், இயேசுவின் சீட னாக இல்லாத மாற்கு என்ற ஒரு விசுவாசி, பேதுரு அப்போஸ்தலரிடம் கேட்டறிந்த உண்மைகளை தனது பெயரில் ஒரு நற்செய்தி நூலாக எழுதியுள்ளார் என்பதே. அத்துடன் மாற்கு என்பவர், மற்ற நற்செய்தி யாளர்களில், மத்தேயு, லூக்கா என்பவர்களிடமிருந்தும் இயேசுவைக் குறித்து செய்திகளைக் கேட்டறிந்திருக்கலாம்.

இந்த சம நோக்கு நூல்களின் பிரச்சினைக்கு முக்கிய காரணம் நற்செய்தி நூல்கள் முழுக்க முழுக்க மனிதர்களால் எழுதப்பட்டவை என்ற எண்ணம் மேலோங்குவதாலேயே. இப்பிரச்சினை 19ம் நூற்றாண்டில் இறையியலார் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பலனாக ஏற்பட்ட ஒரு பிரச்சினையே. காலாகாலமாய் மெய் விசுவாசிகளின் திடமான நம்பிக்கை என்னவெனில், கிறிஸ்துவின் முழு ஆள் தத்துவத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அவருடைய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை வலியுறுத்திக் காண்பிக்கும்படி, பரிசுத்த ஆவியாகிய தேவன் இந்த நான்கு நற்செய்தி நூல்களையும் எழுத ஏற்பாடு செய்தார் என்பதே. எனவே நற்செய்தி நூல்களில் ஓரளவு வேறுபட்ட செய்திகளும், திரும்பத் திரும்பச் சொல்லப் படும் பொதுவான நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருப்பதில் வியப்பொன்று மில்லை. இது பற்றி ஒவ்வொரு நற்செய்தி நூலையும் விரிவாகப் படிக்கும் போது நாம் அறிந்து கொள்ள முடியும்.

இவை எழுதப்பட்ட காலம்

ஆதித்திருச்சபையின் குறிப்பேடுகளில் மத்தேயு சுவிசேஷமும் யோவான் சுவிசேஷமும் முதலில் காணப்படுகின்றன. சரித்திரக் கண்ணோட்டத்தில் நாம் பார்க்கும் போது யூதர்களுக்கு இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகள் குறித்த ஒரு நற்செய்தி நூல் மிக அவசரமாக எழுதப்பட வேண்டியதிருந்தது. எபிரேய மொழியில் மத்தேயு இதனைத் திறம்பட எழுதி முடித்தார். அடுத்து அந்நாட்களில் கிரேக்க மொழி எங்கும் பேசப்பட்டு வந்ததால் லூக்கா நற்செய்தியாளர் விரைவாக அதனை கிரேக்க மொழியில் எழுதி முடித்தார். மேலும் அந்நாட்களில் எருசலேமிலிருந்து மேற்கு திசை நோக்கி நற்செய்தி அறிவிக்கப்பட்டு பரவி வந்ததால் அங்குள்ள ரோமர்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்து கொள்வதற்காக மாற்கு தமது நூலை எழுதினார்.

அதன் பிறகு உலகின் எப்பகுதியிலும் உள்ள மக்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவரை விசுவாசித்து அவர் தரும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வது பற்றியும் அறிந்து கொள்ள சிறப்பான ஒரு நூல் தேவைப்பட்டது. இதனை யோவான் அப்போஸ்தலர் சிறப்பான முறையில் எழுதிமுடித்தார். இதனால் மற்ற மூன்று நற்செய்தி நூல்களில் வரும் செய்திகளுக்கும் கூட இந்த யோவான் நற்செய்தி நூல் ஆவிக்குரிய மெருகூட்டுகிறது எனலாம்.

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்று நூல்களிலும் காணப்படும் செய்திகளிலிருந்து, அவை அனைத்தும் கி.பி. 70ம் ஆண்டில் எருசலேம் பட்டணம் வீழ்ச்சி அடையும் முன்னதாக எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் கருத இடமிருக்கிறது. யோவான் நற்செய்தி நூல் அதற்குப் பின்னர் எழுதப்பட்டிருக்கவேண்டும். மத்தேயு, லூக்கா ஆகிய இரண்டும் அப்போஸ்தலர் நடபடிகள் எழுதப்படுவதற்கு முன்னதாக எழுதப்பட்டவை.

நற்செய்தி நூல்கள் எழுதப்பட்ட காலத்தை நிர்ணயிக்க, பவுலடியார் ரோமச்சிறையில் அடைபட்டிருந்த காலம் (கி.பி. 58-60 அல்லது 59-60) நமக்கு உதவுகிறது. எனவே நடபடிகள் நூல் கி.பி. 60 அல்லது 61ல் எழுதப்பட்டிருக்கவேண்டும். அப்படியே லூக்கா தமது நூலை கி.பி. 58 - 61லும் மத்தேயு தமது நூலை லூக்கா எழுதப்படுவதற்கு முந்தி 50 - 60 லும் எழுதியிருக்கலாம். பேதுருவின் மரணத்திற்குப் பிறகே மாற்கு தனது நற்செய்தி நூலை எழுதியிருக்கவேண்டும். எருசலேம் பட்டணம் ரோமர்களால் அழிக்கப்படுவதற்கு முன்பு கி.பி. 68-69ல் இது எழுதப்பட்டிருக்க வேண்டும். அங்ஙனமே யோவான் அப்போஸ்தலரும் தான் எபேசு பட்டணத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்த காலமான கி.பி. 85 முதல் 95 வரையுள்ள ஆண்டுகளில் யோவான் நற்செய்தி நூலை எழுதி முடித்திருப்பார்.

அடுத்து வரும் நான்கு அத்தியாயங்களில் நற்செய்தி நூல்களை தனித்தனியாக நாம் ஆராய்ந்து படிக்கலாம்.

அத்தியாயம் - 3

மத்தேயு நற்செய்தி நூல்

நூலாசிரியர் பற்றி

இந்நூலாசிரியரான மத்தேயு இயேசு கிறிஸ்துவின் ஒரு சீடர். இந்த நூலை இவர் எழுதியிராவிட்டால் இவரைக் குறித்து நமக்கு அதிகம் தெரிந்திருக்காது. லேவி என்ற பெயரோடு ஆயத்துறையில் பணிபுரிந்த இவர் இயேசுவால் அழைக்கப்பட்ட போது உடனே அவரைப் பின்சென்று ஊழியம் செய்தார். இவர் ஆயக்காரன் என்ற செய்தி மத்தேயு 9 : 9ல் குறிப்பிடப்படுகிறது. லேவி என்ற இவருடைய பெயரை மத்தேயு என்று இயேசு மாற்றினார். மத்தேயு என்றால் ''கடவுளின் ஈவு'' என்று அர்த்தம். பிற்காலத்தில் அப்போஸ்தலர் மத்தேயு என்றுதான் இவர் அழைக்கப்பட்டார். இவர் ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்றவுடன் தனது வீட்டில் இயேசுவுக்கு ஒரு பெரிய விருந்து பண்ணினார் என்று லூக்கா நற்செய்தி நூலில் *(5:29)* வாசிக்கிறோம். வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவரானாலும், மிகவும் தாழ்மையான சிந்தை படைத்தவர். எனவே தான் இயேசுவுக்கு விருந்து படைத்ததை தனது நூலில் அவர் எழுதவில்லை.

இந்நூல் எழுதப்பட்ட நோக்கம்

யூதர்களுக்காக எழுதப்பட்ட இந்த நற்செய்தி நூலில் இயேசு கிறிஸ்துவை மேசியாவாகவும் ராஜாவாகவும் காண்பிப்பதே இதை எழுதின மத்தேயு சுவிசேஷகரின் ஒரே நோக்கம். இதற்கு ஆதாரமாக இந்நூலின் முக்கிய வசனங்களான, ''தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்து'' *(மத். 1:1)* என்று வருகிற வசனத்தையும், ''இவன் யூதருடைய ராஜாவாகிய கிறிஸ்து'' *(மத். 27 : 37)* என்று வருகிற வசனத்தையும் மத்தேயு எழுதியுள்ளார் என்று இறையியலார் கருதுகின்றனர். மத்தேயு முதலில் இதனை எபிரேய மொழியில் தான் எழுதினார். பழைய ஏற்பாட்டிலிருந்து நிறைய வேதவாக்கியங்களை எடுத்துக் கூறி அவை இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியதை எழுதினார். இந்த நூலில் அடிக்கடி வரும் வார்த்தை ''நிறைவேறிற்று'' என்பதாகும். 66 இடங்களில் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள காரியங்கள் இயேசு கிறிஸ்துவில் நிறைவேற்றம் கண்டது என்று யூதர்களுக்கு தெளிவு படுத்துகிறார்.

சிலர் நினைப்பது போல் நான்கு நற்செய்தியாளர்களும் முரண்பாடாக இயேசுவைக் குறித்த செய்திகளை ஒரு போதும் கூறவில்லை. ஒவ்வொரு நற்செய்தியாளரும் தனது நூலை ஒரு பிரத்தியேகமான நோக்கத்தோடு எழுதி முடித்திருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சிறப்பான ஒரு விதத்தில் மத்தேயு சித்தரித்துக் காண்பிக்கிறார். இயேசு கிறிஸ்து இதில் ராஜாவாகச் சித்தரிக்கப்பட் டுள்ளார். மேலும் ''ராஜ்யம்'' என்ற சொல் இதில் 56 முறை வருகிறது. ''பரலோக ராஜ்யம்'' என்ற தொடர் 32 தடவை வருகிறது. ''தாவீதின் குமாரன்'' என்று இயேசு ஏழு முறை இந்நூலில் அழைக்கப் பட்டிருக்கிறார்.

மத்தேயு 10 : 5 - 6 வசனங்களிலும், 15ம் அதிகாரம் 24 ம் வசனத்திலும், இயேசு கிறிஸ்து யூதர்களுக்கு ஊழியம் செய்வதற்காகவே வந்தார் என்று மத்தேயு அதை முக்கியப்படுத்தி கூறுகிறார். இயேசுவும் அவருடைய சீடர்களும் பிரசங்கித்து வந்த 'ராஜ்யத்தின் சுவிசேஷம்' என்பது இன்று நாம் அறிவிக்கிற நற்செய்தியைப் போன்றதல்ல. மத். 4:23; 10 : 7 வசனங்களைப் படித்துப்பார்த்தால், இது தெரியவரும். இயேசுவும் அவருடைய சீஷர்களும் பிரசங்கித்த சுவிசேஷத்தில் கடவுள் பூமியில் ஒரு அரசியல் ரீதியிலான ஆவிக்குரிய ராஜ்யம் ஒன்றை ஏற்படுத்தப் போகிறார் என்றும், அதில் தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து அரசாளப் போகிறார் என்றும் யூதமக்களுக்கு பிரசங்கிக்கப் பட்டது. ஆனால் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய வற்றிற்கு பின்பு பிரசங்கிக்கப்படுகிற சுவிசேஷத்தில் கடவுளின் ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றியே ஜனங்களுக்கு அறிவிக்கப் படுகிறது.

இயேசு கிறிஸ்து வேண்டாமென்று தள்ளப்பட்டு, அவர் சிலுவை யில் அறையப்படும் வரை 'ராஜ்யத்தின் சுவிசேஷம்' பிரசங்கிக்கப்பட வேண்டியதிருந்தது. மீண்டும் ராஜ்யத்தின் சுவிசேஷம் ஏழு வருஷ உபத்திரவ காலத்திற்கு சற்று முன்னதாகவும் (மத். 24 : 14), இயேசு கிறிஸ்து ராஜாவாக மீண்டும் வரவிருக்கும் இரண்டாம் வருகைக்கு முன்பும் பிரசங்கிக்கப்படும். ஆகவே இன்று நாம் பிரசங்கிக்கும் நற்செய்தி கிறிஸ்துவின் மூலம் மனிதர்களுக்குக் கிடைக்கும் இரட்சிப்பைக் குறித்தும், தேவன் தமக்கென்று ஒரு கூட்டம் மக்களை உலகத்திலிருந்து வேறு பிரித்தெடுப்பதைக் குறித்ததுமான நற்செய்தி. வேறு விதமாகச் சொன்னால் இது தேவனுடைய கிருபையின் சுவிசேஷம்.

மத்தேயு நற்செய்தி நூல் - ஓர் ஆய்வு

1. ராஜாவின் வம்ச வரலாறும் பிறப்பும் (அதிகாரங்கள் 1-2)

முதல் இரண்டு அதிகாரங்களில், மத்தேயு தமது நற்செய்தி நூலில் ராஜாவாகக் காண்பிக்கும் இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றையும் அவருடைய பிறப்பையும் குறித்து எழுதுகிறார். ''யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?'' *(2:2)* என்று கிறிஸ்துவைப் பற்றி விசாரித்தபடி கிழக்கேயிருந்து மூன்று ராஜாக்கள் (ஞானிகள்) ஏரோதின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தனர். பின்பு நட்சத்திரத்தினால் வழிநடத்தப்பட்டு பெத்லகேம் ஊர் வந்து, ராஜாவாகப் பிறந்திருக்கும் குழந்தை இயேசுவைப் பணிந்து கொள்கிறார்கள். தாவீது அரசனின் வம்சத்தில் வந்து, இயேசு கிறிஸ்து இஸ்ரவேல் ஜனத்தின் அரசராகப் பிறந்திருப்பதைக் காண்பிக்க அவருடைய வம்சாவளியினரைப் பற்றிய செய்தி முதல் அதிகாரத்தில் நமக்கு அறிவிக்கப்படுகிறது. யூத ராஜ வம்சத்தில் இயேசு கிறிஸ்து தான் கடைசி ராஜா என்பதை மத்தேயு தெளிவாகக் குறிப்பிடுகிறார். இனி என்றென்றும் இவரே இஸ்ரவேலை அரசாளப் போகிறவர் என்பதையும் யூதர்களுக்கு சொல்ல முற்படுகிறார்.

2. ராஜாவின் முன்னோடி (அதி. 3)

கிழக்கத்திய நாடுகளில் பிரசித்தி பெற்ற அரசர்களின் வருகையை அறிவிக்க முன்னோடிகள் இருப்பார்கள். அங்ஙனமே ராஜாதி ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், அதனால் தேவனுடைய ராஜ்யம் சமீபித்து வந்திருக்கிறது என்பதையும் யூத ஜனங்களுக்குக் கூறி அறிவிக்க, யோவான் ஸ்நானகன் ஏசாயாவின் தீர்க்க உரைப்படி வனாந்திரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாய்த் தோன்றினான். அது மாத்திரமல்ல இந்த ராஜாவுக்கு அவன் ஞானஸ்நானமும் கொடுத்தான்.

3. ராஜா சோதிக்கப்படுதல் (4:1-11)

ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவை பிசாசானவன் சோதிப்பதை இந்த வசனங்களில் நாம் காண்கிறோம். சாத்தான் இயேசுவைப் பார்த்து ''நீர் சாஷ்டங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் உலக ராஜ்யங்களை எல்லாம் உமக்குத் தருவேன்'' *(4:4)* என்று சொல்கிறான். ஆனால் தேவ ராஜ்யத்தை கிறிஸ்து ஸ்தாபிப்பதற்கு அது தேவனுடைய வழியல்ல. கிறிஸ்து சிலுவையில் பாடுபட்டு, மரித்து, மரண பரியந்தம் தன்னைத் தாழ்த்தினபடியால் எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தைப் பெற்று, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களையும்

உடையவராய் நித்திய ராஜ்யத்துக்கு ராஜாவானார். அதுதான் பிதாவாகிய தேவன் வகுத்த வழி.

இயேசு கிறிஸ்து ஆவியானவரால் வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்ட போது அவர் 40 நாட்கள் உபவாசித்து சாத்தானை மேற் கொண்டார் என்பதை இந்த வசனங்களில் நாம் காண்கிறோம். முதல் ஆதாம் பிசாசிடம் தோற்றதால் வந்த தீமைகளையெல்லாம், சாபங்களையெல்லாம் மாற்றி விடுவதற்காக இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து பிசாசை சிலுவையில் வென்று பரலோக ராஜ்யத்தை ஜனங்களுக்கு கொண்டு வந்தார்.

4. ராஜ்யம் பற்றி ராஜாவின் அறிவிப்பு (4 : 12 - 25)

இயேசு தமது ராஜ்யத்தைக் குறித்து இந்த வசனங்களில் அறிவிக்கி றார். இயேசு திருச்சபையை ஸ்தாபிக்க இந்த உலகுக்கு வரவில்லை. தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவே வந்தார். இந்த ராஜ்யத்தின் பிரஜைகள் யாரென்றால், பூமியிலும் பரலோகத்திலும் அவருக்குக் கீழ்ப்படிகிற அனைவரும் ராஜ்யத்தின் பிரஜைகள். பரலோக ராஜ்யத்தின் பிரஜைகளாக ஒரே வழி மறுபடியும் பிறந்த அனுபவம் (யோவான் அதி. 3). புதுப்பிறப்படைந்தவர்களே பரலோக ராஜ்யத்தை சுதந்தரிப்பவர்கள். பூமியில் கண்ணுக்கு புலப்படாத தேவனுடைய ராஜ்யம் பின்பு காணக் கூடிய பரலோக ராஜ்யமாக ஸ்தாபிக்கப்படும்.

5. ராஜாவின் கட்டளைகள் (5 - 7 அதி)

'மலைப் பிரசங்கம்' என்று யாவரும் விரும்பிப் படிக்கும் மத்தேயு 5,6,7 அதிகாரங்கள் கிறிஸ்துவின் சீடர்களுக்கான போதனைகளே. இப்பூமியில் ஸ்தாபிக்கப்படவேண்டிய கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கான நடைமுறை நியாய விதிகளே அவை. இது நமது வாழ்க்கைக்குப் பயன்படும் பிரசங்கமாக இருந்தாலும் கிறிஸ்து பூமியின் மேல் கொண்டு வரப் போகும் அவருடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதே இப்பிரசங்கத்தின் நோக்கம். கிறிஸ்தவர்களாகிய நாம் இவற்றை நமது அறநெறி வாழ்க்கைக்கானகட்டளைகளாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

6. ராஜாவின் ஊழியம் (அதி. 8 - 11 : 19)

தமது ஜனமாகிய இஸ்ரவேல் மக்கள் மத்தியில் வியாதிகளைக் குணமாக்குவதும் ராஜ்யத்தின் காரியங்களைப் போதிப்பதுமாக கிறிஸ்து இருந்தார். ராஜாவாக இருந்தாலும், தனது எஜமானுக்காக உண்மையாய் உழைக்கும் ஒரு அடிமையைப் போல கிறிஸ்து பிதாவின் காரியங்களில் தீவிரமாய் உழைத்தார் (8 : 6).

7. ராஜா புறக்கணிக்கப்படுதல் (11 - 20 அதி.)

இப்பகுதி மிக முக்கியமான ஒரு பகுதி. இதில் தங்கள் ராஜாவை இஸ்ரவேல் மக்கள் வேண்டாம் என்று புறக்கணிப்பதைக் காண்கிறோம். இதனால் கிறிஸ்துவின் ராஜ்யம் உடனே பூமியில் ஸ்தாபிக்கப்பட முடியாமல் காலதாமதம் ஏற்படுகிறது. மேசியாவாகிய கிறிஸ்துவின் ஆட்சி தள்ளிப் போடப்படுகிறது. இங்கு தான் இயேசு கிறிஸ்து ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கி திருச்சபை என்ற ஒரு புதிய சமுதாயத்தை ஏற்படுத்துவது குறித்து மறைமுகமாகப் பேசத் தொடங்குகிறார். 12ம் அதிகாரம் 14ம் வசனத்தில் அவரைக் கொலை செய்யத் தேடுகிறார்கள் என்பதை அறிந்தவுடன் 13ம் அதிகாரத்தில் ராஜ்யத்தின் காரியங்களை உவமைகளாகப் போதிக்க ஆரம்பிக்கிறார்.

8. தலைநகருக்குள் நுழைகிறார் (21 - 25 அதி.)

கிறிஸ்துவின் பூமிக்குரிய ராஜ்யமான இஸ்ரவேல் ராஜ்யத்திற்கு தலைநகராயிருப்பது எருசலேம். அதற்குள் இயேசு ராஜாவாக நுழைகிறார். ஆனால் அவருடைய சொந்த இஸ்ரவேல் மக்கள் வெளிப்படையாகவும் இறுதியாகவும் அவரை வேண்டாமென்று புறம்பே தள்ளி கொலை செய்கின்றனர்.

உலகத்தில் எந்த நியாயாதிபதியும், தனக்கும் குற்றவாளிக்குமுள்ள உறவை வைத்து தண்டனை கொடுக்க முடியாது. ஆனால் வெள்ளைச் சிங்காசனத்தின் முன்பு நடைபெறப்போகும் கிறிஸ்து ராஜாவின் நியாயத் தீர்ப்பில், மனிதர்களுக்கு தம்மோடுள்ள உறவை வைத்துத்தான் கிறிஸ்து ஜனங்களை நியாயந் தீர்க்கப் போகிறார். கிறிஸ்துவோடுள்ள உறவு மனிதர்களுக்கு நித்திய ஜீவனை த் தரும். அந்த உறவு கொள்ளாதவர்கள் நம்பிக்கையற்ற நிலையில் ஆக்கினை தீர்ப்படைந்து அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள்.

9. ராஜாவின் சாவும் உயிர்ப்பும் (26 - 28 அதி.)

இயேசு தம்மை ராஜாவாகிய கிறிஸ்து என்று பிரகடனப்படுத்திய தால் அவரைச்சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள். குறிப்பாக 27 ம் அதிகாரம் 11, 12, 29, 37, 42 ஆகிய வசனங்களைப் படித்துப் பாருங்கள். 'நீ இஸ்ரவேலின் ராஜாவா?', 'யூதருடைய ராஜாவா?' என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டார்கள். இயேசுவின் இருதயம் அவர்களுடைய புறக்கணிப்பால் கிழிக்கப்பட்டது. அதற்கு அடையா ளமாகவே, எவராலும் கிழிக்க முடியாத தேவாலயத்தின் மிகத்தடிப்ப மான திரைச்சீலையை தேவன் இரண்டாய்க் கிழித்தார் (மத். 27 : 51).

அத்தியாயம் - 4

மாற்கு நற்செய்தி நூல்

நூலாசிரியர் பற்றி

மாற்கு ஒரு அப்போஸ்தலர் அல்ல. ஆனால் அப்போஸ்தலர்களோடு பழகும் பாக்கியம் பெற்றவர். ஒரு சாதாரண கிறிஸ்தவ ஊழியர். புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள மரியாள்களில் ஒருத்தியுடைய மகன் இவர். நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர் (அப். 12 : 12). இவர் பர்னபாவின் நெருங்கிய உறவினர். இந்த மாற்கு தான் பவுலுக்கும் பர்னபாவுக்கும் ஊழியத்தில் பிரிவினை ஏற்பட ஒரு சமயத்தில் காரணமாயிருந்தவர் (அப். 15 : 36 - 41). பேதுருவின் மூலம் குணப்பட்டு கிறிஸ்துவின் சீடர் ஆன இவர், பேதுருவின் கூடவே இருந்து இயேசுவைக் குறித்தும் அவர் ஊழியங்களைக் குறித்தும் கேள்விப்பட்டதோடு, பேதுரு கூறிய யாவற்றையும் குறிப்பெடுத்து சேகரித்து பத்திரப்படுத்தி வந்துள்ளார்.

மாற்கு நற்செய்தி நூலின் தோற்றம்

திருச்சபையின் பிதாக்களில் ஒருவரான அலெக் சாந்திரியா பட்டணத்து கிளமெந்து என்பவர், மாற்கு சுவிசேஷம் எழுதப்பட்டது குறித்து இவ்வாறு கருத்துத் தெரிவிக்கிறார்; பேதுருவின் தெளிவான செய்திகளைக் கேட்ட மக்கள் அவைகளைக் கேட்கும் போதெல்லாம் பரவசமடைந்ததோடு, இச்செய்திகளை எழுதித்தரும்படி பேதுருவின் உதவியாளராயிருந்த மாற்குவிடம் வந்து இவர்கள் கேட்டிருக்க வேண்டும். எனவே மாற்கு அதற்கு சம்மதித்து, அவைகளை தொகுத்து ஒரு நூலாக எழுதிவிட்டார். அதோடு கூட இந்த நூலுக்கு பேதுருவின் அப்போஸ்தல முத்திரை போடப்பட்டுள்ளது என்கிறார் கிளமெந்து. ஜஸ்டின் மார்ட்டியர். இந்நற்செய்தி நூல் குறித்துப் பேசும்போது ''பேதுருவின் நற்செய்தி நூல்'' என்ற பெயரும் இதற்கு பொருத்தமாயிருக்கும் என்கிறார்.

இந்நூல் எழுதப்பட்ட நோக்கம்

இந்நற்செய்தி நூல் ரோமபுரியில் வைத்து எழுதப்பட்டது. இது ரோமர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்து கொள்வதற்காக எழுதப்பட்டது. இதன் காரணமாகவே இந்நூலில் பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும்,

யூதர்கள் பயன்படுத்தும் சொற்களுக்கு இந்நூலில் பல இடங்களில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. (மா. 3 : 17; 5 : 41; 7 : 11, 34: 14 : 36). அங்ஙனமே யூதப் பழக்கவழக்கங்களும் இதில் அதிகமாக விளக்கப் பட்டுள்ளன. (மா. 7 : 3,4 ; 14 : 12; 15 : 42). அதுபோல, 'லேகியோன்', 'செஞ்சூரியன்' (நூற்றுக்கதிபதி) போன்ற லத்தீன் சொற்களும் இந்நூலில் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

முழுப்புத்தகத்திலும் பேதுருவினுடைய துடுக்கான சுபாவம் பிரதி பலிப்பதை நாம் காணமுடிகிறது. எனவே ரோமப் பிரஜைகள் யாவரும் இதனை வாசிப்பதற்கு மிகவும் ஏற்றதொரு நூலாக இது விளங்குகிறது.

இயேசுவைப் பற்றி மாற்குவின் சித்திரம்

ரோமர்கள் சுறுசுறுப்பானவர்கள், செயல் வீரர்கள். எனவே இந்த நூலில் கர்த்தராகிய இயேசு ஒரு சுறுசுறுப்பான பணியாளாகவும் லட்சியத்தோடு உழைக்கும் ஒரு சிறந்த உழைப்பாளியாகவும் சித்தரிக்கப்படுகிறார். இதன் நோக்கம் என்னவென்றால், ரோமர்களுக்கு வெறும் உபதேசங்களையும் போதனைகளையும் கேட்டுக் கொண்டேயிருப்பது பிடிக்காது; எனவே அவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் மாற்கு தமது நற்செய்தி நூலில், இயேசு கிறிஸ்துவை அடிமை போல் கடுமையாய் உழைக்கும் ஊழியக்காரனாய் சித்தரித்து அவர் செய்த, வியாதிகளை குணமாக்குதல், பிசாசுகளை துரத்துதல் போன்ற கிரியைகளைக் குறித்தே முக்கியத்துவப்படுத்தி எழுதுகிறார். கிறிஸ்துவின் அற்புதங்களைப் போல் அவருடைய போதனைகள் இந்நூலில் பெருமளவில் இடம்பெறாததற்கு இதுவே காரணம். இதில் அடிக்கடி வரும் சொல் ''உடனே'' என்பது. அது போல், இந்நூலின் மிக முக்கியமான வசனம் ''மனுஷ குமாரன் ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாக தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்'' (மாற்கு 10 : 45) என்பது.

மாற்கு நற்செய்தி நூல் - ஓர் ஆய்வு

இந்நூலில் ஏராளமான நிகழ்ச்சிகளே கூறப்பட்டிருப்பதால் இந்நூலை பல பிரிவுகளாகப் பிரித்துப் படிப்பதற்கு இந்நூல் இடமளிக்கவில்லை. ஆயினும் இதனை ஐந்து பிரிவுகளாக நாம் பிரித்துக் காணமுயலுவோம்.

1. ஊழியரின் வருகையும் அவரை அறிவதும் (மாற்கு 1 : 1-11)

இங்கு ஊழியர் என்பது அடிமையாக வேலை செய்யும் பணியாளரைக் குறிக்கிறது. இயேசுவின் வம்ச வரலாறு, பிறப்பு,

இளமைப் பருவம் குறித்து எதுவுமே இந்நூலில் எழுதப்படவில்லை. இவை முக்கியமான நிகழ்ச்சிகளாயினும் சாதாரணமாக ஒரு அடிமையின் வாழ்க்கையில் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுவதில்லை அல்லவா?

இயேசு கிறிஸ்து யூதர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்குமே ஒரு அடிமை போல் ஊழியம் செய்ய வந்தார். ஆனால் இந்த ஊழியர் தேவனுடைய குமாரன் என்று 1ம் வசனத்தில் அழைக்கப்பட்டு 2ம் வசனத்தில் அவர் வருகையும் அறிவிக்கப் படுகிறது. பரிசுத்த ஆவியான வர் அவரை இந்த வித அடிமையான ஊழியத்திற்கு தகுதிப் படுத்துகிறார்.

இதில் நாம் படித்துக் கொள்ள வேண்டிய ஒரு பாடம் உண்டு. நாமும் தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டுமானால் முதலாவது அவ ருடைய பிள்ளையாக வேண்டும். அதன் பிறகு பரிசுத்த ஆவி யானவர் நம்மைக் குறித்து சாட்சி பகர்ந்து நம்மை அவருடைய வல்லமையால் நிறைக்க வேண்டும்.

2. உண்மையுள்ள ஊழியக்காரன் (1 : 12, 13)

அவர் பிசாசினால் சோதிக்கப்பட்ட போது அவர் காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார் என்று இந்த நற்செய்தி நூலில் மட்டுமே எழுதப்பட்டிருக்கிறது. தாவீதும் இஸ்ரவேலின் ராஜா ஆவதற்கு முன்பு காட்டு மிருகங்களோடு போரிட வேண்டியதிருந்தது (1 சாமு. 17 : 34 - 36). தாவீதும் உண்மையுள்ள ஊழியக்காரனாய் தன் ஆடுகளை சிங்கத்தின் வாய்க்கும், கரடியின் வாய்க்கும் தப்புவித்து அவற்றை மீட்டுக் கொள்வதில் கடினமாய் உழைத்தான். சோதனைக் காரனோடு போராடுவதில் தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தேவனுக்கு உண்மையுள்ள ஊழியக் காரனாய் பிசாசோடு போராடி வென்றார்.

இங்கும் ஒரு படிப்பினையை நாம் கற்றுக் கொள்கிறோம். நம்முடைய சக மனிதர்களுக்கு உண்மையாய் சேவை செய்ய வேண்டு மானால் தேவனுக்கு உண்மையாயிருந்து அவருடைய கிருபையால் பிசாசின் மேலும் மாம்சத்தின் மேலும் உலகத்தின் மேலும் வெற்றி எடுத்து நாம் ஜெய ஜீவியம் செய்யவேண்டும்.

3. ஊழியம் ஆரம்பமாகிறது (1:14 - அதி. 13 முடிய)

இப்பகுதியில் இயேசு கிறிஸ்துவின் பணிகளோடு கூட அவருடைய பண்புகளையும் அவருடைய பணியின் தன்மையையும்

குறித்து மாற்கு எழுதுகிறார்.

முதலாவது, அவர் ஞானமுள்ள ஊழியராய் இருந்தார். மற்றவர்களை ஞானமாய் தெரிந்தெடுத்து ஞானமாய் அவர்களையும் தம்மைப் போல் ஊழியம் செய்யப் பழக்கினார் (மா. 1 : 14 - 20; 2 : 13, 14; 3 : 14 - 19; 6 : 7 - 13)

இரண்டாவது அதிகாரத்தோடு பணியாற்றும் ஊழியக்காரனாயிருந்தார். அவருக்கு பிசாசுகளின் மேலும், நிலம், காற்று, கடல் ஆகியவற்றின் மேலும் அதிகாரமிருந்தது. இன்னும், மரணத்தின் மேலும் அவர் அதிகாரமுடையவராய் இருந்தார். அவர் போதிக்கும் போது அதிகாரமுடையவராய் போதித்தார் (1 : 21-28; 4 : 35-41; 5 அதி. 6 : 47 - 51; 10 : 14-29).

மூன்றாவது, அவருடைய ஊழியம் இரக்கத்தோடு கூடிய அன்பு ஊழியம். மனதுருக்கத்தின் விளைவாகவே அவர் ஜனங்களுக்கு ஊழியம் செய்தார் (1 : 29-34; 1 : 40 - 45; 5 : 41; 6 : 34; 8 : 2; 10 : 13 - 16; 10 : 21).

நான்காவது, அவருடைய ஊழியம் ஜெபத்தின் பலனாக நடந்த ஊழியம் (1 : 15; 6 : 46; 14 : 32 - 41).

ஐந்தாவது, அவருடைய ஊழியம் செயல் வீரர் ஊழியம். சுறுசுறுப்பாகவும் பலத்த கிரியைகள் நடப்பிக்கிறவருமாக ஊழியம் செய்தார். மாய்மாலமின்றி அவருடைய ஊழியம் நடந்தது (1 : 36 - 39).

ஆறாவது, இயேசுவின் ஊழியம் அனுதின ஊழியம். ஊழியம் செய்யாமல் ஒரு நாள் கூட இருக்கவில்லை. தமது சொந்த ஊரிலே அவருடைய வீட்டிலே, அவர் வசனத்தை கூடி வந்த ஜனங்களுக்கு பிரசங்கித்தார் (2 : 1-12; 15 - 22).

ஏழாவது, இயேசு கிறிஸ்துவின் ஊழியம் பாடுகளும் துக்கங்களும் நிறைந்த ஊழியம். (3 : 5; 7 : 34; 8 : 12). இறுதியில் ஊழியத்தில் மரணமும் அவருக்கு சம்பவித்தது (8 : 27 - 38).

- எட்டாவது, சுயநலமின்றி தன்னையே வெறுத்து செய்த ஊழியம் (3 : 20; 6 : 31).

ஒன்பதாவது, இயேசு தேவ ஊழியனாக எளிய முறையில் தமது ஊழியத்தைச் செய்தார். மிக உயர்ந்த தெய்வீக சத்தியங்களை மக்களுக்கு எளிமையாகப் போதித்தார் (அதி. 4; 9 : 33 - 37; 12 : 1-12, 32 ; 12:37).

பத்தாவது, மக்களால் வெறுக்கப்பட்ட தவறாகப் புரிந்து

கொள்ளப்பட்ட ஊழியம். அந்த நிலையிலும் அவர் ஊழியத்தை தொடர்ந்து செய்து கொண்டே போனார் (6: 1-6).

கடைசியாக, இயேசுவின் ஊழியம் மற்றவர்களின் ஊழியத்தைப் பாராட்டும் ஊழியம். மற்றவர்கள் ஊழியங்களைக் கவனித்து அவர்கள் சேவையைப் பாராட்டியபடி தமது ஊழியத்தைச் செய்து கொண்டே போனார் (9 : 38, 40, 12 : 41 - 44).

மேலே கூறப்பட்டவைகளிலிருந்து நாம் அறிவதென்ன? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு ஒரு முன் மாதிரியான பணிவிடைக் காரனாயிருந்தார். நாமும் அவரைப் பின்பற்றி அவரைப் போல ஊழியம் செய்ய வேண்டும்.

4. கீழ்ப்படிதலுள்ள ஊழியக்காரன் (அதி. 14, 15)

கடும் உழைப்புக்கும் பலியிடப்படுவதற்கும் ஒரு காளை ஆயத்தமாக இருக்க வேண்டும். கிறிஸ்து இரண்டையும் நேர்த்தியாய் செய்து முடித்தார். அவருடைய மரணம் மனிதர்களாகிய நமக்கு அவர் செய்த மாபெரும் சேவை. அவர் நமக்காக மரித்தார்.

குறிப்பு : 14ம் அதிகாரம் 51, 52 வசனங்களிலிருந்து கெத்சமனேயில் நடந்த யாவையும் கவனித்தபடி கெத்சமனேயில் இந்நூலாசிரியர் இயேசுவோடிருந்தார் என்பதை அறிகிறோம்.

5. உயிர்ப்பிலும், மகிமையிலும் ஊழியம் (16ம் அதிகாரம்)

அவர் உயிர்த் தெழுந்தார் அவருடைய உயிர்ப்பும் ஒரு ஊழியமாகவே இருந்தது. 7ம் வசனத்தில் தேவதூதன், உயிர்த்தெழுந்த இயேசு சீஷர்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார் என்று அறிவிக்கிறான். 20 ம் வசனத்தை பாருங்கள். அவர் இன்னமும் தமது ஊழியக்காரராகிய நம்மோடு இருப்பதை இந்த வசனத்தில் படிக்கிறோம்.

அத்தியாயம் - 5

லூக்கா நற்செய்தி நூல்

நூலாசிரியர் பற்றி

இந்த நற்செய்தி நூலை எழுதிய லூக்கா சீரியாவிலுள்ள அந்தியோகியா பட்டணத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு யூதனல்ல. அவருடைய முழுப்பெயர் 'லூக்கானஸ்'. இதனால் அவர் ஒரு கிரேக்கர் என்பது தெளிவாகிறது. லூக்கா நன்கு படித்த ஒரு மருத்துவர். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலுக்கு உடன் ஊழியராக அவர் இருந்தது பற்றி அப். 16 : 10 கூறுகிறது.

இந்நூல் எழுதப்பட்ட நோக்கம்

கிரேக்கர்கள் இயேசுவின் வரலாற்றையும் ஊழியங்களையும் பற்றி அறிந்து கொண்டு அவர்மேல் விசுவாசம் வைக்கும்படியாக இந்நூலை லூக்கா எழுதினார். இதனை அவருடைய நண்பரும் கனம் பொருந்திய வருமான தேயோப்பிலு என்பவருக்காக மிகவும் சிரத்தை எடுத்து எழுதியுள்ளார். ஜீவாதிபதியாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த தவறான பல செய்திகளும், தவறான சுவிசேஷங்களும் மக்கள் மத்தியில் பரவி வருவதைத் தடுக்கும் நோக்கத்தோடு லூக்கா இதை எழுதினார்.

மேலும் பவுலடியாரின் நண்பராக அவர்கூடவே இருந்து வந்ததால் இந்நூலில் அந்தப் பவுல் அப்போஸ்தலருடைய செய்திகளின் சாரம் மிகுதியாக ஏற்றப்பட்டிருக்கிறதாக இறையியலறிஞர் சிலர் கூறுகின்றனர்.

இந்நூலில் அடங்கிய செய்தி

இந்த நற்செய்தி நூலைக் குறித்து பலர் புகழ்ந்து வியந்து லூக்கா எழுதிய இந்நூல் அழகான ஒரு படக்காட்சிசாலை போன்றது என்கின்றனர். மற்ற நற்செய்தி நூல்களை விட இந்த நூலிலிருந்து தான் இயேசுவின் வரலாற்றை விளக்கும் எத்தனையோ படங்கள் வரையப் பட்டுள்ளனவாம். இந்நூல் கிரேக்கர்களுக்காக எழுதப்பட்டது என்பதை ஆரம்பத்தில் நாம் கூறினோம். அதற்கேற்றபடி இந்நூல் தரும் செய்தியும் அமைந்துள்ளது. இயேசு கிறிஸ்துவை ஒரு பூரண மனிதராகக் காணும் கருத்து ரோமர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் அதிக

தேவையானது. ஆனால் பூரண மனிதனைப் பற்றிய எண்ணத்தில் இந்த இரு இனத்தவரும் வேறுபட்ட கருத்துடையவர்கள். ரோமர்களுடைய கருத்தில் நல்ல செயல் வீரராக இருந்து மற்றவர்களை ஆட்சி புரியக் கூடிய திறமை உடையவர் பூரண மனிதர். ஆனால் ஞானத்தில் சிறந்து விளங்கும்படி கல்வி கற்றவரும், உயர்ந்த சிந்தனையாள ருமாயிருப்பவரை கிரேக்கர்கள் பூரண மனிதராகக் கருதுகின்றனர். இவ்வாறு, ரோமர்களின் லட்சிய புருஷர் யுத்தம் செய்வதில் சிறந்து விளங்கி ஆட்சி புரியும் திறமை கொண்டவராய் இருக்கிறார். கிரேக்கர்கள் ஞானமும் அழகும் கொண்ட மனிதரை பூரண புருஷராக மதித்து வருகின்றனர்.

இயேசுவைப் பற்றி லூக்காவின் சித்திரம்

எனவே லூக்கா கிரேக்கர்களின் பூரண மனிதர் பற்றிய சிந்தனை யைக் கருத்தில் கொண்டு இயேசு கிறிஸ்துவை தமது நூலில் ஒரு பூரண புருஷராகச் சித்தரிக்கிறார். இதற்குக் காரணம் கிரேக்கர்களுடைய மிக உயர்ந்த லட்சியங்களுக்கும் மேலான ஒரு மனிதராக இயேசு கிறிஸ்துவை அவர் கண்டார். கிறிஸ்துவின் தெய்வீகம் பற்றிப் பேசுகின்ற அதே சமயம், கிறிஸ்துவின் சிறப்பான பூரண மனிதத் தன்மையை லூக்கா அதிகம் வலியுறுத்திக் காண்பிக்கிறார். இந்த நற்செய்தி நூலில் இயேசு கிறிஸ்துவின் பூரண மனிதத் தன்மை நன்கு எடுத்துக்காண்பிக்கப் படுகிறது. அவர் தேவகுமாரனாயிருப்பது போல் மனித குமாரனாகவும் இருக்கிறார் என்பதைத் தெளிவாக இந்நூலில் காண முடிகிறது.

லூக்கா நற்செய்தி நூல் - ஓர் ஆய்வு

இதனை ஐந்து தலைப்புகளின் கீழ் நாம் காணலாம்.

1. **மனித சாயலானார்** (லூக். 1 : 3 அதிகாரங்கள்)

எபிரேயர் ***2 : 17***ல் இயேசு கிறிஸ்துவைக் குறித்து ''அன்றியும் அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக ... எவ்விதத் திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எனவே லூக்கா இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றைக் கூறும் போது மனித குலத்தின் ஆதித் தந்தையான ஆதாமிலிருந்து கணக்கிட்டு கூறுகிறார் (லூக். *3 : 23 - 38*).

மனிதர்களோடுள்ள உறவுகளில் நம்மைப் போலவே அவர் வாழ்ந்தார். தாய்க்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தார். ஒரு

தச்சராக தமது பொறுப்புகளை நிறைவேற்றினார். அவருடைய தாயின் வழியில் எலிசபெத், சகரியா என்ற உறவினர்களோடும் அவர்களின் மகன் யோவானோடும் இயேசு உறவாடினார். இன்னும் நம்மைப் போல் எல்லா நீதியையும் நிறைவேற்ற யோர்தான் ஆற்றில் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார். அவர் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டதால், பாவமில்லாத அவரைக் குறித்து யூதர்கள் குறைவாக நினைக்க இடமளித்திருந்தது.

இந்த அதிகாரங்களில் அழகான கீதங்கள் சிலவற்றைக் காண்கிறோம். இக்கீதங்களே கிறிஸ்தவ ஆராதனைக் கீதங்களுக்கு பிற்காலத்தில் வழிவகுத்தன எனலாம் *(1 : 68- 79; 46, 55; 2 : 14, 19, 32)*..

2. சோதிக்கப்பட்டார் (4 : 1-13)

நம்மைப் போலவே அவர் சோதிக்கப்பட்டார் என்பதை எபிரேயர் *4 : 15*ல் வாசிக்கிறோம்.

இயேசு கிறிஸ்து பிசாசினால் சோதிக்கப்பட்டதை, ஒரு மனிதனாகவே அவர் சோதிக்கப்பட்டதாகவும் சோதனையை ஜெயித்ததாகவும் லூக்கா எழுதுகிறார். சாத்தான் முதலாம் ஆதாமுக்கு சவால் விட்டான். ஆனால் இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவோ சாத்தானுக்கு சவால் விட்டார். சாத்தான் முதல் மனிதனைக் கெடுத்தான். ஆனால் மனித குமாரனாகிய கிறிஸ்து இயேசுவோ பிசாசின் கிரியைகளை அழித்தார். முதல் ஆதாம் மனித இனம் முழுமையும் சாத்தானிடம் தோல்வி அடையச் செய்தான். இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவோ சாத்தான் மீது தாம் கொண்ட வெற்றியை மனித குலமனைத்துக்கும் சொந்தமாக்கித் தந்தார்.

3. பலவீனங்களை உணர்ந்திருந்தார் (4:14 - 19:28)

எபிரேயர் *4 : 15*ல் நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கிறவர் என்றும், எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டு பாவமில்லாதவர் என்றும் அவரைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப லூக்கா தமது நூலில் இயேசு கிறிஸ்துவை கீழ்க்காணும் அம்சங்களில் பூரண மனிதனாகக் காண்பிக்கிறார் :

(1) ஒரு யூதனாக அல்லாமல் எல்லா மனித இனங்களிலும் அக்கரை கொண்டவர் என்பதை அவருடைய ஜீவியத்திலும் கிரியைகளிலும் காண்கிறோம் *(2 : 10, 31, 32; 17 : 18; 19:2)*.

(2) அவருடைய போதனைகளில் மகா ஞானமுள்ளவராய்க் காண்கிறோம். *(4 : 14, 15, 32)* அவரைப் போல் சிறந்த போதகர் இல்லை

(5 : 30, 39, அதி 6 , 10 : 25-37; 20 : 2 - 8).

(3) மிகவும் திறமைசாலியாய் இருந்தார் *(4 : 33 - 37; அதி. 5, 8, 9 : 37 - 43).*

(4) மனிதர்கள் மேல் இரக்கமுள்ளவர். பாவத்தில் வீழ்ந்து கிடப்பவர்கள் மீது, பிறரால் வெறுக்கப்பட்டவர்கள் மீது *(5:27 - 30; 7 : 36 - 37)* தங்களுக்கு அருமையானவர்களை சாகக் கொடுத்தவர்கள் மீது *(7 : 11; 8 : 42; 9 : 38)*, வியாதியாயிருந்தவர்கள் மீது *(4 : 38 - 41; 5: 12; அதி7)* மிகவும் அன்பு செலுத்தினார்.

(5) ஜெபவீரராக எல்லாக் கஷ்டநேரங்களிலும் பிதாவின் மேல் முற்றிலும் சார்ந்து ஜீவித்தார் *(5 : 16; 9 : 18, 29; 11 : 1, 2)*. ஒரு மனிதனாக தேவனிடம் ஜெபித்து தேவ தூதனுடைய தேற்றுதல் கிடைக்கப் பெற்றார் *(22 : 43).*

(6) எல்லோரோடும் நன்கு பழகியிருந்தார் *(7:36; 11:37; 14:1; 19:7).*

(7) அழகானவர், மகிமை நிறைந்தவர் *(9 : 28 - 36).*

4. மீட்கும் உரிமையுள்ள சகோதரர் (அதி. 19: 28 - அதி. 23)

ஒரு யூதனாக உரிமையோடு கூட தமது சொந்த பட்டணமாகிய எருசலேமுக்காய் கண்ணீர் விட்டார் *(19 : 41)* மீட்கும் உரிமையுள்ள ஓர் உறவினனாக இரத்தம் சிந்தி நம்மை மீட்டார் (லேவி. *25 : 47 - 55;* ரூத். அதி. *2; 3 : 10 - 18; 4 : 1-10).*

5. இறுதி வரை மனிதனாக இருந்தார் (அதி. 24)

அவர் உயிர்த்தெழுந்த் பின்பும் மனிதனாகக் காட்சி அளித்தார், மனிதனாக செயல் புரிந்தார். எம்மாவூருக்குப் போன இரண்டு சீஷர்களோடு நடந்து போனார். மேல் வீட்டறையில் உயிர்த்தெழுந்த பின் அப்பம் புசித்து முழு மானிடத்தன்மையைக் காண்பித்தார். வானத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் தம்முடைய கைகளை உயர்த்தி சீஷர்களை ஆசீர்வதித்தார்.

அத்தியாயம் - 6

யோவான் நற்செய்தி நூல்

நூலாசிரியர் பற்றி

யோவான் செல்வந்தரான செபதேயுவுக்கும் இயேசுவின் ஊழியத்தில் கூடவே இருந்து காணிக்கைகளால் அதைத் தாங்கி வந்த சலோமி என்ற தாயாருக்கும் (மத். 27 : 55, 56; லூக். 8 : 3) பிறந்தவர். தந்தை மீன் பிடிக்கும் தொழிலை சிறப்பாக செய்து வந்தார். அநேக வேலையாட்களை தொழிலில் சம்பளத்துக்கு அமர்த்தியிருந்தார். எருசலேமில் இவர்களுக்கு சொந்த வீடு உண்டு (யோ. 19:27).

இந்த யோவான் நல்ல சிந்தனையாளர். அதே சமயம் ஆத்திரப்படுகிறவர். கோபக்காரனும் கூட (''இடிமுழக்கத்தின் மகன்'' என்று இதனால் அவருக்குப் பெயர் உண்டாயிற்று). ஆனால் இயேசு கிறிஸ்துவின் கிருபை அவரைத் தொட்டு மாற்றிப்போட்டபோது சிங்கம் போன்றவர் ஆட்டுக்குட்டியின் சுபாவத்தைப் பெற்றுக் கொண்டார். 'அன்புக்கோர் அப்போஸ்தலன்' என்று மக்கள் அவரை அழைக்கத் தொடங்கினர். இயேசுவின் சீடர்களில் மிகவும் இளைஞர். எல்லோருடைய காலத்திற்கு பின்பும் நல்ல முதிர் வயது வரை வாழ்ந்திருந்தார்.

நூலைப் பற்றி

பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலோடு எழுதப்பட்ட எல்லா நூல்களிலும் கடைசியாக எழுதப்பட்ட நற்செய்தி நூல் இதுவே. இயேசு கிறிஸ்துவின் பரமேறுதலுக்குப் பிறகு ஐம்பது ஆண்டுகள் கழித்து இது எழுதப்பட்டது. மிகவும் ஆழமான கிறிஸ்தவ ஆவிக்குரிய சத்தியங்களைக் கொண்ட நூல். இதனை ''கிறிஸ்துவின் இதயம்'' என்று சொல்லுவார்கள். காரணம் கிறிஸ்துவின் இதயத்தையே முழுமையாய் வெளிப்படுத்தும் ஒரு நூல் இது. நித்திய கடவுளின் இருதயத்துடிப்பை இது சிறப்பாக வெளிப்படுத்துகிறது.

இந்நூல் எழுதப்பட்ட நோக்கம்

ஆதி திருச்சபைப் பிதாக்களின் கருத்துப்படி எபேசு பட்டணத்தில் வைத்து எழுதப்பட்டு, யோவானால் வெளியிடப்பட்டது இந்நூல். கிறிஸ்துவின் இறைத்தன்மை பற்றி திருச்சபையில் தோன்றிய தவறான உபதேசங்களை சரிப்படுத்த ஒரு நூலை எழுதும்படி

அந்திரேயா அப்போஸ்தலரும் ஆசியாவில் அந்நாளில் இருந்த கண்காணிகள் என்றழைக்கப்பட்ட பிஷப்புகளும் கேட்டுக் கொண்டதன்படி யோவான் இந்நூலை எழுதினார். இது நாம் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம்.

இந்த நற்செய்தி நூலில் வரும் முக்கிய வார்த்தை "விசுவாசியுங்கள்" என்பது. யோவான் இந்த நூலில், 'இயேசு கிறிஸ்து ஒவ்வொருவராலும் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒருவர்' என்ற செய்தியை வலியுறுத்துகிறார். அங்ஙனமே யோவான் எழுதிய மூன்று நிருபங்களிலும், 'இயேசு கிறிஸ்து எல்லோராலும் நேசிக்கப்பட வேண்டிய ஒருவர்' என்பதை வலியுறுத்துகிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில், 'இயேசு கிறிஸ்து வருவார் என்று நாமெல்லோரும் காத்திருக்க வேண்டிய ஒருவர்' என்று யோவான் அவரைக் குறித்து நமக்கு தெளிவாக உபதேசிக்கிறார்.

கிறிஸ்துவை எல்லோரும் விசுவாசிக்க வேண்டும் என்ற பொருளிலேயே "விசுவாசியுங்கள்" என்ற சொல் யோவானுடைய நூல்கள் அனைத்திலும் வருகிறது (யோ. 20 : 31). நாம் கிறிஸ்துவை எப்படி விசுவாசிக்க வேண்டும் என்றால் 'மனிதனாக வந்த கடவுள்' என்று அவரை நாம் விசுவாசிக்க வேண்டும்.

இரு நூதனமான காரியங்கள்

இந்த நற்செய்தி நூல்களில் 'யூதன்' என்ற சொல் அடிக்கடி வருவது ஒரு நூதனமான காரியம். மத்தேயு நற்செய்தி நூலில் இச்சொல் ஒரே ஒரு முறைதான் வருகிறது. லூக்காவில் அது இரண்டு முறை வருகிறது. ஆனால் இந்த யோவான் நற்செய்தி நூலில் அறுபது தடவை வருகிறது.

இன்னுமொரு நூதனமான விஷயம் என்னவென்றால், இந்நூலில் கூறப்பட்டுள்ள எட்டு அற்புதங்களும் (சரியாகச் சொன்னால் அவை 'அடையாளங்கள்') கிறிஸ்துவின் வார்த்தையில் உள்ள வல்லமையைக் காண்பிக்கின்றன. அது மட்டுமல்ல கிறிஸ்துவின் வார்த்தை ஒன்றே வல்லமையுள்ளது என்று கூறுகிறது.

இயேசுவைப் பற்றிய யோவானின் சித்திரம்

யோவான் அப்போஸ்தலர் இயேசுவை "பிதாவினுடைய ஒரே பேறான குமாரன்" என்றே நமக்கு சித்தரித்துக் காண்பிக்கிறார். எல்லா இனமக்களுக்கும் – ஆண் பெண், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்தியாசமின்றி அனைவருக்கும் – இயேசுவைப் பற்றிய, 'அவர் கடவுள்' என்ற உண்மை அவர்களை மிகவும் கவர்ந்து விட்டது,

என்று யோவான் இந்நூலில் அதிகமாய் சுட்டிக்காண்பிக்கிறார். இங்கு அவர் பயன்படுத்தும் சத்தியங்கள் அனைத்தும் புத்தம்புதிய கருத்துக்களாய் கடவுள் நமக்காக வைத்திருந்த மறைவான பொக்கிஷம் போல் உள்ளன.

யோவான் நற்செய்தி நூல் - ஓர் ஆய்வு

1. ஆதி முதல் தேவகுமாரன் (1 : 1-14)

கிறிஸ்துவின் மனித அவதாரம் அவர் தேவகுமாரன் என்ற நிலையை குறைக்க முடியாது. ஆதிமுதல் தேவகுமாரனாயிருந்தவர் இயேசு கிறிஸ்து. தேவ குமாரனாகும்படி பிதா இவ்வுலகில் அவரை அனுப்பவில்லை. என்றென்றைக்கும் உள்ள தேவகுமாரன் அவர். ஆதியாகமம் ஆதியிலே தேவன் என்று ஆரம்பிப்பது போல் யோவான் நற்செய்தி நூலும், ''ஆதியிலே வார்த்தையிருந்தது'' என்று தொடங்கு கிறது. கடவுளை 'வார்த்தை' என்று சொல்வது புறஜாதிகளுக்கும் பழக்கமாக இருப்பதால், யோவான் தமது நற்செய்தி நூலில் **வார்த்தை** என்று கடவுளைக் குறிப்பிடுகிறார். இதை அவர்கள் எளிதாகப் புரிந்து கொள்வார்கள். ஆதியிலே வார்த்தையாக இருந்தார் என்பது, சிருஷ்டிக்கப்பட்ட யாவுக்கும் முந்தினவராக தேவகுமாரனாகிய கிறிஸ்து இருந்தார் என்று பொருள் படுகிறது. எனவே இயேசு கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல. அவரே சிருஷ்டிகர். ''அந்த வார்த்தை தேவனோடி ருந்தது'' என்பது தேவகுமாரன் திரித்துவத்தில் இன்னொரு ஆள்தத்துவம் என்பது தெளிவாகிறது.

2. இயேசு தேவ குமாரனாக வெளிப்பட்டார் (1 : 15 - அதி. 12)

இப்பகுதியில் யோவான் ஜனங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை சுட்டிக் காண்பிக்கிறார். கிறிஸ்து தம்மை தேவகுமாரன் என்று வெளிப்படுத்தினதோடு, மற்றவர்களும் அவருடைய இறைத்தன்மையை கண்டு கொண்டனர்.

யோவான் ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்த போது பரிசுத்த ஆவி யானவர் புறாரூபத்தில் இயேசுவின் மேல் இறங்கினவுடன் அவருடைய தெய்வீகத் தன்மையை யோவான் ஸ்நானகன் கண்டு கொண்டான் *(1 : 33)*. நத்தானியேல் அவருடைய சர்வ ஞானத்தைக் கண்டு, இயேசு தேவகுமாரன் என்பதை அறிந்து கொண்டான் *(1 : 48, 49)*. கானாவூரில் நடந்த முதல் அற்புதத்தைக் கண்ட மாத்திரத்தில் இயேசுவை தேவகுமாரன் என்று அவருடைய சீஷர்கள் அறிந்து விசுவாசித்தனர் *(2 :11)* தேவாலயத்திலிருந்த வியாபாரிகளை விரட்டியடித்து அவைச்

சுத்திகரித்த போது அநேக யூதர்கள் அவரை தேவ குமாரன் என்று அறிந்து கொண்டனர் (2 : 23). நிக்கோதேமுவுக்கு இயேசுவே தம்மை தேவகுமாரன் என்று வெளிப்படுத்தினார் (யோ. 3 : 13 - 16). யோவான்ஸ்நானகனும் இயேசு தேவகுமாரன் என்று நான்கு வகையில் சாட்சி கொடுத்தார் (யோ. 3 : 25 - 36). சமாரியப் பெண்ணின் ஊராரும் அவர் தேவ குமாரன் என்று ஏற்றுக் கொண்டனர் (4 : 41, 42). இயேசுவைப் போலவே அவருடைய வார்த்தையும் வல்லமை யுடையது என்பதையும், அந்த வார்த்தையில் தேவன் இருக்கிறார் என்பதையும், தன் மகன் குணமாவவுடன் ராஜாவின் மனுஷன் கண்டுபிடித்து விட்டான் (4 : 53).

கடவுளை தமது பிதா என்று இயேசு கூறினவுடன் அவருக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், ஐந்தப்பம் கொண்டு 5000 பேரை போஷித்த போது (6 : 14) அநேகர் அவரை மேசியா என்று ஏற்றுக் கொண்டனர். பழைய ஏற்பாட்டில் தேவன் "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்று குறிப்பிடுவது போல் 'ஜீவ அப்பமாக இருக்கிறேன்' (6:35), 'உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன்' (8:12), 'ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நான் இருக்கிறேன் (8:58) என்று கூறினதெல்லாம் தம்மை தேவகுமாரனாக, தேவனாக அவர் வெளிப்படுத்துவதாகும் (6 : 35; 8 : 12, 58). பிறவிக்குருடனிடம் தம்மை கடவுள் என்று வெளிப்படுத்தினார். மார்த்தாள் இயேசுவை தேவகுமாரன் என்று சாட்சியிட்டதும், லாசருவை அவர் எழுப்பின காரியமும் அநேக யூதர்களை இயேசு தேவகுமாரன் என்று நம்பச் செய்தது. இறுதியாக, இயேசு கிறிஸ்துவை கடவுள் என்று யூதர்களும் புறஜாதிகளும் ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர் (12 : 12 - 19).

3. தேவகுமாரன் என்பதை நமக்கு சொந்தமானவர்களிடம் வெளிப்படுத்தினார் (13 - 17 அதி)

11ம் அதிகாரம் 43ம் வசனம் தொடங்கி பிரதான ஆசாரியரும், பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டி இயேசு கிறிஸ்துவைக் கொன்று போடத் திட்டமிட்டனர். 54ம் வசனத்தில், அதன் பிறகு இயேசு வெளியரங்கமாய் யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்யாமல் எப்ராயீம் என்ற ஊருக்குப் போய் சீஷர்களுடனே அங்கு தங்கியிருந்தார் என்று வாசிக்கிறோம். அது முதல் அவர் தம்மை வெளிப்படையாய் உலகுக்கு காண்பியாமல், தம்முடைய சீஷர்களுக்கு மட்டும் முழுமையாய்த் தம்மை வெளிப்படுத்த ஆரம்பித்தார். 13ம் அதிகாரம் முதல் 17ம் அதிகாரம்வரை தம்முடைய தெய்வீகத்தையும், தாம் தேவ

குமாரன் என்பதையும் பிதாவோடு தாம் ஒன்றாயிருப்பதையும் வெளிப்படுத்தி வந்தார். இதனால் இயேசு தேவகுமாரன், தேவனுக்கு சமமாயிருப்பவர் என்ற சீடர்களின் விசுவாசம் நன்கு உறுதிப்படுத்தப் பட்டது.

4. தேவகுமாரன் சிலுவையில் அறையப்பட்டார் (18, 19 அதிகாரங்கள்)

இந்த இரு அதிகாரங்களும் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டு மரித்த சம்பவங்களைக் கூறுகின்றன. 18ம் அதிகாரம் 6ம் வசனம் அவர் தெய்வீகத் தன்மையை நன்கு எடுத்துக் காண்பிக்கிறது. 19ம் அதிகாரம் 7ம் வசனத்தைப் படிக்கும் போது தம்மை யூதருக்கு ராஜா என்று கூறினதற்காக மட்டுமல்லாமல் தம்மை கடவுளுக்கு சமமாக்கின தற்காகவே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள் என்று அறிய வருகிறோம்.

5. உயிர்த்தெழுதல் இறைத்தன்மைக்கு நிரூபணம் (20, 21 அதிகாரங்கள்)

அப்போஸ்தலர் பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தின் முதல் அதிகாரம் 4ம் வசனத்தில், இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் அவர் தேவனுடைய குமாரன் என்று பலமாய் நிரூபிக்கப்பட்டதாக எழுதுகிறார். அவர் உயிர்த்தெழுந்ததை விட அவர் தேவனுடைய குமாரன் என்பதற்கு வேறு நிரூபணம் அவசியமில்லை.

இவ்வாறு யோவான் அப்போஸ்தலன் தனது நற்செய்தி நூலில் இயேசுவை தேவகுமாரன் என்று அறிவித்து அவரே கடவுள் என்பதை வலியுறுத்தி மக்களுக்குப் போதிக்கிறார்.

அத்தியாயம் - 7

அப்போஸ்தலர் நடபடிகள்

முகவுரை

இந்த புத்தகத்தையும் லூக்காவே எழுதியதால் நூலாசிரியரைப் பற்றி கூற அவசியமில்லாமற்போயிற்று. அவருடைய நற்செய்தி நூலைப் படிக்கும் போது இயேசு கிறிஸ்துவைப் பற்றி சில காரியங் களை அறிந்து கொண்டோம். இனி ''அப்போஸ்தலர் நடபடிகள்'' என்ற இந்த நூலை படித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றி மேலும் சில விஷயங்களை அறிந்து கொள்வோம்.

நூலின் தலைப்பு

இந்நூலில் கிறிஸ்து பரமேறிச் சென்ற பிறகு, அப்போஸ்தலர்களின் காரியங்கள் குறித்து லூக்கா எழுதியுள்ளார். குறிப்பாக, பேதுரு அப்போஸ்தலரின் ஊழியம் குறித்தும், பவுல் அப்போஸ்தலனுடைய ஊழியம் குறித்தும் நிறைய செய்திகளை லூக்கா எழுதியுள்ளார். எனவே அப்போஸ்தலர் நடபடிகள் என்ற பெயர் இந்நூலுக்கு சூட்டப்பட்டது. ஆனால் இப்பெயர் அவ்வளவு பொருத்தமா என்று இறையியலார் சிலர் எண்ணுகின்றனர். ஆதி திருச்சபையில் இதனை 'பரிசுத்த ஆவியானவரின் நற்செய்தி நூல்' என்றும் 'உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் நற்செய்தி நூல்' என்றும் அழைத்துள்ளனர். ஆனாலும் 'பரமேறிச் சென்று மகிமையடைந்த ஆண்டவரின் நடபடிகள்' என்று இதனை அழைப்பது தான் மிகப் பொருத்தமாயிருக்கும் என்கின்றனர் சிலர்.

இதில் அடங்கியுள்ள விஷயங்கள்

இந்த நூலில் அடங்கியுள்ள முக்கிய செய்தி, முதலாம் அதிகாரம் 8ம் வசனத்தில் காணப்படுகிறது. ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தம் எனக்கு சாட்சிகளா யிருப்பீர்கள்'' நற்செய்தி நூல்கள் மாம்சத்தில் வாழ்ந்த இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை அம்சங்கள், கிரியைகள், உபதேசங்கள், பற்றிக் கூறும் போது, நடபடிகள் நூல் உயிர்த்தெழுந்த கிறிஸ்து பரிசுத்த ஆவியாக தொடர்ந்து செயல்பட்டதைக் குறித்தே மீண்டும் நமக்குப் போதிக்கின்றது எனலாம்.

ஆம், லூக்கா தனது சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து செய்து வந்தவைகளையும் போதித்து வந்தவைகளையும் நமக்கு எழுதி வைத்தார். தொடர்ந்து அவர் எழுதிய இந்த அப்போஸ்தலர் நடபடிகளில் இயேசு கிறிஸ்து ஆவியானவர் மூலம் தொடர்ந்து செயல்படுவதையும் முடிவு பரியந்தம் செயல்பட்டுக் கொண்டே இருக்கப் போவதையும் தெளிவாக எழுதுகிறார்.

நூலினைப் பற்றி சில விசேட குறிப்புகள்

1. முற்றுப் பெறாத நூல்

வேதாகமத்தில் முற்றுப் பெறாமல் அரைகுறையாக முடிக்கப்பட்ட ஒரே நூல் இதுவே. பவுல் யூதர்களால் குற்றஞ்சாட்டப்பட்டு இறுதி விசாரணைக்காக ரோமபுரி வந்து சேர்ந்தபோது ஒரு போர்ச் சேவகனுடைய காவலில் ஒரு வீட்டில் தனித்துக் குடியிருந்தார் *(28 :16)*. ரோமாபுரியிலுள்ள யூதர்களிடம் தான் நிரபராதி என்று எடுத்துரைத்தபின்பு ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி இரண்டு ஆண்டுகள் அதில் கிறிஸ்துவைப் பற்றி யூதர்களுக்கும் ரோமர்களுக்கும் போதித்துக் கொண்டிருந்த அளவில் இந்நூல் தொடர்ந்து எழுதப்படாமல் திடீரென்று லூக்காவால் முடிக்கப்பட்டது. வேறு ஒரு கோணத்தில் பார்க்கும் போது லூக்கா இந்நூலை முடித்திருக்க முடியாது தான் என்று எண்ணத் தோன்றுகிறது. ஒருவர் தொடர்ந்து ஜீவித்துக் கொண்டும் ஊழியம் செய்து கொண்டும் இருக்கும் போது அவரைப் பற்றி எழுதுவதை எப்படி நிறுத்துவது?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரமேறிச் சென்ற பிறகும் இந்தப் பூமியில் தூய ஆவியானவரின் மூலம் தமது ஊழியக் காரரைப் பயன்படுத்தி தொடர்ந்து கிரியை செய்து கொண்டிருக்கும் போது இந்த நூலை முற்றுப் பெறச் செய்வது முடியாத ஒரு காரியமே! எனவே ஏதாவது ஒரு இடத்தில் லூக்கா அந்த நூலை முடிக்க வேண்டியதாயிற்று.

2. ஒழுங்கும் கிரமமாக எழுதப்பட்ட நூல்

முடிக்கப்படாத ஒரு நூலாயினும் இதில் ஒழுங்கான அமைப்பும், காரியங்களை ஒரு சீராகச் சொல்லி வரும் பாங்கினையும் நாம் காண்கிறோம். முதல் அதிகாரம் 8ம் வசனம் இந்நூலின் முக்கிய செய்தியைத் தருகிறது. முழுப் புத்தகமும் இந்த வசனத்தின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறதாக உள்ளது. எருசலேமில் தேவ திட்டத்தின்படி உபத்திரவங்கள் மத்தியில் ஒழுங்காகத் தொடங்கப்பட்ட கிறிஸ்துவின்

நற்செய்தியை அறிவிக்கும் இந்த ஊழியம், எருசலேமோடு நின்று விடாமல் ''யூதேயாவிலும் சமாரியாவிலும்'' ஒரே சீராகத் தொடர்ந்து ''பூமியின் கடைசி பரியந்தம்'' சென்றடைந்தது என்றறிகிறோம்.

3. ஆவியானவரின் வல்லமைக்கு சான்று பகரும் நூல்

இந்த நூலின் ஆரம்பத்தில் பேதுருவும் மற்ற சீடர்களும் எருசலேம் பட்டணத்தில் நற்செய்தியை அறிவித்து எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை பிரஸ்தாபம் பண்ணி எருசலேமை இயேசுவின் நற்செய்திப் போதனைகளால் நிறைந்து விட்டனர். இதற்காக அவர்கள் அடிபடவும் அவமானப்படவும் தகுதியானதில் நிறைவான மகிழ்ச்சி அடைந்தார்கள். எருசலேம் அந்நாட்களில் யூத மதத்தின் தலைமைப் பீடமாக இருந்தது. ரோமப் பட்டணம் உலகின் பல பகுதிகளிலுள்ள ரோமப் பேரரசின் தலைநகராக இருந்தது. எனவே எருசலேம் முதல் ரோமாபுரி வரை நற்செய்தி அறிவிக்கப்பட்ட காரியம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான செயலேயன்றி அது மனிதர்களின் சாதனையல்ல.

இப்படி இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி பெரிதான அளவில் எத்திக்கும் பரவிச் சென்றபோது பரிசுத்த ஆவியானவரின் நிறைவான அபிஷேகம் மக்கள் மீது ஊற்றப்பட்டது. அதே சமயம் நற்செய்தியை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மீதும் எதிர்ப்பவர்கள் மீதும் ஆக்கினையும் வந்து கொண்டிருந்தது.

அப்போஸ்தலர் நடபடிகள் - ஓர் ஆய்வு

இந்நூலின் செய்திகளை தெளிவாக அறிந்து கொள்ள இதனை மூன்று பகுதிகளாக நாம் பிரித்துப் படிக்கவேண்டும்.

1. எருசலேமில் ஆவியானவரின் நற்செய்திப்பணி (1-7 அதி)

இப்பகுதியில் பெந்தெகோஸ்தே நாள் முதல் இரத்த சாட்சியாக ஸ்தேவான் மரித்தது வரையுள்ள ஆவியானவரின் நடபடிகள், அப்போஸ்தலருடைய ஊழியங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. 2ம் அதிகாரம் 1ம் வசனத்தில் எருசேலேம் பட்டணத்தில் 120 சீஷர்கள் மீது மேல் வீட்டறையில் ஆவியானவரின் அபிஷேகம் ஊற்றப்பட்டது முதல், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மக்கள் பெறக்கூடிய பாவமன்னிப்பின் நற்செய்தியை பேதுரு கூறி அறிவிக்கும் ஊழியம் வெற்றிகரமாய் நடைபெற்ற சம்பவம் கூறப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கீழ்க்காணும் முக்கிய சம்பவங்கள் அடங்கியுள்ளன:

முதல் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து பரமேறிச் சென்ற சம்பவம் *(1 : 1-11)*. இதில் கண்களுக்கு மறைவாக அவர் சீஷர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டாரே யன்றி சீஷர்களுடைய மனதை விட்டு ஒரு போதும் எடுபட்டுப் போகவில்லை. பரிசுத்த ஆவியானவரின் கிரியையால் இப்பொழுது இயேசு அவர்களுடைய உள்ளங்களில் நிறைந்து விட்டார். அதோடு கூட 120 சீஷர்கள் மேல் வீட்டறையில் கூடி பரிசுத்த ஆவியின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்ததை 12 , 13, 14 வசனங்களில் காண்கிறோம். அடுத்து, யூதாஸ் காரியோத் இழந்து போன அப்போஸ்தல ஊழியத்திற்கு மத்தியா நியமிக்கப் பட்டார் *(15 - 26)*.

இரண்டாம் அதிகாரத்தில், பெந்தேகோஸ்தே நாளில் மேல்வீட்டறையில் பரிசுத்த ஆவியைப் பெறக் கூடியிருந்த 120 பேர் மீதும் அக்கினிமயமான நாவுகளோடு தூய ஆவியானவர் வந்தமர்ந்தார் (திருச்சபை அன்று தான் பிறந்தது). பேதுரு பன்னிருவரோடு எழுந்து நின்று உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் பிரசங்கித்தபோது ஐயாயிரம் பேர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் திருச்சபை வேகமாக வளரத் தொடங்கிற்று.

மூன்றாம் அதிகாரத்தில் பேதுருவும் யோவானும் பிறவிச் சப்பாணியை இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கப் பண்ணின அற்புதம் நடந்தது. அதைத் தொடர்ந்து பிரச்சினைகளும் அந்த நாமத்தை அறிவிக்கத் தடைகளும் வந்தன.

நான்காம் அதிகாரத்தில் மகா பெரிய உபத்திரவம் திருச்சபைக்கு வந்ததை அறிகிறோம். ஐந்தாம் அதிகாரத்தில் அனனியா சப்பீராள் தம்பதிகள் பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொன்னதினால் பேதுருவின் வார்த்தையின்படியே செத்து விழுந்தார்கள் (அப். 5: 1-12). ஆறாம் அதிகாரத்தில் பந்தி விசாரணை செய்ய 7 மூப்பர்கள் நியமனம் செய்யப்பட்டனர். *(1 - 6)* ஏழாம் அதிகாரத்தில் ஸ்தேவான் இரத்த சாட்சியாய் மரித்த துயர சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது.

2. யூதேயாவிலும் சமாரியாவிலும் ஆவியானவரின் நற்செய்திப் பணி (8 - 9 அதி)

இந்த இரண்டு அதிகாரங்களில் சபை உபத்திரவத்திற்குள்ளாகி சிதறடிக்கப்பட்ட சம்பவங்களும் *(8 : 1 - 3)* பிலிப்பு சமாரியாவில்

அற்புதங்களோடும் அடையாளங்களோடும் பிரசங்கித்ததும் சொல்லப் பட்டுள்ளது *(8 : 4 - 8)*. சீமோன் மாகு என்பவன் பேதுருவிடம் பணத்தினால் தேவனுடைய வரங்களை விலைக்கு வாங்க வந்த சம்பவம் *(8 : 18 - 24)* காணப்படுகிறது. 25 முதல் 42 வரையுள்ள வசனங்களில் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்த சம்பவம் வருகிறது.

9ம் அதிகாரத்தில் சவுல் சபையைத் துன்பப் படுத்திய காரியங்களும், இதற்காக தமஸ்குவுக்கு அவன் போகும் வழியில் இயேசுவால் சந்திக்கப் பட்டு மனம் மாற்றப்பட்ட சம்பவமும் விவரிக்கப் பட்டுள்ளது *(9 : 1-19)*.

3. பூமியின் கடைசி பரியந்தம் ஆவியானவரின் நற்செய்திப் பணி (10 - 28 அதி).

இப்பகுதியில் பவுலின் ஊழியம் வல்லமையாய் நடைபெற்றதையும் கடைசியாக ரோமப் பட்டணத்தில் சிறைவைக்கப்பட்டதையும் முக்கியமான காரியங்களாகக் காண்கிறோம். இப்பகுதியின் ஆரம்பத்தில் பரிசுத்த ஆவி மக்கள் மேல் ஊற்றப் பட்டதையும், *(10:44-48)* பர்யேசு என்ற மாயவித்தைக்காரனாகிய எலிமா பவுலை எதிர்த்ததையும், அதன் காரணமாக பவுலால் சபிக்கப்பட்டு பட்டப்பகலில் குருடாகி தடவித் திரிந்ததையும் முக்கிய சம்பவங்களாகப் படிக்கிறோம் *(13:6 -10)*.

10ம் அதிகாரம் முழுமையிலும் கொர்நேலியு தேவதரிசனங் கண்டு அவன் வீட்டாரோடும், உறவினர்கள் நண்பர்களோடும் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு இயேசுவை ஏற்றுக் கொண்டு, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டதையும் ஞானஸ்நானம் பெற்றதையும் குறித்துப் படிக்கிறோம். அந்தியோகியாவில் உள்ள சபையின் காரியங்கள் *11 : 19 - 30* வரையுள்ள வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. 12ம் அதிகாரத்தில் பேதுரு சிறையிலிருந்து தேவதூதனால் விடுவிக்கப் பட்டதைப் படிக்கிறோம். அடுத்து பவுல் மேற்கொண்ட மூன்று மிஷனெரிப் பயணங்களையும் குறித்து 13ம் அதிகாரம் தொடங்கி 21ம் அதிகாரம் 17ம் வசனம் வரையுள்ள பகுதியில் படிக்கிறோம். 18ம் அதிகாரம் முதல் இந்நூலின் கடைசி அதிகாரம் வரை பவுலடியார் ஒரு வீட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த காரியமும், அவரிடம் வருவோரை எல்லாம் கூட்டி வைத்து அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைப் பிரசங்கித்து வந்த விஷயங்கள் யாவும் கூறப்பட்டுள்ளது.

நடிபடிகள் நூலில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம்

இந்நூலில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து, அவர் தொடர்ந்து பரிசுத்த ஆவியின் மூலம் தமது ஜனத்தை தலைமை தாங்கி நடத்தி வருவதாகவும், அவர்களுக்கு கட்டளைகளைக் கொடுப்பவராகவும் (1 : 2 - 9) லூக்கா எழுதுகிறார். மேலும் திருச்சபையின் ஒரே பெரிய நம்பிக்கையாக அவர் இருந்து வருவதையும் (1 : 10 - 11), சபைக் காரியங்களில் குழப்பமான சூழ்நிலையில் தமது ஜனத்திற்கு வழிகாட்டி வருபவராகவும் (1 : 24; 10 : 13 - 16; அதி. 22 : 18 - 21), பரிசுத்தாவியை சபையின் மீது ஊற்றுபவராகவும் (2 : 33) லூக்கா சித்தரிக்கிறார். அப்போஸ்தலர்கள் மற்றும் சுவிசேஷகர்கள் நிகழ்த்திய எல்லாப் பிரசங்கங்களிலும் அவரே கருப்பொருளாகவும் (2 : 22 - 36; 3 : 13 - 15; 4 : 10 - 33; 4 : 10 - 33; 5 : 30; 6; 14; 8 : 5 - 35; 10 : 36), திருச்சபைகளில் அனுதினமும் மக்களைக் கொண்டு வந்து சேர்ப்பவராகவும் (2 : 47), அழிந்து போகும் மனிதர்களின் ஒரே நம்பிக்கையாகவும் (4 : 12), தேவ மனிதர்கள் நடப்பிக்கும் வேலைகளில் உடனிருப்பவராகவும் (3: 16; 26; 18 : 9, 10) லூக்கா காண்பிக்கிறார். சவுலின் மனமாற்றத்தில் தனி நபராக அவனைச் சந்தித்து அவனை தலைகீழாய் மாற்றி, தம்மைப் பிரசங்கிக்கச் செய்தவராகவும் (9 : 3 - 6), உபத்திரவப்படும் தமது பிள்ளைகளுக்கு ஆறுதல் அளிப்பவராகவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அப்போஸ்தலர் நடபடிகளில் லூக்கா நமக்கு அருமையாகச் சித்தரித்துக் கொண்டே போகிறார்.

எனவே, திருச்சபை சரித்திரத்தின் ஆரம்பம் முதல் உள்ள காரியங்களை விவரித்துச் சொல்லும் இந்த திருச்சபை வரலாற்றின் முதல் நூலானது, மிகவும் பயனுள்ள நூலாக இருப்பதை நம்மால் காண முடிகிறது. திருச்சபையின் நாயகராம் இயேசு கிறிஸ்துவே அதை அனுதினமும் போஷித்து, பராமரித்து, வழி காட்டி, அற்புதமாக இந்நாள் வரை உலகளாவிய அளவில் அதை நடத்தி வருகிறார் என்பது நம்மை வியப்புக்குள் ஆழ்த்துகிறது.

அத்தியாயம் - 8

ரோமர் நிருபம்

இந்நூலினைப் பற்றி

பவுலுடைய நிருபங்களைக் குறித்துப் பேசும்போது ரோமர் நிருபம் மற்ற எல்லா நிருபங்களையும் விட மிகச் சிறப்பு வாய்ந்தது என்று பலரும் கூறுவதுண்டு. எந்தக் கோணத்தில் பார்த்தாலும் அதனுடைய சிறப்பு தெரிய வரும். விசுவாச ஜீவியக் கண்ணோட்டத்திலும் சரி, இறையியல் நோக்கிலும் சரி, மிகப் பெரிய கிறிஸ்தவ தலைவர்களின் கருத்து, ரோமர் நிருபம் என்ற ஈடு இணையில்லா ஒரு பொக்கிஷத்தை திருச்சபைக்கு பவுலடியார் தந்திருக்கிறார் என்பதே. திருச்சபைப் பிதாக்களில் ஒருவரான க்ரைசோஸ்தோம், வாரந்தோறும் இருமுறை இக்கடிதத்தைப் படிக்கச் சொல்லி கவனமாய் கேட்டு, வசனங்களை மனதில் பதிய வைப்பாராம். கால்வின் என்ற இறையியலறிஞர், எல்லா வேத வாக்கியங்களையும் வியாக்கியானங்களையும் அறிந்து கொள்ள ரோமர் நிருபம் ஒரு திறவுகோல் போல் பயன்படுகிறது என்கின்றார். மார்ட்டின் லூதர் இந்நிருபத்தை புதிய ஏற்பாட்டின் மையக்கருத்து நூல் என்றும், இதில் கலப்பில்லாத சுத்த சுவிசேஷம் அடங்கியுள்ளது என்றும் கருத்துத் தெரிவிக்கிறார். இப்படிப் பலரும் புகழும் இந்த நிருபம், கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ஓர் அழகிய கோபுரம் கட்டுவது போல் அமைந்திருக்கிறது என்கின்றார் மற்றோர் இறையியல் அறிஞர்.

ரோமாபுரி பட்டணத்தில் கிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களுக்கு இந்த நிருபத்தை பவுலடியார் எழுதினார். கொரிந்து பட்டணத்தில், காயு (16 : 23) என்ற கொரிந்திய விசுவாசியினுடைய இல்லத்தில் வைத்து கி.பி. 58ம் ஆண்டில் இதை எழுதினார்.

நூல் எழுதப்பட்ட நோக்கம்

யோபு தனது நூலில் ''மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாவது எப்படி?'' என்று ஒரு கேள்வி கேட்டார் (9 : 2). இக்கேள்வி எக்காலத்திலும் மனிதர்கள் கேட்கும் ஒரு கேள்வி. ஒருவனை கடவுள் எவ்வாறு நீதிமானாக்குகிறார் என்பதை விளக்கிப் போதிப்பதே இந்நூலின் நோக்கம். இந்நூலில் கீழ்க்காணும் வசனங்கள் முக்கிய வசனங்களாக கருதப்படுகின்றன.

''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன். முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்புண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது'' *(ரோ. 1 : 16).*

''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிற படி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப் படுகிறது'' *(ரோ. 1 : 17).*

இந்த இரு வசனங்களும் பிரசங்க வாக்கியங்கள் போல் இருக்கின்றன என்றும், மொத்த நிருபமும் இவ்வசனங்களின் அடிப்படையில் செய்யப்படுகின்ற ஒரு நீண்ட பிரசங்கம் போல் எழுதப்பட்டிருக்கிறது என்றும் கூறலாம்.

ரோமர் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை கிறிஸ்தவ உபதேச சத்தியங்கள் (Doctrines) அடங்கிய பகுதி என்றும், விசுவாசிகள் கைக்கொள்ள வேண்டிய கடமைகள் (Practical Duties) அடங்கிய பகுதி என்றும், இரு பிரிவுகளாகப் பிரித்து படிக்கலாம்.

I. கிறிஸ்தவ உபதேசங்கள் (1 - 11 அதிகாரங்கள்)

இப்பகுதியில் வரும் கிறிஸ்தவ உபதேசங்களை கீழ்க்காணும் தலைப்புகளில் பகுத்துக் காணலாம்.

1. சுவிசேஷத்தின் மூலம் வெளிப்படும் விசுவாசத்தினால் உண்டாகும் நீதி (ரோ. 1 : 1-17).

நிருபத்தின் ஆரம்பத்தில் ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்துதல் கூறி விட்டு, புவலடியார் அவர்களைக் காண வாஞ்சையாயிப்பதை அவர்களிடம் தெரிவிக்கிறார். அவருடைய இந்த வாஞ்சைக்கான மூன்று காரணங்களைத் தருகிறார். முதலாவது ஆத்துமாக்களைக் குறித்த அவருடைய பாரம், இரண்டாவது, ரோமப் பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க அவர் விரும்புகிறார். மூன்றாவது, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவர் கடனாளியா யிருக்கிறார்.

அடுத்து இப்பகுதியில் அனுதினமும் அவர் பிரசங்கிக்கும் நற்செய்தியின் மூலம், தேவனுடைய நீதி மக்களுக்கு கிடைப்பதற்கான கடவுளின் வழியை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். பாவியை நீதிமானாக்கும் கடவுளின் வழி இதுவே என்று இங்கு அவர் திட்டமாய்

போதிக்கிறார். இதனால் தான் 16ம் 17ம் வசனங்கள் இந்த நூலின் முக்கிய வசனங்களாக விளங்குகின்றன.

2. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் அனைவருக்கும் தேவையான சத்தியம் (1 : 18 - 3 : 20).

இப்பகுதியில் பாவியை நீதிமானாக்கும் தேவனுடைய கிருபை மனிதர்கள் அனைவருக்கும் முழுக்க முழுக்கத் தேவை என்று பவுலடியார் காண்பிக்கிறார். முதலாம் அதிகாரம் 18 - 32 வசனங்களில், தேவனை அறியாத மக்கள் தேவனை விட்டு வெகு தூரம் போய் தேவனுக்கு அந்நியராகி விட்டனர் என்பதையும், அதனால் அவர்களுக்கு உண்டாக இருக்கும் பயங்கரமான விளைவுகளையும் முதலாவது சுட்டிக் காண்பிக்கிறார். அதன்பிறகு 2ம் அதிகாரத்தில், யூதனுக்கும் அதே தேவ கிருபை தேவைப்படுகிறது என்பதை நிரூபித்துக் காண்பிக்கிறார். ஆனால், தங்களைப் பாவிகள் என்று உணர்ந்து, தேவ நீதியை அடைய தங்களால் ஒன்றும் செய்ய இயலாது, என்று ஒப்புக் கொள்பவர்களுக்கே தேவகிருபை கிடைக்கிறது.

3. எப்படி நீதிமான்களாக்கப்படுகிறோம்? (3 : 21 - 31)

இதுவரை நாம் பார்த்தது போல் நீதிமானாக்கப்படுவது என்பதன் ஊற்று தேவ கிருபையே. 21ம் வசனம் இதை தெளிவு படுத்துகிறது. நீதிமானாக்கப் படுவதற்கு ஆதாரம் இயேசு கிறிஸ்துவின் சிந்தப் பட்ட இரத்தமே *(3 : 25; 5 : 9)*. ஆனால், தேவநீதி வருவதற்கான வாய்க்கால் நம்முடைய விசுவாசமே *(3 : 28, 26, 22)*. நீதிமானாக்கப் படுதலை நிரூபிக்கவே இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் *(4 : 25)*. நீதிமானாக்கப்பட்டதற்கு அத்தாட்சி நீதிமானாக்கப்பட்டவர்கள் நடப்பிக்கும் நற்கிரியைகளே *(யாக். 2 : 14 - 20)*. 23ம் வசனம் எல்லோரும் ஒரே விதமான பாவிகள் அல்ல என்றாலும் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தோம் என்ற உண்மையைப் புலப்படுத்துகிறது.

4. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் ஒரு புதிய சத்தியமல்ல (அதி. 4).

இது புதிய ஏற்பாட்டில் மாத்திரம் சொல்லப்பட்ட ஒரு புதிய சத்தியமல்ல. பழைய ஏற்பாட்டு காலத்திலும் ஆபிரகாம் விசுவாசத்தி னால் நீதிமானாக்கப்பட்டதை இந்த அதிகாரம் நமக்கு நினைப் பூட்டுகிறது. அதோடு, தாவீது 32ம் சங்கீதத்தில் சொல்லியிருக்கும் கிரியைகளில்லாமல் நீதிமானாக்கப்படுகிறவனின் பாக்கிய

நிலைமையையும் இந்த 4ம் அதிகாரம் நமக்கு நினைவு படுத்துகிறது. ஆம், இது மிக மிக முக்கியமான பகுதி. ரோமர் 4ம் அதிகாரம், வேதம் முழுமையும் அடங்கியுள்ள மிகப் பெரிய இந்த கிறிஸ்துவ சத்தியத்தை தெளிவுபடுத்துகிறது.

5. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள் (அதி. 5).

ஐந்து விதமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினால் உண்டாகும் நீதி நமக்குத் தருகிறது (5 : 1 - 5); 1) தேவனோடு சமாதானம், 2)தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள கிட்டிச் சேரும் சிலாக்கியம், 3)தேவனுடைய மகிமையில் பங்கு கொள்ளும் சந்தோஷம், 4) உபத்திரவத்திலும் மேன்மை பாராட்டுதல், 5) இருதயத்தில் தேவனுடைய அன்பு ஊற்றப்படுதல், ஆகிய ஐந்து ஆசீர்வாதங்களை விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவன் கண்டடைகின்றான்.

ரோமர் நிருபத்தில் முதல் முதலாக பரிசுத்த ஆவியைப் பற்றி பவுலடியார் 5ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். முந்திய பகுதியில் கிறிஸ்து நமக்காக செய்து முடித்த காரியங்களை நம்மை கவனிக்கச் செய்தார். காரணம் பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொண்டு வரும் ஆசீர்வாதங்களைத் தெரிந்து கொள்வதற்கு முன்பு, கிறிஸ்து நமக்கருளும் ஆசீர்வாதங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

6. நீதிமானாக்கப்படுதலும் பாவத்தைக் குறித்த காரியமும் (அதி. 6).

இந்த அதிகாரத்தில், விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களாகிய நாம் பாவத்தில் தொடர்ந்து ஜீவிக்க நினைக்கலாமா? என்ற கேள்வியை பவுல் நம்மிடம் கேட்கிறார். பாவத்திற்கு மரித்தவர்களாகிய நாம் பாவம் செய்ய முடியாது என்ற பதிலையும் அவரே கற்றுத் தருகிறார். நம்முடைய பழைய மனுஷன் மரித்து விட்டான். பழைய சுயம் மரித்து இல்லாமல் ஒழிந்து போனது. அப்படியிருக்க பாவத்தில் நாம் ஜீவிப்பது எப்படி?

7. நீதிமானாக்கப்பட்டவர்களின் போராட்டங்களும் பெருமூச்சுகளும் (அதி. 7).

நாம் உயிர் மீட்சி அடையும்போது, மனம் புதிதாக்கப்பட்ட அனுபவம் நமக்குக் கிடைக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் உயிர் மீட்சி அடைந்தவர்களுக்கும், போராட்டங்

களும் பெருமூச்சுகளும் உண்டு. பழைய சுபாவத்திற்கும் புதிய சுபாவத்திற்கும் உள்ள போராட்டம் நாளுக்கு நாள் வலுப் பெறுவதை ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் காண்கிறோம்.

8. நீதிமானாக்கப்பட்டவர்களின் சுயாதீனமும் உரிமைகளும் (அதி. 8)

இந்த அதிகாரம், வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட ஆவிக்குரிய பரம கானான் தேசத்தை அனைவரும் சுதந்தரித்துக் கொள்ளமுடியும் என்று போதிக்கிறது. முந்தின அதிகாரத்தில் சொல்லப்பட்டவைகளுக்கும், இந்த அதிகாரத்தில் சொல்லப் படுகிறவைகளுக்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள். இந்த அத்தியாயத்தின் ஆரம்பமே ''ஆக்கினைத் தீர்ப்பில்லை'' என்று சொல்லுகிறது. அங்ஙனமே இந்த அதிகாரத்தின் முடிவில், ''கிறிஸ்துவை விட்டு நாம் பிரிக்கப்பட முடியாது'' என்று போதிக்கப்படுகிறோம்.

9. நீதிமானாக்கப்படுதலும் அவிசுவாசியான யூதனின் நிலையும் (9 - 11 அதி)

ஒன்பதாம் அதிகாரத்தில், இஸ்ரவேலரின் நிலை என்ன என்று ஆராயத் தொடங்குகிறார் பவுல். தமது முன்னறிவிப்பின்படி தம்முடைய திட்டங்களை அமைத்துக் கொள்ள, தேவனுக்குள்ள உரிமையை இந்த அதிகாரம் நிலை நிறுத்துகிறது. 10ம் அதிகாரத்தில் இஸ்ரவேலரை தேவன் ஏன் தள்ளிப் போட்டார் என்றும், 11ம் அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேலரைக் கொஞ்ச காலத்திற்கே தள்ளி வைத்திருக்கிறாரேதவிர, நித்திய காலத்திற்கு அவர்களைஅவர் தள்ளி விடவில்லை என்றும் பவுல் கூறுகிறார்.

இனி இந்நிருபத்தின் இரண்டாம் பகுதியாகிய நீதிமானாக்கப் பட்டவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் என்னவென்று பவுல் கூறுவதைக் காண்போம்.

II. நீதிமானாக்கப்பட்டவர்களின் கடமைகள் (12 - 14 அதி)

இப்பகுதியை கீழ்க்காணும் ஒன்பது தலைப்புகளின் கீழ் நாம் படிக்கலாம்.

1. தேவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள்

முதலாவது, நம்மை பரிசுத்தப்படுத்தி தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. அதாவது, உலகத்தோடு ஒத்துப் போகக்கூடாது (12 : 1-2).

2. நமக்கு நாமே நிறைவேற்ற வேண்டிய கடமைகள்

இங்கு பவுல் ஒரு காரியத்தை நமக்கு கற்றுத் தருகிறார். இது நமக்கு நாமே நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய கடமை. நம்மைக் குறித்து எண்ண வேண்டியதற்கு அதிகமாக எண்ணக் கூடாது *(12 : 3).*

3. திருச்சபைக்கு ஆற்றவேண்டிய கடமைகள்

நம்முடைய தாலந்துகளையும் வரங்களையும் திருச்சபை பக்தி விருத்தி அடையவும் வளரவும் நாம் பயன்படுத்த வேண்டும் *(12:4-8).*

4. உடன் வாழும் கிறிஸ்தவர்களுக்கு செய்ய வேண்டியவை

பல்வேறு விதங்களில் நம்முடைய சக கிறிஸ்தவர்களிடம், அதாவது, நமது கிறிஸ்தவ சகோதரர்களிடம் அன்பு செலுத்த வேண்டிய கடமைகள் அதிகமாய் நமக்குண்டு *(12 : 9 - 13).*

5. பகைவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள்

''பழி வாங்குதல் எனக்கே உரியது'' என்று தேவன் கூறிய காரியத்தை பவுல் நினைப்பூட்டி, பகைவர்களுக்கும் நன்மையே செய்து விட வேண்டும் என்று போதிக்கிறார்'' *(12 : 14 - 21).*

6. தேசத்திற்கு செய்ய வேண்டிய கடமைகள்

எல்லா அதிகாரங்களுக்கும் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்க வேண்டுமென்று இங்கு விளக்கமாக பவுல் போதிக்கிறார் *(13 : 1-7).*

7. அயலாருக்குச் செய்ய வேண்டிய கடமைகள்

அன்பினால் அல்லாமல் வேறெந்த விதத்திலும் மற்றவர்களுக்கு நாம் கடன்படக் கூடாது *(13 : 8 - 14).* அதாவது பிறரிடம் எப்போதும் அன்பு செலுத்த வேண்டும் என்பது இதன் பொருள்.

8. பலவீனமான சகோதரனுக்கு நமது கடமைகள்

அவனை , அவன் பலவீனத்திற்கேற்ற படி பட்சமாய் நடத்த வேண்டும். நாம் அவனிடம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும் *(14 - 15 : 17).*

9. சகலமான பேர்களுக்கும் நமது கடமைகள்

பொதுவாக, நாம் செய்யக்கூடிய நன்மைகளை எல்லோருக்கும் நாம் செய்து விட வேண்டும் *(15 : 8 - 16 அதி)* என்கிறார் பவுல்.

அத்தியாயம் - 9

I கொரிந்தியர் நிருபம்

இந்த நிருபத்தை பவுல் எழுதியதன் நோக்கம் ''கிறிஸ்துவே ஆண்டவர்'', அதாவது கிறிஸ்துவே நமது எஜமானர் என்ற சத்தியத்தை கொரிந்து சபை விசுவாசிகளுக்குப் போதிப்பதற்காகவே.

இந்த நிருபத்தின் முதல் அதிகாரம் 2ம் வசனத்தை முக்கிய வசனமாக நாம் எடுத்துக் கொள்ளலாம். இதில் கிறிஸ்துவைக் குறித்து ''எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவர்'' என்று கொரிந்து சபை விசுவாசிகளுக்கு எழுதுகிறார். நிருபத்தின் ஆரம்பத்திலேயே கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படையான இந்த சத்தியத்தை சுட்டிக் காண்பித்து விடுகிறார்.

இந்த நிருபத்தின் வரலாறு

கொரிந்து சபை, 18 மாதங்களாக பவுல் கஷ்டப்பட்டு செய்த நற்செய்தி ஊழியத்தின் பயனாக உருவான சபை. 1 கொரி. 4 : 15 லும் அப். 18ம் அதிகாரத்திலும் இந்த சபை உருவான விதத்தை நாம் காண முடிகிறது.

பவுல் இந்த சபையை ஆரம்பித்து நடத்தி விட்டு அங்கிருந்து போன பிறகு, பெரிய குழப்பங்கள் கொரிந்து சபையில் உண்டாயிற்று. எபேசு பட்டணத்தில் மூன்று ஆண்டுகள் தங்கி ஊழியம் செய்த பிறகு, கொரிந்து பட்டணத்திற்கு மீண்டும் சென்று இந்தக் குழப்பங்களையும் தவறுகளையும் சரி செய்ய ஆரம்பித்தார். முதல் முறை சென்றதைக் குறித்து அப். 18ம் அதிகாரம் சொல்லுகிறது. கொரிந்தியருக்கு எழுதின இரண்டு நிருபங்களும், எபேசு பட்டணத்தில் அவர் ஊழியம் செய்த மூன்றாம் ஆண்டின் கடைசியில் எழுதப்பட்டவை. 1 கொரி. 16 : 8ல் இது பற்றி காண்கிறோம். ஆயினும் 2 கொரி. 12 : 14 லும், 13 : 1 லும் அவர் மூன்றாவது தடவை கொரிந்து சபையாரிடம் போவதாகப் பேசுகிறார்.

மூன்றாவது பயணம் முடித்து திரும்பி வந்து, முதலாவது ஒரு நிருபத்தை கொரிந்து சபைக்கு எழுதினார். அந்த நிருபம் இப்போது இல்லை. 1 கொரி. 5 : 9, 11 ஆகிய இரு வசனங்களைப் படித்தால் இந்த உண்மை தெரியவரும். எனவே நாம், இப்போது பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய இரண்டாவது நிருபத்தையே முதல் நிருபம்

என்கிறோம். அது போல் மூன்றாம் நிருபத்தையே இரண்டாம் நிருபம் என்கிறோம்.

பவுல் எவ்வளவோ பிரயாசப்பட்ட போதிலும் கொரிந்து சபையின் ஒழுங்கீனங்கள் சரியாக சீரடையவில்லை. அச்சபையிலிருந்து வந்த சில விசுவாசிகள் மூலமாகவும், பவுலுக்கு நன்கு அறிமுகமான ஒரு குடும்பத்தின் மூலமாகவும் பவுலடியார் இது பற்றி அறிய வருகிறார் *(1 கொரி. 1 : 11 பார்க்கவும்).* மற்றும் சிலரும் இதனை பவுலுக்கு அறிவித்தனர் *(1 கொரி. 5 : 1; 11 : 8).* இந்த ஒழுங்கீனங்களைக் குறித்து நன்கு விசாரித்த பிறகு அவர் எழுதிய தொலைந்து போன முதல் நிருபத்திற்கு பவுலடியாருக்கு கொரிந்து சபையிலிருந்து பதில் வந்தது *(1 கொரி. 7 : 1).* அப்பதிலில் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் கூறுவதோடு, கொரிந்து சபையின் குழப்பங்கள் தீர்ந்து போன செய்திகள் தனக்கு மிகவும் ஆறுதல் அளிப்பதை அவர்களுக்கு எழுத நினைத்தார். இதற்காக 1 கொரிந்தியர் நிருபம் பவுலடியரால் எழுதப்பட்டது.

இந்த நிருபத்தை புரிந்து கொள்வது எப்படி?

கொரிந்து சபை மக்களின் மனோபாவங்கள் அறவொழுக்க நிலை, ஆவிக்குரிய வாழ்க்கை ஆகியவற்றை தெரிந்து கொண்டால் மட்டுமே இந்த நிருபத்தைப் புரிந்து கொண்டு அதன் முக்கிய செய்தியை நாம் கிரகித்துக் கொள்ள முடியும். கொரிந்து சபையின் மக்கள், சமுதாய அளவில் தாழ்த்தபட்டிருந்தாலும் *(1 கொரி. 1 : 26)*, கிரேக்கர் களுக்கே உரிய ஞானத்தைப் பற்றி பெருமை பாராட்டும் சுபாவம் இவர்களிடம் அதிகம் காணப்பட்டது. கொரிந்து பட்டணம் இது போன்ற காரியங்களில் அத்தேனே பட்டணத்தோடு போட்டி போடும் ஒரு பட்டணம். தங்கள் மொழி, இலக்கியம், கல்வி, தர்க்க ஞானம் குறித்து கொரிந்தியர்கள் அதிகப் பெருமை உடையவர்கள். கொரிந்தியர்களின் இந்த இறுமாப்பான சுபாவத்தை மாற்றியமைப் பதற்காகவே பவுல் இந்த நிருபத்தை எழுதுகிறார். இறைவனுக்கு முன்பாக ஞானம் என்பது ஒன்றுமில்லை என்பதை அவர்களுக்கு முதலில் சுட்டிக்காண்பிக்கிறார். *1 கொரி. 1 : 17; 2 : 1* மற்றும் சில வசனங்களிலும் இதைச்செய்கிறார் பவுல். இந்த உலகத்தின் பிரபுக்களை, இந்த நிருபத்தில் பல இடங்களில் பவுல் கண்டித்துப் பேசுகிறார். உலக ஞானத்தில் நம்பிக்கை வைப்பவர்கள் கடவுள் பார்வையில் மதியீனர்களாக இருக்கின்றனர் என்கிறார். இந்த உலகத்தார் தங்கள் ஞானத்தால் கடவுளை அறிந்து கொள்ள முடியவில்லை என்கிறார் *(1 கொரி. 1 : 21).* மாம்ச சுபாவமுள்ள மனிதன் ஆவிக்குரிய காரியங்களை அறிந்துகொள்ளவில்லை. அவனால்

அறிந்து கொள்ளவும் முடியாது. காரணம் தேவனைக் குறித்த மகத்தான உண்மைகள் அவன் உலக அறிவுக்குப் புலப்படாது. அது அவனுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது (1 கொரி. 2 : 14) என்கிறார்.

கொரிந்தியர்களைக் குறித்த இன்னுமொரு காரியம் என்னவென்றால் அவர்கள் அறவொழுக்கத்தில் குறிப்பாக விபச்சாரம் வேசித்தனம் குடி போன்ற காரியங்களில் பெருகினவர்கள். அப்பட்டணத்தின் வேதனைக்குரிய நிலைமை அது. கொரிந்து பாவம் மலிந்த ஒரு பட்டணம்.

இந்த நிருபத்தின் போக்கு

கொரிந்து சபையாருக்கு பவுல் கடிந்து புத்திமதி கூறும் ஒரு நிருபம். இதில் சொல்லப்படும் உபதேச சத்தியங்களும் கடிந்து கொள்ளுதலாகவே அமைந்துள்ளன. இதைப் படித்து அவர்கள் சீர்திருந்துவதற்காகவே கொரிந்து மக்களுக்கு பவுல் எழுதுகிறார் (1 கொரி. 15 : 12). நடைமுறைப் படுத்தக்கூடிய ஆழமான சத்தியங்கள் நிறைந்து காணப்படும் நிருபம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து எழுதப்பட்ட அதிகாரமும் கூட, ஊழியம் செய்ய நம்மைத் தூண்டி எழுப்பும் சத்தியங்களே. சபைக்கடுத்த காரியங்களில், சமுகத்துக்கடுத்த காரியங்களில், மக்களுக்கு புத்தி சொல்லி சீர் பொருந்தச் செய்யும் நோக்கங்களுடன் பவுல் எழுதுகிறார். கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்காக மட்டுமே பவுல் இவற்றை எழுதின போதிலும், எல்லாக் காலத்திலும், எல்லா இடங்களிலுமுள்ள தேவ ஜனங்களுக்கு மிகவும் தேவையானவை.

I கொரிந்தியர் நிருபம் - ஓர் ஆய்வு

சரியான படி இந்நூலை ஆராய்ந்து படிக்கும் போது இதில் இரண்டே பிரிவுகள் இருப்பதைக் காணலாம். I. பவுலுக்கு மற்றவர்களால் சொல்லப்பட்ட விஷயங்கள். II. பவுல் விசாரித்தறிந்த உண்மைகள்.

I. பவுல் கேள்விப்பட்ட விஷயங்கள் *(1 - 6 : 8)*

முதலாம் அதிகாரம் தொடங்கி ஆறாம் அதிகாரம் 8ம் வசனம் வரையில், கொரிந்து சபையைக் குறித்து மற்றவர்களால் சொல்லப்பட்ட விஷயங்கள் அடங்கியுள்ளன.

இந்த முதல் பகுதியை நாம் இரண்டு பிரிவுகளாக பிரித்துக் காண்போம். 1. சபையில் உள்ள ஒழுங்கீனங்கள். 2. சமூக வாழ்க்கையில் இருந்த முறைகேடுகள். இவற்றை தனித்தனியாக முதலில் படித்து முடிக்கலாம்.

1. சபையின் ஒழுங்கீனங்கள் (1 : 10 - 4 : 21)

கொரிந்து சபையில் காணப்பட்ட பிரிவினைகளால் வேதனை அடைகிறார் பவுல். 'நான் பவுலைச் சேர்ந்தவன், நான் அப்பொல் லோவைச் சேர்ந்தவன், நான் கேபாவைச் சேர்ந்தவன்' என்று சபை மக்கள் தங்களைப்பிரித்துக் கொண்டனர் (*1 : 10 - 18*). இது தவறு என்று உணர்த்தும்படி, பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட் டான்? என்று கேட்கிறார்.

அடுத்து, தேவனுடைய காரியங்களில் உலக ஞானம் ஒன்றுக்கும் உதவாது என்பதை கொரிந்து சபைக்கு விளக்கமாகப் போதிக்கிறார். *(1 : 19, 2 : 16)*.

3 : 1 - 4 வசனங்களில் கொரிந்து சபையில் தமது ஊழியத்திற்கு சபை மக்களே தடைகளாயிருக்கிறதையும், கிறிஸ்துவுக்குள் அவர்கள் இன்னமும் குழந்தைகளாக இருப்பதையும், ஆவிக்குரிய வளர்ச்சி அடைவதற்கு இவைகள்தடை என்றும், சிலகாரியங்களைக் குறிப்பிடு கிறார். *3 : 5- 10* வசனங்களில் ஊழியர்கள் முக்கியமல்ல தேவனே முக்கியமானவர்; அவர்தான் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் தருபவர் என்று தெளிவுபடுத்துகிறார்.

2. சமூக வாழ்வில் ஒழுக்கக் கேடுகள் (5- 6 : 8)

இந்தப் பகுதியில் கொரிந்து சபையில் காணப்பட்ட விபச்சார பாவத்தை வெகுவாய்க்கண்டித்து எழுதுகிறார். அஞ்ஞானிகளிடையே யும் கூட காணப்படாத, மிக கேவலமான ஒழுக்க கேடுகள் சபையில் இருப்பதைக் குறித்து வேதனைப் படுகிறார். அவர்களில் ஒருவன் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் பாவ அக்கிரமத்தை யாரும் கண்டிக்கவில்லை என்று அவர்கள் மீது குற்றம் சொல்கிறார். (வ. *8*)

6:ம் அதிகாரம் *1-8* வசனங்களில் சகோதரனுக்கு விரோதமாய் சகோதரன் வழக்காடுவதைக் கண்டிக்கிறார். ஒரு விசுவாசிக்கு விரோத மாய் மற்றொரு விசுவாசி, தேவனற்ற மனிதர்களின் நியாயத் தீர்ப்பை நாடி நிற்பதை மிகப் பெரிய தவறு என்கிறார்.

இவ்வாறு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும் புத்திமதிகள் இந்நாட்க ளில் வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் தேவையாயுள் ளவை என்பதை ஆவியானவர் அறிந்திருக்கவேண்டும் என்று நினைக் கத் தோன்றுகிறது.

II. பவுல் தீர்ப்புச் சொல்லும் விஷயங்கள் (6:9 - அதி. 16)

1. சமுக வாழ்வை குறித்த விஷயங்கள் (6 : 9 - அதி. 10)

இப்பகுதியில் திருமணம், அண்ணகர் வாழ்வு விவாகரத்து என்பவை பற்றி தாம் கேட்டறிந்த விஷயங்களை வைத்து கடிந்து கொள்வதோடு, தனக்குக் கிடைத்த கிருபையிலே கர்த்தருடைய ஆவியின் உதவியோடு கொரிந்து்சபை மக்களுக்கு புத்தி சொல்லுகிறார் *(6:9 - 7ம் அதிகாரம் முடிய)*

8ம் அதிகாரத்தில் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை விசுவாசிகள் புசிப்பது குறித்து, இறுமாப்பாய் இல்லாமல் அன்போடு காரியங்களைச் செய்யவேண்டும் என்று நல்லாலோசனை வழங்குகிறார்.

பவுல் தன்னை உதாரணம் காட்டி, தனக்குள்ள அதிகாரங்களைக் குறித்து, குறிப்பாக, தன்னுடைய அப்போஸ்தல அதிகாரம் குறித்து 9ம் அதிகாரத்தில் எழுதுகிறார்.

10ம் அதிகாரத்தில் இஸ்ரவேலரிடமிருந்து கிறிஸ்தவர்கள் படிக்க வேண்டிய பாடங்களைக் குறிப்பிடுகிறார் *(10 : 1-15)*. புசிப்பதிலும் குடிப்பதிலும் அன்பே சட்டமாக அமைய வேண்டும் என்கிறார். புசிப்பும் குடிப்பும் நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்க மாட்டாது அன்பினால் கிரியை செய்யும் விசுவாசமே தேவனுக்கு உகந்தவர் களாக்கும் என்கிறார். எல்லாம் தேவ மகிமைக் கென்று செய்யப்பட வேண்டும் என்கிறார் *(10: 16 - 33)*.

2. சபை வாழ்வைக் குறித்த காரியங்கள் (11 - 16 அதி.)

சபையில் பெண்கள் நடந்து கொள்ளவேண்டிய காரியங்கள் குறித்து *11*ம் அதிகாரத்தில் *1* முதல் *16* வசனங்களில் அவர்களுக்கு மிக அருமையான அறிவுரைகள் தருகின்றார்.

கர்த்தருடைய பந்திக்காக சபையோர் கூடி வரும்போது, சில சமயங்களில் அதில் நடந்த ஒழுங்கீனமான செயல்களைசுட்டிக்காட்டி, தவறு செய்பவர்களை எச்சரித்து கடிந்து கொள்ளுகிறார் *(11: 17 - 34)*.

*12*ம் அதிகாரத்தில் ஆவிக்குரிய வரங்களைக் குறித்து தெளிவாகப் போதித்து, சபை பக்திவிருத்தி அடைவதற்காகவே வரங்கள் ஆவியானவரால் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

கொரிந்து சபைக்கு 13ம் அதிகாரத்தில் 'அகாப்பே' அன்பைக்

குறித்துச் சொல்லப்பட்டவைகளை கடைப்பிடித்தால், திருச்சபை மக்களுக்கும் மற்ற மக்களுக்கும் மிகுந்த ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும். கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அன்பைக் குறித்த பவுலடியாரின் இந்தப் போதனைகள், ஆழமான நாம் கடைப்பிடிக்க வேண்டிய சட்டவாக்கியங்களாக உள்ளன.

14ம் அதிகாரத்தில் அந்நிய பாஷை வரங்கள் இரண்டினையும் குறித்து ஆலோசனைகளைக் கொடுப்பதோடு, அந்த இரு வரங்கள் செயல்பட வேண்டிய விதங்கள் பற்றி சபைகளுக்கும் தனிப்பட்ட விசுவாசிகளுக்கும் நன்கு போதிக்கிறார். அதே சமயம், மிகச் சிறந்த வரமாகிய அன்பை நாடுங்கள் என்றும், தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள் என்றும் கூறுகிறார்.

15ம் அதிகாரத்தில், கிறிஸ்துவில் நடந்த மிகப் பெரிய சம்பவமான உயிர்த் தெழுதலைக் குறித்து சிறப்பான உண்மைகளை பவுல் போதித்து, மரண பயமே இல்லாத ஒரு வாழ்க்கை கிறிஸ்தவ ஜீவியம் என்ற உண்மையை விசுவாசிகளுக்கு எடுத்துக்கூறி கொரிந்து மக்களை ஊக்குவிக்கிறார்.

16ம் அதிகாரத்தில் முதல் நான்கு வசனங்களில் எருசேலமிலுள்ள பரிசுத்த வான்களுக்கு உதவிப் பணம் சேகரிப்பதைக் குறித்து எழுதுகிறார். 5 முதல் 24 வசனங்களில் முடிவுரையாக சில காரியங்களை கொரிந்து சபைக்குச் சொல்லுகிறார்.

பவுலடியார் இந்த நிருபத்தின் முக்கிய செய்தியாக நமது ஆண்டவரின் முழுப் பட்டத்தையும் 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்து' வென்று அநேக முறை குறிப்பிடுகின்றார். முதல் 10 வசனங்களில் 6 முறை அதனை பயன்படுத்துகிறார் (2, 3, 7, 8, 9 , 10 மற்றும் 1:31; 2: 8, 16; 3 : 20; 4 : 4; 5 : 4, 5 ; 6 : 13; போன்ற வசனங்களில்) கர்த்தர் (ஆண்டவர்) என்பது சாதாரணமாக எல்லோரும் எப்போதும் பயன்படுத்தவில்லை.

கொரிந்து பட்டணத்து விசுவாசிகள் வாழ்க்கையில் பாவங்களும் ஒழுங்கீனங்களும் அதிகமாக தலைதூக்கி நின்றதற்குக் காரணம், கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்று, தங்கள் வாழ்க்கையை முழுமையாக அவர் ஆள அவருக்கு ஒப்புக் கொடுக்கவில்லை என்பதை பவுல் இந்த நிருபத்தில் சுட்டிக் காண்பிக்கிறார். நாமும் நமது ஜீவியத்தில் அவரை முழுமையாக ஏற்றுக்கொள்ளா விட்டால், நமது வாழ்க்கையிலும் கொரிந்து சபை விசுவாசிகளின் நிலைமை உண்டாக இடமளிக்கிறோம் என்பதை, பரிசுத்த ஆவியானவர் நமக்கு உணர்த்துகிறார்.

அத்தியாயம் - 10

II கொரிந்தியர் நிருபம்

இந்நூல் எழுதப்பட்ட சூழ்நிலை

பவுல் தமது முதல் நிருபத்தை எழுதி கொரிந்து சபையாருக்கு தீத்துவின் கையில் கொடுத்து அனுப்பி விட்டு, அதன் பிறகு எபேசு பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, அங்கிருந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டே துரோவா பட்டணம் வந்து சேர்ந்தார்.

கொரிந்து பட்டணத்திற்கு பவுலின் முதல் நிருபத்தைக் கொண்டு போன தீத்து, திரும்பி வந்து சேர காலதாமதம் ஏற்படவே பவுலுக்கு அதிக கவலை உண்டாயிற்று. தான் எழுதிய முதல் நிருபத்தை கொரிந்து சபையினர் ஏற்றுக் கொண்டனரா? அதனால் சபையில் நன்மைகள் உண்டாயிற்றா? என்று அச்சபையின் செய்திகளை அறிய வாஞ்சையாயிருந்தார். எனவே, பவுல் மக்கதோனியா நாட்டுக்கு தீத்துவைச் சந்திக்க புறப்பட்டுப் போனார் *(2 கொரி. 2 : 12, 13)*. பிலிப்பி பட்டணத்தில் அவனைச் சந்தித்தார் *(7 : 5,6)*. இந்த சமயத்தில் பவுலடியார் சரீரத்தில் சுகவீனமாயிருந்தார் *(2 கொரி. 1 : 8 - 10)*.

எழுதப்பட்ட நோக்கம்

2 கொரிந்தியர் நிருபத்தின் முக்கிய கருப்பொருள் 'ஆறுதலின் ஊழியம்' என்பது. தனது முதல் நிருபம் எழுதப்பட்ட நோக்கம் நிறைவேறிற்று என்ற செய்தி தீத்துவிடமிருந்து பவுலுக்குக் கிடைத்தது. அசுத்தமான பாவத்தில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த 'குற்றவாளி' மனந்திரும்பினான். சபையோரும், அதைக் குறித்து இதுவரை நிர்விசாரமாயிருந்தவர்கள் இப்போது மனம் வருந்துகிறார்கள் *(2 கொரி. 7 : 7 - 16; 2 : 1-11)* என்பதை தீத்து பவுலிடம் சொன்னான். அதே சமயம் இப்போது சபைக்கு வந்திருக்கிற பேராபத்து ஒன்றினைக் குறித்து தீத்து அறிவித்தான். எருசலேம் சபையிலிருந்து சிலர் அறிமுகக் கடிதங்களோடு அனுப்பப்பட்டிருந்ததாகவும், அவர்கள் யூத சமயக் கருத்துக்களையும் கலந்து வேறொரு சுவிசேஷத்தை கொரிந்து சபையில் பிரசங்கித்து கொண்டிருக்கிறார்கள் என்றும், பவுலுடைய அப்போஸ்தல ஊழியத்தைக் குறைத்தும் குற்றப்படுத்தியும் பேசுகிறார்கள் என்றும், அதன் விளைவாக

பவுலுக்கு எதிரான கோஷ்டி ஒன்று சபையில் எழும்பியிருக்கிறது என்றும் பவுலிடம் தெரிவித்தான் *(3 : 1-3; 4 : 2; 10 : 10; 11 : 1-4, 12, 13)*. இதைக் கருத்தில் கொண்டு, இப்போது இந்த மூன்றாம் நிருபமாகிய 2 கொரிந்தியர் நிருபத்தை எழுதினார்.

II கொரிந்தியர் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபம் பகுத்து ஆராய்வதற்கு எளிதாக இடமளிக்கவில்லை. காரணம் இதனை ஒரு ஒழுங்கான அமைப்பில் எழுத வேண்டும் என்று பவுல் நினைக்கவில்லை. ஒரு காட்டாறு இஷ்டமான இடத்தில் எல்லாம் பாய்வது போல், பவுலின் சிந்தனை ஓட்டம் எப்படியெல் லாம் ஓடிற்றோ அப்படி இந்த நூல் போகிறது எனலாம். ஆயினும் கீழ்க்காணும் விதத்தில் இந்நூலை சில பகுதிகளாகப் பகுத்துப் படிக்க முயலுவோம்.

1. பவுல் பல்வேறு விளக்கங்கள் தரும் பகுதி (1 - 7 அதி)

கொரிந்து சபையை மீண்டும் சந்திக்க பவுல் ஆவலாயிருந்தும் தனக்கு ஏற்பட்ட தாமதத்திற்கான காரணத்தைச் சொல்வதோடு, தனது முதல் நிருபத்தில் அவர் ஏன் வெளிப்படையாகவும் கண்டிப்பாகவும் அவர்களிடம் பேசவேண்டியதிருந்தது என்று கொரிந்து சபை மீது தனக்குள்ள கரிசனைக்கான காரணத்தை எடுத்துச் சொல்லவும், தனக்கு ஏற்பட்ட பாடுகளைக் குறித்து அவர்களோடு பகிர்ந்து கொள்ளவுமாக இந்தப் பகுதியில் பல்வேறு விளக்கங்களை ஒன்றன் பின் ஒன்றாக பவுல் தருகிறார்.

2. கொடுத்த வாக்கை நிறைவேற்ற அழைக்கும் பகுதி (8 - 9 அதி)

இந்தப் பகுதியில் எருசலேம் பட்டணத்து பரிசுத்தவான்களுக்கு (ஏழை விசுவாசிகளுக்கு) கொரிந்து சபையார் உற்சாகமாக சகாய பணம் சேகரிக்க ஏற்கனவே வாக்குப் பண்ணியிருந்தார்கள். அவர்கள் கொடுத்த அந்த வாக்கினைக் குறித்து மக்கேதோனியா சபைக் கிறிஸ்த வர்களிடம் கொரிந்து கிறிஸ்தவர்களை தான் புகழ்ந்து பேசியதாகக் கூறி, அவர்கள் சேர்ந்து வைத்திருக்கும் உதவித் தொகையை சீக்கிரம் அனுப்பி வைக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்தி, அதைச் செய்வதற்கு அவர்களை அழைக்கிறார்.

3. தனது அப்போஸ்தல ஊழியத்தை நிலைநாட்டும் பகுதி (அதி. 10 - 13)

இப்பகுதியில் பவுலடியாரின் பேச்சு அதிகாரமுடையதாய்

உறுதியோடு அமைகிறது. கண்டிப்பாகப் பேசுகிறார். தனது அப்போஸ்தல ஊழியத்தை நிலைநாட்டி, கொரிந்து சபையார் தன்னிடம்காட்டும்அன்புக்கும்மதிப்புக்கும்கண்ணியத்திற்கும் தான் பாத்திரமானவர் என்பதை இப்பகுதியில் உறுதியாக நிலை நாட்டுகிறார்.

பவுலைக் குறித்து இந்நூலிலிருந்து நாம் அறிவது

பவுல் எழுதிய மற்ற எந்த நிருபத்தைக் காட்டிலும், பவுலினுடைய வாழ்க்கையின் தனிப்பட்ட சில காரியங்களை இதில் எழுதி பிருக்கிறார். இங்கு பவுல் தன்னையே முழுமையாய் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். அவர் கொரிந்து சபையின் மேல் வைத்திருக்கும் அதிகமான அன்பினை நாம் அறிய முடிகிறது. அந்த அன்பின் ஆழத்தையும் அதன் இரகசியத்தையும் இந்நூலில் வெளிக் கொணர்ந்து பவுல் காண்பிக்கிறார் (5 : 14). சிற்சில சமயங்களில் அவர் நோய்வாய்ப்பட்டு சரீரத்தில் பலவீனப்பட்டிருந்ததை இந்த நூலில் அவர் கூறுகிறார் (1 :8 - 10; 12 : 7 - 9) இதனால் அவருடைய கடினமான உழைப்பையும் ஊழியத்தில் அவர்பட்ட உபத்திரவங்களையும் பாடுகளையும் மக்கள் இன்றளவும் நினைக்கமுடிகிறது (11 : 23 - 33). 10ம் அதிகாரம் 10ம் வசனமும், 11ம் அதிகாரம் 6ம் வசனமும் அவருடைய தோற்றத்தையும் குரலையும் பேச்சையும் குறித்து சற்றே நாம் அறிந்து கொள்ளச் செய்கின்றன. 12ம் அதிகாரத்தில், 14 வருடங்களாய் அவர் மறைத்து வைத்திருந்த இரகசிய மொன்றை நம்மால்அறிந்து கொள்ள முடிகிறது.

அத்தியாயம் - 11

கலாத்தியர் நிருபம்

'கலாத்தியா' - ஒரு விளக்கம்

இந்த நிருபத்தை மட்டும் கலாத்தியா நாட்டிலுள்ள எல்லா சபைகளுக்கும் ஒட்டு மொத்தமாக பவுல் எழுதியுள்ளார். கலாத்தியா என்பது சின்ன ஆசியாவிலுள்ள பல பட்டணங்கள் அடங்கிய ஒரு பெரிய பகுதி. இங்கு கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் 'கால்' நாட்டிலிருந்து (இன்று பிரான்ஸ் என்பது இதன் பெயர்) கால் இனமக்கள் இங்கு வந்து பெருமளவில் குடியேறி விட்டதால் இப்பகுதி 'கலாத்தியா' என்றழைக்கப்பட்டது. அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை ஆகிய பட்டணங்கள் அடங்கிய பகுதி இது.

இந்நூலினை பவுல் எழுதிய நோக்கம்

பவுல், தனது முதலாம் மிஷனெரிப் பயணத்தின்போது, மக்கதோனியா அல்லது கொரிந்து பட்டணத்தில் வைத்து, கி.பி. 55 அல்லது 56ல் இந்நூலை எழுதியிருக்கக்கூடும். யூத மத ஆசாரங்களோடு வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்கள் சிலர் இப்பகுதிக்கு வந்து, பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தையும் பாரம்பரியங்களையும் கிறிஸ்தவர்களும் கைக்கொள்ள வேண்டும் என்று கலாத்தியாவிலுள்ள சபைகளுக்கு போதிக்க ஆரம்பித்தனர். இந்த சபைகளும் அவர்களின் தவறான போதனைகளை ஏற்றுக் கொண்டு விட்டன. தேவனுடைய இரட்சிப்பு புறஜாதிகளுக்கு கிடைக்க வேண்டுமானால் அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் என்றும் இவர்கள் வலியுறுத்தினர். இரட்சிப்பைப் பெற இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்பதை அவர்கள் மறுக்கவில்லை. ஆனால் அது போதாது, நியாயப் பிரமாண கிரியைகளையும் செய்யவேண்டும் என்று 'வேறொரு சுவிசேஷத்தை'ப் பிரசங்கித்தனர் (1 :6,7). இது பவுலின் 'கிருபையின் சுவிசேஷ'த்திற்கு மாறானது. இந்த வேறொரு சுவிசேஷத்தை போதித்தவர்கள், பவுலின் அதிகாரத்தை இந்த விஷயத்தில் எதிர்த்து நின்றனர். அவர்கள் பவுலைக் குறித்து, இவர் பேதுரு யாக்கோபு போன்ற முதல்தரமான அப்போஸ்தலர் அல்ல, இவர் இரண்டாவது நிலை அப்போஸ்தலர் என்று சபைகளில் அவரைக்

குறைத்துப் பேசினார்கள். மேலும் புறஜாதி கிறிஸ்தவர்களுக்காக, இவர் சுவிசேஷத்தை நியாயப்பிரமாண அம்சங்களை விட்டு விட்டுப் போதிக்கிறார் என்றும் குற்றஞ் சாட்டினர். எனவே இந்த நிருபத்தில் தனது அப்போஸ்தல அதிகாரத்தை நிலைநிறுத்தி, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு மாத்திரமே தேவனுடைய இரட்சிப்பைப் பெறுகிறோம் என்று, கிருபையின் சுவிசேஷத்தை மீண்டும் உறுதியாக கலாத்திய சபையோரின் மனதில்நிலைநாட்டுவதற்கு இந்த நூலை எழுதினார்.

இந்த நூலின் முக்கிய அம்சங்கள்

இந்த நிருபம் கிறிஸ்தவர்கள் யூதமத போதனைகளிலிருந்தும், தவறான செயல்பாடுகளிலிருந்தும் வீண் சடங்காச்சாரங்களிலிருந்தும் விலகி கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் தங்களை உறுதியாய் காத்துக் கொள்வதற்கு உதவியாக பவுலால் எழுதப்பட்டது. இது மார்ட்டீன் லூதருக்கு மிகவும் பிடித்தமான நிருபம். இதில் வரும் பவுலின் போதனைகளைக் கொண்டே அவர் தமது சீர்த்திருத்தக் கருத்துக்களை அமைத்தார். இந்த நிருபத்தில் பவுல், கிறிஸ்துவை இப்படிப்பட்ட காரியங்களிலிருந்து நம்மை விடுவிக்கும் ஒரு விடுதலை வீரராகச் சித்தரிக்கிறார். விசுவாசத்தினாலூண்டாகும் இரட்சிப்பைக் குறித்து பவுல் எழுதிய வேறு எந்த நூலிலும் காணப்படாத அளவுக்கு, திட்டமும் தெளிவுமாய் அதை பவுல் போதிக்கிறார். முதல் அதிகாரம் 16ம் வசனம், 2ம் அதிகாரம் 20ம் வசனம், 4 ம் அதிகாரம் 6ம் 19ம் வசனங்களில் பவுல் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு உள்ளான ஆவிக்குரிய வளர்ச்சியே மிக அவசியம் என்பதையும், வெளிப்படையான வீண் ஆசாரங்களான மத அனுஷ்டானங்களால் ஆத்துமாவுக்கு எந்தவிதப் பயனும் ஏற்படாது என்பதையும் நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கலாத்தியர் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை I முன்னுரை, II பவுலின் அப்போஸ்தல அதிகாரம், III விசுவாசத்தினாலே உண்டாகும் இரட்சிப்பும் பரிசுத்தமாகுதலும், IV முடிவுரை, என்ற நான்கு பகுதிகளாகப் பிரித்து அவற்றை பல்வேறு தலைப்புகளின் கீழ் நாம் படிக்கலாம்.

I. முன்னுரை (1: 1-9)

இந்தப் பகுதியில் பவுலின் உற்சாகம் குன்றிய வாழ்த்துக்களையும் அவருடைய கண்டிப்பான கடிந்து கொள்ளுதலையும் காண்கிறோம்.

1. உற்சாகமில்லாத வாழ்த்துதல் (1 : 1 - 5)

இயேசு கிறிஸ்துவின் பிராயச் சித்த பலியைக் குறித்து பேசத் தொடங்கிய படி 'கிறிஸ்து இயேசுவுக்கு மகிமையுண்டாவதாக' என்று மட்டும் சொல்லி விட்டு, முன்பு அவர்களுக்கு விலையேறப் பெற்றதாயிருந்த கிறிஸ்துவின் மரணத்தை அவர்கள் உதாசீனம் செய்து, பாரம்பரியங்களின் மேலும் கிரியைகளின் மேலும் நம்பிக்கை வைத்து கிறிஸ்துவை விட்டு விலகிப் போனார்களே என்று ஆச்சரியப்படுகிறார்.

2. கண்டிப்பான எச்சரிப்பு (1 : 6 - 9)

கிறிஸ்துவின் மரணத்தின் மேலும் தேவனுடைய கிருபையின் மேலும் விசுவாசம் வைப்பதால் உண்டாகும் இரட்சிப்பை அறிவிப்பதே மெய்யான சுவிசேஷம். தேவதூதனோ அல்லது பவுலோ வந்து, அதற்கு மாறான வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால், அப்படிப் பிரசங்கிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்கிறார். அதன் பொருள் கிருபையின் சுவிசேஷத்தை விட்டு கிரியைகள் மேல் இரட்சிப்புக்காக நம்பிக்கை வைப்பவர்களும் சபிக்கப்பட்டவர்கள் என்று மறைமுகமாக கலாத்தியா சபைகளை பவுல் எச்சரிக்கிறார்.

II. பவுலின் அப்போஸ்தல அதிகாரம் (1:10 - 2:15)

1. தேவனிடமிருந்து வெளிப்பாடாக பெற்ற சுவிசேஷம் (1 : 10 - 24)

பவுல் இந்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எந்த மனுஷனிடத்திலும் தான் கற்றதுமில்லை, எவரிடமிருந்தும் அதைப் பெற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்'' என்கிறார் (வ. 10). மேலும் 16ம், 17ம் வசனங்களில் ''தேவனே தம்முடைய குமாரனை எனக்குள் வெளிப்படுத்த சித்தமாயிருந்தார்'' என்றும் அதைக் கற்றுக் கொள்ளும்பொருட்டு ''அப்போஸ்தலர்களிடத்திலே எருசலேமுக்கு நான் போகாமல், அரபி தேசத்துத்திற்குப் போனேன்'' என்கிறார். அங்கே தேவன் இந்த கிருபையின் சுவிசேஷத்தை தமக்கு வெளிப்படுத்தினதாகக் கூறுகிறார். இதன் மூலம் தமது அப்போஸ்தல அதிகாரத்தை உறுதிப்படுத்துகிறார்.

2. பேதுருவின் மாயத்தை எதிர்த்தார் (2 : 1-15)

யூத மத ஆசாரங்களையும் நியாயப் பிரமாண விதிகளையும் சுவிசேஷத்தோடு சேர்த்து கைக்கொள்ள வேண்டும் என்ற காரியத்தை பவுல், தான் ஆதி முதல் எதிர்த்து வருகிறதை கலாத்திய விசுவாசி

களுக்கு எழுதுகிறார். பேதுரு புறஜாதி கிறிஸ்தவர்களோடு சாப்பிட உட்காராமல், விருத்த சேதனம் பண்ணியிருந்த யூத கிறிஸ்தவர்களோடு சேர்ந்து கொண்டதை பவுல் தவறு என்று கூறி அவரை எதிர்த்தார் *(2 : 11)*. 15ம் வசனத்தில் நியாயப்பிரமாணத் தின் கிரியைகளுக்கு கிறிஸ்துவின் ''கிருபை சுவிசேஷத்தில்'' இடமில்லை என்று தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கிறார்.

III. விசுவாசத்தினாலே உண்டாகும் இரட்சிப்பும் பரிசுத்தமாகுதலும் (2 : 16 - அதி.5)

இந்தப் பகுதியை கீழ்க்காணும் ஐந்து தலைப்புகளில் நாம் பிரித்துப் படிக்கலாம்.

1. விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுதல் (2: 16 - 19)

அன்றைய அப்போஸ்தலர்களும் யூதக் கிறிஸ்தவர்களும் யூத மதத்திலிருந்தபோது நியாயப்பிரமாணம் தங்களை இரட்சிக்க முடியாது என்பதைக் கண்டவர்கள். ஆனால் நியாயப் பிரமாணம் செய்ய முடியாததை தேவனுடைய கிருபை செய்து முடித்து விட்டதை ஏற்றுக் கொண்டு, கிருபையினாலே இரட்சிப்படைந்தவர்களே. எனவே விசுவாசத்தினாலே மட்டுமே நீதிமான்களாக்கப் படுகிறோம் என்பதை அனுபவத்தில் நன்கு அறிந்தவர்கள்.

2. விசுவாசத்தினாலே தேவனோடு இணைக்கப்படுதல் (2:20-21)

பவுலடியார் கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் விசுவாசம் வைத்து கிருபையின் மூலம் தேவனோடு இணைக்கப்பட்ட அனுபவத்தை 20, 21 வசனங்களில் கூறுகிறார். ''இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார்'' என்று கிறிஸ்துவோ டுள்ள இணைப்பை தாம் நன்கு அனுபவித்ததைக் கூறுகிறார். இன்னொரு முக்கியமான கிறிஸ்தவ சத்தியத்தை 2ம் வசனத்தில் கூறுகிறார்: ''நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.''

3. விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகளாகுதல் (3 : 1-22)

நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டதுமல்லாமல் நாம் விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகளானோம். இப்பொழுது நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியினாலே நாம் தேவனு டைய பிள்ளைகள் என்ற அந்தஸ்தைப் பெற்றதை நம்மால் அறிந் துணர முடிகிறது.

4. விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெறுதல் (3 : 23 - 4 : 31)

இப்பகுதியில் நாம் நீதிமான்களாக்கப்படுவது மட்டுமல்லாமல் விசுவாசத்தின் மூலம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். நீதிமானாக்கப் பட்ட நிலை நம்மை விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்கப்படும் நிலைக்கு கொண்டு போகிறது. 4ம் அதிகாரம் 6ம் வசனத்தில் தேவனே நமக்குள் அவருடைய குமாரனின் ஆவியை நம்முடைய இருதயங் களில் வைத்தார்.

5. விசுவாசத்தினால் அடிமைத்தனம் நீங்கி சுயாதீனர்களாகுதல் (அதி 5)

கிறிஸ்து நம்மை ஒரு மகிமையான சுயாதீனத்திற்குள்ளாக நடத்துகிறார். இந்த சுயாதீனத்தை இழந்து விடாமல் எப்பாடு பட்டும் அதனைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

ஆனால் இந்த சுயாதீன நிலைமையை, மீண்டும் நியாயப் பிரமாணத்தில் விசுவாசம் வைக்க நாம் பெறவில்லை. 13ம் வசனத்தில் ''இந்த சுயாதீனத்தை மாம்சத்திற்கேதுவாக அனுசரியாமல், அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள்'' என்று கலாத்திய சபைகளின் விசுவாசிகளுக்கு பவுல் சொல்கிறார்.

IV. முடிவுரை (6 : 1-18)

இதில் கலாத்திய நாட்டு சபைகளுக்கு ஒரு முக்கிய ஆலோசனை வழங்குகிறார்.

1. மனதுருக்கத்தோடு அன்பினால் சேவை செய்யுங்கள் (6 : 1-10)

நாம் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து நியாயப் பிரமாணத்தை யல்ல, கிறிஸ்துவின் அன்புப் பிரமாணத்தையே நிறைவேற்ற வேண்டியவர்கள் என்று கலாத்திய நாட்டு சபைகளுக்கு அறிவுறுத் துகிறார். குறிப்பாக தவறு செய்துவிட்டவர்களை ஆவிக்குரிய நிலையில் தேறினவர்கள் சாந்தகுணமுள்ள ஆவியோடே அப்படிப்பட்ட வர்களைச் சீர்பொருந்தப் பண்ணவேண்டும்'' என்கிறார் *(6 : 1)*.

2. இறுதியான வார்த்தைகள் (6 : 11 - 18)

மாம்சத்தின்படி நல்வேஷமாய் காணப்படுபவர்கள் விருத்த சேதனம் பண்ணிக் கொள்ள புறஜாதிகளைக் கட்டாயப்படுத்து

கிறார்கள் என்பதை சுட்டிக்காண்பித்து யூதமத அனுஷ்டானங்களில் நம்பிக்கை வைக்கும் கிறிஸ்தவ விசுவாசிகளைக் கடிந்து கொள்கிறார். சிலுவையைக் குறித்தே நம்முடைய மேன்மை பாராட்டல் இருக்க வேண்டும். மற்ற மேன்மைகள் எல்லாம் வீணானவை, ''வித்தசேதன மும் விருத்த சேதனமில்லாமையும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றுமில்லை. புது சிருஷ்டியே காரியம்'' (வ. 16) என்று கூறி புறம்பான சடங்காச்சாரங்கள் அல்ல, ஆவிக்குரிய மெய்யான கிறிஸ்தவ ஜீவியமே கிறிஸ்தவனின் மேன்மை என்கிறார்.

அத்தியாயம் - 12

எபேசியர் நிருபம்

சபையைப் பற்றி

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் அஸ்திபாரமிட்டு எபேசு சபையை பவுல் தான் உருவாக்கினார். கி.பி. 54ல் முதல் முறையாக பவுல் அங்கு சென்றபோது, எருசலேம் தேவாலயத்தில் ஒரு குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாக அவர் நிறைவேற்ற வேண்டிய பொருத்தனை காரணமாக, எபேசு பட்டணத்தில் அதிக நாட்கள் தங்காமல் எருசலேமுக்கு உடனே திரும்ப வேண்டியதாயிற்று (*அப். 18 : 19 - 23*). அதன் பிறகு மீண்டும் எபேசுவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் தங்கி, கஷ்டப்பட்டு சுவிசேஷ ஊழியத்தை செய்து நிறைவேற்றினதின் பயனாக இந்த எபேசு சபை உருவாயிற்று (*அப். 19 : 8 - 10; 20 : 31*).

நூலினைப் பற்றி

எபேசு சபை ஸ்தாபிக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, ரோமப் பட்டணத்தில் முதல்முதல் பவுல் சிறையிலிருந்த நாட்களில் எபேசு நிருபம் பவுலினால் எழுதப்பட்டது. இந்த நிருபம் அநேக வேத அறிஞர்களால் புகழப்படுவதுண்டு. காரணம் இது எழுதப்பட்ட கிரேக்க உரைநடை மிகவும் அருமையாயுள்ளது. பவுலின் நிருபங்கள் அனைத்திலும் இது தலைசிறந்ததாக மதிக்கப்படுகிறது. இதில் காணப்படும் முக்கிய செய்திகள் உன்னதமான சத்தியங்களைப் பற்றியவை. கருத்தின்படி பார்த்தாலும் மொழி நடையின்படி பார்த்தாலும் இந்நிருபம் பவுலின் சிறப்பான ஒருபடைப்பு. பாவ மனிதர்களை அழிவு நிலையிலிருந்து ஆவிக்குரிய மீட்பின் நிலையான இரட்சிப்பின் சிகரத்திற்கு கொண்டு போகக் கூடிய மிக உயர்ந்த ஆவிக்குரிய படைப்பு. ஆகவே இந்நூல் புதிய ஏற்பாட்டின் சத்தியங்களைக் கொண்ட ஒரு உயர்ந்த மலை முகடு எனலாம். தேவபிள்ளைகள் கொஞ்சம் கொஞ்சமாக ஏறி இந்த மலை முகட்டினை அடைய வேண்டும் என்பது பவுலின் நோக்கம். ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மை மேலே உயர்த்தி உயர்த்தி தேவனுடைய மகிமையான பிரசன்னத்தில் இறுதியாக கொண்டு போய்ச் சேர்க்கக்கூடிய சிறப்பான ஓர் ஆவிக்குரிய படைப்பு.

இதில் வரும் போதனைகள்

இந்த நிருபத்தில் 'திருச்சபை கிறிஸ்துவின் சரீரம்'' என்பதும், விசுவாசிகள் அந்தப் புனித சரீரத்தில் அங்கங்கள் என்பதும் முதன்மை யான சத்தியமாகப் போதிக்கப்படுகிறது. தமது குமாரனாகிய கிறிஸ்து பாடுபடுவதற்கென ஒரு சரீரத்தை மட்டும் பிதா ஆயத்தப்படுத்தித் தரவில்லை. மகிமைப்படுவதற்கென்று ஒரு ஆவிக்குரிய சரீரத்தையும் பிதா அவருக்கு ஆயத்தம் பண்ணியிருந்தார். ''விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்'' என்ற சத்தியத்தைப் போதிக்க ரோமர், கலாத்தியர் என்ற பவுலின் இரண்டு நிருபங்கள் இருப்பது போல், ''திருச்சபை கிறிஸ்துவின் சரீரம்'' என்பதைப் போதிக்கும் பவுலின் எபேசியர், கொலோசயர் என்ற இரு நிருபங்கள் உள்ளன. பிந்திய இரு நிருபங்களும் ஒரே சமயத்தில் எழுதப்பட்டதால் இரண்டும் ஒன்று போல் இருப்பதைக் காணலாம். ஆனால் ஆழ்ந்து படித்துப் பார்த்தால் எபேசு நிருபத்தில் 'திருச்சபை கிறிஸ்துவின் சரீரம்' என்பதையும், கொலோசேயர் நிருபத்தில் 'கிறிஸ்து தமது சரீரமாகிய திருச்சபைக்கு தலை' என்பதையும் முக்கிய சத்தியங்களாக பவுல் போதிக்கிறார் என்பது தெரியவரும்.

இந்த நிருபத்தில் வரும் முக்கிய பதங்கள்

கிறிஸ்தவ சத்தியங்களை உள்ளடக்கிய சில சொற்கள், சொற்றொடர்கள் இந்த எபேசு நிருபத்தில் திரும்பத் திரும்ப வருகின்றன். அவற்றுள் ''கிறிஸ்துவுக்குள்'', ''கிறிஸ்து இயேசுவுக்குள்'', ''நடந்து கொள்ளுங்கள்'', ''ஒரு மனமாய்'', ''ஆனபடியினாலே'', ''ஆதலால்'', ''அந்தப்படியே'', ''உன்னதங்களிலே'' , ''ஐசுவரியம்'', ''அன்பினால்'' என்பது போன்றவை முக்கியமானவை.

இந்த நிருபம் கிறிஸ்துவின் சபையை 1. தேவனுடைய ஆலயம் *(2: 21, 22)*; 2. மனித சரீரம் *(1 : 22, 23)*, 3. மணவாட்டி *(5 : 25 - 32)* என்று மூன்று விதத்தில் உருவகப்படுத்திக் காண்பிக்கிறது. இதில் 'சரீரம்' என்ற உருவகமே அதிகமாய் பேசப்பட்டு அதுவே இந்த நிருபத்தின் முக்கிய போதனையாய் அமைந்துள்ளது.

எபேசியர் நிருபம் - ஓர் ஆய்வு

இதனை, I. கிறிஸ்தவ சத்தியங்களைப் போதிக்கும் பகுதி, II. நடைமுறை வாழ்க்கையைப் போதிக்கும் பகுதி (அதி 4 - 6) என்று பிரிக்கலாம்.

I. கிறிஸ்தவ சத்தியங்களைப் போதிக்கும் பகுதி (அதி. 1-3)

இப்பகுதியை கீழ்க்காணும் 8 தலைப்புகளில் பிரித்துக் காண்போம்.

1. வாழ்த்துதல் சொல்லுதல் (1 : 1,2)

இந்த வாழ்த்துதலில் அடங்கியுள்ள ''கிறிஸ்து இயேசுவுக்குள்'' என்ற வார்த்தைகள் இந்த நிருபத்தைப் படிப்பதற்கு ஒரு திறவுகோல் போல் அமைந்துள்ளது. கிறிஸ்துவோடு திருச்சபையின் அங்கங்களாய் நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம். அவருக்குள் நாம் வாழ்கிறோம். அவருக்குள் நாம் சம்பூரணமாய் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்பது இந்த வாழ்த்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. கிறிஸ்துவின் அங்கங்களுக்கான ஆசீர்வாதங்கள் (1:3-14)

இந்த 12 வசனங்களும் தேவன் நமக்குக் கொடுக்கும் நித்திய ஆலோசனைகளையும், அவர் நம்மைக் குறித்து வைத்திருக்கும் நோக்கங்களையும், கிறிஸ்துவுக்குள் சகலமும் ஒன்றாய்க் கூட்டப் படும் என்ற முடிவான சத்தியத்தையும் போதிக்கின்றன. இந்த முதல் அதிகாரத்தில் 'எல்லாம்', 'சகலமும்' என்ற பதங்கள் 9 முறை வருகின்றன.

3. கிறிஸ்துவின் அங்கங்களுக்காக பவுலின் ஜெபம் (1 : 15 - 21)

எபேசியர் நிருபத்தில் பவுலின் இரண்டு ஜெபங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த அதிகாரத்திலும் *(15 - 21)*, 3ம் அதிகாரத்திலும் *(14 - 21)* அவை வருகின்றன. இந்த முதல் ஜெபத்தில் பிதாவாகிய கடவுளை அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும், சபை விசுவாசிகளுக்கு தேவன் தந்தருள வேண்டுமென்றும் *(1:17)*, விசுவாசிகளிடத்தில் தேவன் காண்பிக்கும் அவருடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்று அவர்கள் அறியும்படிக்கு அவர்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்க வேண்டுமென்றும் பவுல் வேண்டிக் கொள்ளுகிறார் *(1:19)*.

மூன்றாம் அதிகாரத்தில் வரும் இரண்டாவது ஜெபத்தில் கிறிஸ்துவின் ஆவியினாலே உள்ளான மனுஷனில் எபேசு விசுவாசிகள் வல்லமையாய் பலப்படவும், அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாகி தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் அவர்கள் நிறையப்படவும் பவுல் ஜெபிக்கிறார்.

4. கிறிஸ்து தமது சரீரமாகிய திருச்சபையின் தலைவர் (1 : 22-23)

எவ்வளவு உன்னதமான போதனை இது. திருச்சபை என்னும் புதிய சமுதாய அமைப்பின், புதிய சரீர அமைப்பின், உயர்த்தப்பட்ட உன்னதமான தலைவராக இயேசு கிறிஸ்து இருக்கிறார். இந்த சத்தியம் இன்னமும் விரிவாக, கூடுதல் விபரங்களோடு கொலோசெயர் நிருபத்தில் பவுலடியாரால் போதிக்கப்படுகிறது.

5. கிறிஸ்துவின் சரீரத்தில் விசுவாசிகள் அங்கம்வகிக்கும் விதம் (2 : 1-10)

திருச்சபையாகிய சரீரத்தை கடவுள் உண்டாக்கிய விதம் இங்கு சொல்லப்பட்டுள்ளது. இதில் அங்கம் வகிப்போர் முற்காலங்களில் பாவங்களிலும் அக்ரமங்களிலும் செத்துக் கிடந்த மக்கள். ஆனால் தேவன் இவர்கள் பாவங்களை மன்னித்து இவர்களை உயிரடையச் செய்தார். அதுமட்டுமல்ல கிறிஸ்துவோடு கூட உன்னதங்களிலே அவர்களை உட்காரவைத்திட்டார். என்ன மகிமையான உயர்வு! இத்தனை அருமையான அனுபவத்தை பவுல் எபேசு சபை மக்களுக்கு விளக்கிப்போதிக்கிறார்.

6. ஆசீர்வாதமான அங்கம் வகித்தலும் தேவனோடு புதிய உறவும் (2 : 11-22)

12ம் வசனத்தில் முன்பிருந்த நிலையை ''நினைத்துக் கொள்ளுங்கள்'' என்கிறார். முன்பு, கிறிஸ்துவைச் சேராதவர்கள், காணியாட்சிக்குப் புறம்பானவர்கள், உடன்படிக்கைகளுக்கு அந்நியர், நம்பிக்கையில்லாதவர்கள், தேவனற்றவர்கள். ஆனால், இனி இவர்கள் அந்நியரல்ல, பரதேசிகள் அல்ல, பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாய் (வ. 19) கிறிஸ்துவின் மேல் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறவர்கள் (வ. 22). எத்தனை பெரிய சிலாக்கியம் கிறிஸ்துவை விசுவாசிப்பது! எத்தனை பாக்கியங்கள் அதன் பலனாக எபேசிய விசுவாசிகளுக்கு கிடைக்கின்றன!

7. கிறிஸ்துவின் சரீரத்தில் புறஜாதிகளுக்கு இடம் (அதி 3)

இந்த மிகப்பெரிய இரகசியம் மற்ற எவருக்கும் கொடுக்கப்படாமல், பவுல் அப்போஸ்தலருக்கு மட்டுமே தேவனால் அளிக்கப்பட்ட வெளிப்பாடு. கிறிஸ்துவின் சரீரத்தில் புறஜாதிகளும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள் என்று பிரசங்கித்தபடியால் தான்

யூதர்களுடைய கோபத்துக்கு அவர் ஆளாகினார். ரோமச் சிறைச் சாலையில் வைக்கப் பட்டார் (3 : 13) இந்த வெளிப்பாடு ''மறைக்கப் பட்டிருந்த ஒரு இரகசியம்'' என்கிறார் (3 : 6). இதனால் பவுல் அனுபவித்த உபத்திரவங்கள் புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு மகிமையாயிருக்கிறது என்று அவர் மிகவும் சந்தோஷப்பட்டு அதை எபேசு சபைக்கு எழுதித் தெரிவிக்கிறார்.

II. நடைமுறை வாழ்க்கைக்கான ஆலோசனைகள்

கீழ்க்காணும் தலைப்புகளில் நான்கு விதமாக இவற்றை பிரித்துக் காணலாம்.

1. கிறிஸ்துவின் சரீரத்தின் ஒருமைப்பாட்டைக் காப்பது (4 : 1-3)

இந்த ஒருமைப்பாட்டை சரீரத்தின் அங்கங்களாயிருக்கிற திருச்சபையின் விசுவாசிகள் எப்பாடுபட்டும் அதற்குப் பங்கம் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் (4 : 1, 9) என்கிறார் பவுல். அத்துடன் இந்த ஒருமைப்பாட்டை கட்டிக் காத்து வளர்த்து விடுவதற்குத் தேவையான யாவற்றையும் செய்ய ஜாக்கிரதைப் படவேண்டும் என்று சபையாரை எச்சரிக்கிறார் (4 3).

2. திருச்சபையின் ஒற்றுமையை விளைவிக்கும் காரியங்கள் (4 : 4-6)

இந்த ஒற்றுமையை உண்டாக்குவதற்காக திருச்சபை பெற்றிருக்கும் ஆற் றல்களை பவுல் இங்கு குறிப்பிடுகிறார். திருச்சபை மக்கள் ஒரேநம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரே சரீரம், ஒரே ஆவி அவர்களுக்கு உண்டு. ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம்; எல்லாருக்கும் ஒரே பிதா வாகிய தேவன்; அவர் எல்லார் மேலும் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். இத்தனையும் திருச்சபையின் ஒற்றுமையை பிறப் பிக்கும் மாபெரும் சக்திகள். திருச்சபையின் ஒற்றுமையை விளைவிக்க, பிதாவாகிய தேவன் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் இருக்கிறார் என்பது எவ்வளவு ஆச்சரியமான காரியம்!

3. திருச்சபையின் பக்திவிருத்திக்கான காரியங்கள் (4:7 - 16)

திருச்சபையின் பக்தி விருத்தி என்பது அதன் அங்கத்தினர்கள் ஒவ்வொரு வரும் ''கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகுதல்'' (4:11) என்று பவுல் கூறுகிறார். இதற்காக சபையில் அப்போஸ்தலர்களை தீர்க்கதரிசிகளை,

சுவிசேஷகர்களை, மேய்ப்பர்களை, போதகர்ளை கிறிஸ்து ஏற்படுத்துகிறார் (4 : 12, 13). 12ம் வசனத்தில் வரும் ''சீர்பொருந்தும் பொருட்டு'' என்ற தொடர் விசுவாசிகளில் உண்டான கேடுபாடுகளை சரிப்படுத்தும் வேலையைக் குறிக்கிறது. இதுதான் சபை பக்தி விருத்தி அடையச் செய்வதாகும். இதற்காகவே சபையில் அப்போஸ்தலர், மற்றும் ஊழியர்கள் கொடுக்கப்பட்டுள்ளனர். இது எபேசு சபைக்கு மட்டுமல்லாமல் அனைத்து காலத்திலும் உள்ள அனைத்து சபைகளுக்கும் தேவையான அறிவுரை.

4. திருச்சபை அங்கத்தினரின் கடமைகள் (4 : 17 - 6:24)

இந்தப் பகுதியில் கிறிஸ்தவ ஜீவியத்திற்கான கடமைகள் முதலில் கூறப்பட்டுள்ளது (4 : 17 - 5ம்). அடுத்தபடியாக குடும்ப வாழ்க்கையில் செய்யவேண்டிய கடமைகளை பவுல் குறிப்பிடுகிறார் (5 : 21 - 6: 4). வேலை ஸ்தலத்தில் எஜமான்களின், வேலைக்காரரின் கடமைகள் (6:5-9) பற்றிக் கூறுகிறார். இறுதியாக 6 :10 முதல் 24 வரை பிசாசின் வல்லமைக்கு எதிர்த்துப் போராடுவதில் உள்ள திருச்சபை அங்கத்தினர்களின் கடமைகளை எழுதுகிறார். இதனை 'ஆவிக்குரிய யுத்தம்' என்று நாம் அழைக்கிறோம்.

அத்தியாயம் - 13
பிலிப்பியர் நிருபம்

இந்நூலைப் பற்றி

இந்த நிருபத்தில் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்களிடையே இருக்க வேண்டிய ஒரு மனம், ஒற்றுமை குறித்து எழுதுகிறார். அந்த ஒற்றுமை எந்த நிலையிலும் குறைவு படாமல் என்ன தியாகம் செய்தும் அதை அவர்கள் காத்துக் கொள்ள வேண்டும் என்று எபேசு சபைக்குக் கூறியது போல் பிலிப்பி பட்டண விசுவாசிகளுக்கும் பவுல் போதிக்கிறார். இது என்றுமே சபைகளுக்கு தேவையான ஒரு போதனை

பிலிப்பி பட்டணம் ஐரோப்பாவில் உள்ளதால், அங்கு தோன்றிய இந்த திருச்சபைக்கு *(அப். 16 : 9-40)* எழுதப்பட்ட நிருபம் இது. இதன் காரணமாக, யூதரல்லாத கிறிஸ்தவர்கள் பெரிதாக மதித்துப் போற்றிப் படிக்கவேண்டிய ஒரு நிருபம் இது. முழுவேதாகமத் திலேயே இது மிகவும் அழகானதும், பலரால் விரும்பிப் படிக்கப்படுவதுமான புத்தகம். ஆழமான சத்தியங்களைப் போதிக்கும் ஒரு நூலாக இது இல்லாத போதிலும், பவுல் எழுதிய நிருபங்களில் மிக இனிமையான முறையில் மக்களுக்கு சத்தியங்களைப் போதிக்கின்ற ஒரு நூல். அப்போஸ்தலனாகிய பவுலினிடத்தில் பிலிப்பி பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் மிகவும் அன்பு கூர்ந்தபடியால், அவரும் தனது அன்பையெல்லாம் அவர்கள் மீது கொட்டி இக்கடிதத்தை அவர்களுக்கு எழுதுகிறார். இந்த நிருபத்தைப் படிக்கும் போது பவுலின் அன்பு உள்ளத்தை நம்மால் கண்டு கொள்ள முடிகிறது.

இந்நூலின் சிறப்பம்சங்கள்

இந்த நிருபத்தில் பழைய ஏற்பாட்டிலிருந்து எந்த வசனமும் எடுத்தாளப்படவில்லை. 'சந்தோஷம்', 'சந்தோஷமாயிருங்கள்' என்ற வார்த்தைகள் எல்லா அதிகாரங்களிலும் வருவதை நாம் காண்கின்றோம். அது போல 'மனம்' என்கிற சொல் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப் படுகிறது. மூன்றே தடவை தேவனுடைய ஆவியைக் குறித்து பவுல் எழுதுகிறார்: இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினால் *(1:9)*; ஆவியின் ஐக்கியம் *(2 : 1)*; ஆவியினால் தேவனுக்கு

ஆராதனை செய்வது (3 : 3) ஆகிய இப்பகுதிகளெல்லாம் மிக முக்கியமான பகுதிகளாய் இருப்பதை நாம் காண்கிறோம். 3ம் அதிகாரம் 4 முதல் 14 வரை உள்ள வசனங்களில் கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் உண்டாகும் லாபநஷ்டக் கணக்குகளைப் போட்டுக் காண்பிக்கிறார். நமக்கு லாபமாயிருப்பவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணவேண்டும். இப்போது, கிறிஸ்துவை ஆதாயப் படுத்திக் கொண்டதால் விசுவாசத்தினாலுண்டாகும் தேவநீதியைப் பெற்றோம். அவருடைய பாடுகளின் ஐக்கியமும் உயிர்த்தெழுதலின் வல்லமையோடு அவரோடு உயிர்த்தெழுவதற்கான தகுதியும் பெற்றோம். இவைகளெல்லாம் நமக்கு லாபமாய் கிடைத்தவை. இது தான் ஒரு விசுவாசி கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆசீர்வாதங்களைக் கணக்கிட வேண்டிய முறை என்பதை, பவுல் தனது வாழ்க்கையிலிருந்து இந்த நிருபத்தின் மூலம் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். இந்த நிருபத்தில் விசுவாசிகளின் குறைகளை அதிகம் சுட்டிக்காண்பிக்காமல் அவர்களில் உள்ள நன்மையான காரியங்களைப் பாராட்டுகிறார்.

பிலிப்பிப் பட்டணத்து சபை

இந்த சபை உதாரத்துவமாய்க் கொடுக்கிற மக்கள் நிறைந்த ஒரு சபை. பவுலின் ஊழியத் தேவைகளுக்கு அடிக்கடி தாராளமான உதவிகளை இவர்கள் அனுப்பித் தந்துள்ளனர் (4:15,16). பவுல் ரோமப் பட்டணத்தில் சிறை வைக்கப்பட்டதை அறிந்தவுடன் எப்பாப்பிராதீத்துவின் மூலம் பவுலுக்கு பணம் அனுப்பி வைத்தனர் (4 : 10, 18). எப்பாப்பிராதீத்து பவுலிடம் வந்த போது அவன் மரணத்துக்கேதுவான கொடிய வியாதியால் தாக்கப்பட்டான். இதைக் கேள்விப்பட்ட பிலிப்பி சபை மக்கள் மிகவும் மனவேதனை அடைந்தனர். ஆகையால், அவன் சுகமடைந்தவுடன் பிலிப்பி சபைக்கு அதை உடனே அறிவிக்க எப்பாபிராதீத்து அங்கு புறப்படுகிறான். அந்த சமயத்தில் தான் பவுல் இந்த நிருபத்தை எழுதி அவன் கையில் கொடுத்தனுப்புகிறார் (2 : 25 - 28).

இந்நூலை எழுத பவுலுக்கிருந்த இரு நோக்கங்கள்

இதனை எழுதியதில் பவுலுக்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. ஒன்று அவர்கள் அனுப்பிய உற்சாகமான ஈவுகளுக்காக பிலிப்பியருக்கு நன்றி கூறுதல். அடுத்தது அதை விட முக்கியமான ஒரு நோக்கம். எப்பாபிராதீத்து தன்னைப் பார்க்க வந்தபோது அவன் மூலம் பிலிப்பி பட்டணத்து சபையில் ஆரம்பித்திருந்த பிரிவினை குறித்து பவுல்

கேள்விப்பட்டார். இதுவரை சமாதானமாய், மற்றவர்களுக்கு அதிக பிரயோஜனமாயிருந்து வருகிற சபையின் ஆவிக்குரிய வாழ்க்கையில் வந்த சுகக்கேடு நீங்குவதற்கான ஆலோசனைகள் கூற இந்த நிருபத்தை எழுதி எப்பாப்பிராதீத்துவின் மூலம் உடனே அவர்களுக்கு அனுப்புகிறார்.

அடுத்தபடியாக, இந்த சபையில் இரண்டு பெண்கள் முக்கிய நிலை வகித்தனர். இவர்களுக்கிடையில் மனஸ்தாபம் எழுந்தது *(4:2)* குறித்து பவுல் வருந்துகிறார். இந்த மனஸ்தாபத்துக்கான காரணம், கிறிஸ்துவில் ஒருவர் பூரணமடைதலைக் குறித்த சத்தியத்தைப் பற்றி, இவர்களுக்கு இருந்த கருத்து வேறுபாடே. இந்த சத்தியத்திற்கு இச்சபை அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்ததால் நாளடைவில் சர்ச்சைகள் ஏற்பட்டு, சபையில் இதை வைத்து இரண்டு கட்சிகள் ஏற்பட்டுவிட்டன.

இந்த இரு கட்சிகளுக்கும் இடையே மீண்டும் சமாதானத்தையும் ஒருமைப்பாட்டினையும் கொண்டு வர, இந்த நிருபத்தில் பவுல் மிகவும் பிரயாசம் எடுக்கிறார். சபையில் இரண்டு கட்சிகள் இருப்பதாகவே அவர் நினைக்காமல், எல்லாருக்கும் பொதுவாக ''நீங்கள், நீங்கள்'' என்றே இக்கடிதத்தில் ஆலோசனைகளை அவர்களுக்கு எழுதுகிறார். நிருபத்தின் கடைசியில்தான் அந்த இரு சகோதரிகளின் பெயரை 'எயோதியாள்', 'சிந்திக்கேயாள்' என்று குறிப்பிடுகிறார். எவ்வளவு ஞானமாய் பவுல் பிரச்சினைகளைக் கையாளுகிறார் பாருங்கள். அந்த சகோதரிகளுக்கு பெரிய அறிவுரை சொல்லவோ, பிரசங்கம் செய்யவோ அவர் முற்படவில்லை. அதற்குப் பதிலாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மகத்துவம் பற்றிய காரியங்களால் அவர்கள் மனதை நிரப்புகிறார். அவர் தேவனுக்கு சமமாயிருந்தும் அடிமையின் ரூபமெடுத்ததைச் சுட்டிக்காண்பிக்கிறார். கிறிஸ்துவின் சாந்தகுணம், நீடிய பொறுமை என்பதை பற்றி எழுதுகிறார். மிகவும் பயனுள்ள அறிவுரைகள் புத்திமதிகள் இவை. மேலும் அதி. *1 : 27*; அதி. *2 : 1-3*; அதி. *3 : 15, 16*; அதி. *4 : 2* ஐப் படியுங்கள்.

எபேசியர் நிருபத்தில் ஆண்டவருக்கும் சபைக்கும் இருக்க வேண்டிய ஒருமனப்பாட்டினைக் குறித்துப் படித்தோம். பிலிப்பியர் நிருபத்தில் அந்த ஒருமனப்பாடு கெட்டுப் போனால் மீண்டும் அதைச் சீர்பொருந்தச் செய்வது எப்படி என்பதை பிலிப்பி பட்டணத்து சபைக்கு பவுலடியார் கற்றுத் தருகிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது.

பிலிப்பியர் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை ஏழு பிரிவுகளாகப் பிரித்து நாம் படிக்கலாம்.

1. எல்லோருக்கும் பவுலின் வாழ்த்துக்கள் (1 : 1-2)

இந்த நிருபத்தில் மிகவும் அன்புடன் சபையில் உள்ள அனைவருக்கும் வாழ்த்துதல் கூறுவதைக் காணமுடிகிறது. பிலிப்பி பட்டணத்தில், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்களுக்கு, என்பதைச் சிறப்பாக சுட்டிக் காண்பிக்கிறார்.

2. எல்லோருக்குமாக ஜெபிக்கிறார் (1 : 3 - 11)

இந்த ஜெபத்தைப் படிக்கும் போது இதில் பிலிப்பி சபையாருக்காக சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணுகிறேன் என்கிறார். அவர்களுக்காக அவருடைய அன்பையெல்லாம் ஊற்றி ஜெபிக்கிறார். அவருடைய அன்பு காரணமில்லாத அன்பல்ல. அவர்களை சீர் பொருந்தச்செய்வதற்காக அவர்கள் மீது அன்பு செலுத்தி ஜெபிக்கிறார். இயேசு கிறிஸ்துவினால் வரும் நீதியின் கனிகளால் அவர்கள் நிரப்பப் படவும், அவர்கள் பரிசுத்தமாகவும் மற்றவர்களுக்கு இடறல் செய்யாதவர்களாகவும் இருக்கவேண்டும் என்று தேவனிடம் மன்றாடுகிறார்.

3. தனது சிறைவாசத்தால் கிறிஸ்து மகிமைப்பட்டார் என்கிறார் (1 : 12 -30)

தனது சிறைவாசம் கிறிஸ்துவுக்கு மகிமை கொண்டு வந்ததோடு மற்ற கிறிஸ்தவர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஊக்கமளித்தது என்கிறார். ஏராளமான பேருக்கு நற்செய்தி பிரசங்கிக்கப் படலாயிற்று என்றும், சிலர் தகாத நோக்கங்களோடு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கித்தனர் *(1 : 14, 18)* என்பதையும் தெரிவிக்கிறார். 21ம் வசனத்தில் கிறிஸ்துவின் மீது பவுலுக்கிருந்த உன்னதமான அன்பினை அறிய வருகிறோம். பிலிப்பி பட்டணத்துக் கிறிஸ்தவர்களும் ஒருமனப் பாட்டோடு சுவிசேஷத்தை அறிவித்து அதினிமித்தம் பாடுபட்டால் இயேசு கிறிஸ்து அவர்கள் மூலம் மகிமைப்படுவார் *(1 : 22, 29)* என்பதைப் பவுல் அவர்களுக்கு எழுதுகிறார்.

4. கிறிஸ்துவின் அடிமை ரூபமும் மிகுந்த தாழ்மையும் (அதி.2)

இதுபோன்ற கிறிஸ்துவின் காரியங்கள் பிலிப்பியருக்கும் மற்றெல்லாருக்கும் முன்மாதிரியாயிருக்கவேண்டும் என்று எழுதுகிறார் *(2 : 1-5)* . ஏழுவிதமாக இயேசு தம்மைத் தாழ்த்தினதை பவுல் கூறுகிறார். ஆவிக்குரிய பெருமையுள்ளவர்கள் திருந்த, இந்த

ஏழுவகையான தாழ்மை கிறிஸ்துவின் நல்ல முன்மாதிரியாக இருக்கிறது என்று பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு பவுல் எழுதுகிறார்.

5. பிலிப்பிப் பட்டணத்து விசுவாசிகளுக்கு எச்சரிப்புகள் (அதி 3)

கள்ளப் போதகங்கள் சபையில் நுழைந்து விடாமல் பார்த்துக் கொள்ளும்படி எழுதுகிறார் *(3 : 1-3)*. மனுஷ நீதியாகிய சுயநீதியைக் கண்டிக்கிறார் *(3 : 4-6)*. படிப்படியாகத்தான் பூரணத்தை நோக்கி கடந்து போக முடியும் (வ. 12), ஒரே நாளில் பூரணப்படுவது சரியான போதனையல்ல என்பதை பிலிப்பியருக்கு தெளிவுபடுத்துகிறார் *(3 : 7 - 14)*. 1ம் அதிகாரம் 6, 9 வசனங்களையும், 2ம் அதிகாரம் 12, 13 வசனங்களையும் இங்கு சேர்த்துப் படிக்கவேண்டும்.

''வேறு விதமாய் நடக்கிற'' கள்ளப் போதகர்களை அறிந்து அவர்கள் வழிகளைப் பின்பற்றாதபடி பிலிப்பி பட்டண சபை விசுவாசிகளை பவுல் எச்சரிக்கிறார் *(3 : 15 - 19)*.

6. சபையோருக்கு பவுலின் புத்திமதிகள் (4 : 1 - 20)

1 - 3 வசனங்களில் சபை விசுவாசிகள் ஒருமனப் பாட்டோடு ஒரே சிந்தையாயிருக்கும்படி புத்தி சொல்லுகிறார். 4ம் வசனத்தில் ''சந்தோஷமாயிருங்கள்'' என்று பேதங்களை மறந்து ஒருமனப் பாட்டின் ஆவி தரும் சந்தோஷத்தால் நிரம்பும்படி பிலிப்பி சபைக்கு புத்தி கூறுகிறார்.

சாந்தகுணத்தோடு ஒன்றுக்கும் கவலைப்படாமல் இருக்கச் சொல்லுகிறார் *(4 : 4-6)*. அப்பொழுது தேவ சமாதானம் அவர்கள் உள்ளத்தை ஆளும் என்கிறார். 8ம் வசனத்தில் எவைகளை நாம் எப்போதும் மனதில் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நல்லதொரு புத்திமதி கூறுகிறார். எந்த நிலையிலும் மனரம்மியமாய் இருக்க வழி கூறுகிறார் *(4 : 11, 14)*.

7. இறுதியாக ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை கூறுதல் (4 : 21 - 23)

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் கூறுகிறார் பவுல். மற்ற சகோதரர்களும், இராயனுடைய அரமனையிலுள்ள கிறிஸ்தவர்களும் பிலிப்பி சபையாருக்கு வாழ்த்துதல் கூறுவதையும் இங்கு பவுல் எழுதி நிருபத்தை முடிக்கிறார்.

அத்தியாயம் - 14
கொலோசெயர் நிருபம்

கொலோசெ சபையில் தவறான உபதேசங்கள்

பவுல் அப்போஸ்தலர் ரோமப்பட்டணத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தபோது எப்பாப்பிரோதீத்தும் அவரோடு கூட காவலில் அடைபட்டிருந்ததாக பிலமோன் நிருபத்தில் வாசிக்கிறோம் (வ. 23). பவுல் எபேசு பட்டணத்தில் சுவிசேஷத்தை மூன்றாண்டுகள் பிரசங்கித்துக் கொண்டிருந்த நாட்களில், இந்த எப்பாப்பிரோதீத்து சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவின் விசுவாசியாக மாறினவர். கொலோசெயர் சபை பவுல் ஸ்தாபிக்காத ஒரு சபை *(1 : 4, 7, 8; 2 :1)*. எப்பாபிராதீத்து இந்த கொலோசே பட்டணத்து மக்களுக்காக ஜெபித்து, சுவிசேஷம் அறிவித்து இந்த சபையை உருவாக்கியிருக்கவேண்டும் என்று திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர் *(1 : 7; 4 : 12)*.

கொலோசெ சபையில் குழப்பமான உபதேசங்கள் வந்து விட்டதாக எப்பாப்பிரோதீத்துவின் மூலம் பவுல் அறிய வருகின்றார். எத்தகைய தவறான உபதேசம் என்று திட்டமாகத் தெரியவில்லை. ஆனால் இந்த நிருபத்திலிருந்து அதை ஒருவாறு நாம் ஊகிக்கலாம். யூத மத போதனைகள் , அறிவுக் கொள்கைகள், துறவுக் கொள்கைகள், தேவ தூதர்களுக்கு ஆராதனை என்பது போன்ற தவறான உபதேசங்கள் கொலோசெ சபைக்குள் வந்து விட்டன.

அறிவுக் கொள்கையினர், 'கடவுள் நன்மையே வடிவானவர். மாம்சம் அனைத்தும் தீமையானது; தீமையின் மொத்த உருவான மனிதன் பரிசுத்த தேவனோடு உறவு கொள்ள முடியாது; எனவே கடந்து வரமுடியாத பெரும் பிளவு கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ளது' என்ற தவறான போதனையைக் கொடுத்து விட்டு, அந்தப் பிளவுப் பள்ளத்தாக்கை கடந்து செல்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்து விட்டதாக இந்தக் கள்ளப்போதகர்கள் கூறி, கொலோசே சபையைக் குழப்பினார்கள். அவர்கள் கண்டு பிடித்த வழி இதுதான். 'முழுமையும் பரிசுத்தமான கடவுள். படிப்படியாக தம்முடைய பரிசுத்தத்தைக் குறைத்துக் கொண்டே வந்து, இறுதியில் தீமை நிறைந்த ஒரு மனிதனாக, இயேசு கிறிஸ்துவாக உலகில் அவதரித்தார். அப்படித்

தான் கடவுளால் மனிதனோடு உறவு கொள்ள முடிந்தது'' என்றனர். இந்தக் கள்ள உபதேசத்தில் இயேசு கிறிஸ்துவின் மகிமையைக் குறைத்து, தேவனுடைய இரட்சிப்பின் கிரியையில் அவருக்கு ஒரு சிறு பங்கு மாத்திரமே உண்டு என்பது போல கருதி, அவரைப் புறக்கணித்துத் தள்ளுகின்றனர்.

எனவே கொலோசெ சபையில் நிலவிய குழப்பமான இந்த உபதேசங்கள் இயேசு கிறிஸ்துவின் ராஜரீக மகத்துவத்தை பின்னுக்குத் தள்ளி, அவருடைய கர்த்தத்துவமாகிய 'இயேசுவே ரட்சகர்' 'அவரே ஆண்டவர்', 'அவரே தேவகுமாரன்' என்ற சத்தியங்களை அச்சபை விசுவாசிகளை ஏற்க விடாமல் செய்துவிட்டன. மேலும் தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவே எத்தனையோ மத்தியஸ்தர்கள் உண்டு. அதில் இயேசு கிறிஸ்துவும் ஒருவர் என்றும் இந்தக் கள்ளப் போதகர்கள் கொலோசெ சபைக்கு போதித்திருந்தனர்.

இந்த நிருபத்தை பவுல் எழுதிய நோக்கம்

இந்த நிருபத்தை கவனமாக நாம் படித்து வந்தால் இதில் திருச்சபையைப் பற்றி, இயேசு கிறிஸ்துவே அதன் தலைவர் (*அதி. 1 : 18; அதி. 2 : 10, 19*) என்றும், கிறிஸ்தவ விசுவாசியைக் குறித்து, ''தேவன் அவனைத் தமது அன்பின் குமாரனுடைய (இயேசு கிறிஸ்துவினுடைய) ராஜ்யத்திற்கு உட்படுத்தினார்'' என்றும் ''(குமாரனாகிய) அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது'' என்றும் பவுல் திட்டவட்டமாக எழுதுகின்றார். இவ்வாறு கள்ள உபதேசங்களுக்கு மறுப்புக் கூறுவதற்காகவே இந்த நிருபம் பவுலால் எழுதப்பட்டது என்று அறிகிறோம்.

*4*ம் அதிகாரம் *7* முதல் *13* வசனங்களிலே சரியான உபதேசங்களை கொலோசெ சபை விசுவாசிகளுக்குக் கற்றுக் கொடுக்க, தனது உடன் வேலையாட்களான தீகிக்கு (*4 : 7*) ஒநேசிமு (*4 :9*); மாற்கு (*4:10*), யுஸ்து (*4:11*), எப்பாபிராதீத்து (*4 : 12, 13*) என்பவர்களை, கொலோசெ பட்டணத்துக்கு விரைவில் தாம் அனுப்பப் போவதை அறிவிக்கும் நோக்கத்தோடு இந்த நிருபத்தை பவுல் எழுதினார் எனலாம்.

எனவே, இந்த நிருபம் கர்த்தராகிய இயேசுவைக் குறித்த சரியான போதனைகளான அவருடைய இறைத்தன்மை, மகிமை, உயர்த்தப்பட்ட மேலான நிலை என்பவைகளை, கொலோசெ பட்டண விசுவாசிகள் அறிய வேண்டுமென்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

கொலோசெயர் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை I கிறிஸ்தவ உபதேசங்கள் அடங்கிய பகுதி II கிறிஸ்தவ ஜீவியத்திற்கான ஆலோசனைகள் அடங்கிய பகுதி என்று பிரிக்கலாம். அதன் பின்பு இந்த ஒவ்வொரு பகுதியையும் மூன்று மூன்று தலைப்புகளின் கீழ் நாம் படிக்கலாம்.

I கிறிஸ்தவ உபதேசங்கள் (அதி. 1 - அதி 2 : 3)

மூன்று தலைப்புகளின் கீழ் காண்போம்.

1. தேவனுக்கு பவுல் நன்றி ஏறெடுக்கிறார் (1 : 1-8)

கிறிஸ்துவின் மேல் கொலோசெ சபை மக்கள் வைத்திருக்கும் விசுவாசத்திற்காகவும், மற்ற விசுவாசிகள் மேல் அவர்கள் கொண்டிருக்கும் அன்பிற்காகவும் அவர்கள் சார்பில் பவுல் தேவனுக்கு நன்றி ஏறெடுக்கிறார். சுவிசேஷம் அவர்களிடத்தில் நல்ல பலன் கொடுத்ததைக் குறிப்பிட்டு, அதற்காகப் பிரயோசப்பட்ட எப்பாபிராவை அவர்களுக்கு நினைப்பூட்டி, அவர்களைகிறிஸ்துவிடம்வழி நடத்திய அவனுடைய உண்மையான ஊழியத்தைப் பாராட்டுகிறார்.

2. கொலோசெய சபைக்காக ஜெபிக்கிறார் (1 : 9-14)

இந்த சபையோர் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்படவும் அந்த அறிவில் விருத்தியடையவும், அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும், எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் அவர்களுக்காக பவுலும் அவருடைய உடன் ஊழியரும் வேண்டுதல் செய்கிறதை தெரிவிக்கிறார்.

இந்த ஜெபத்தின் முடிவில் இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையை பவுல் அறிக்கை செய்து பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து மகிமைப் படுத்தி அவரை ஆராதிக்கிறார்.

3. இயேசு கிறிஸ்துவின் மேன்மையும் மகிமையும் (1 :15 - 2 : 3)

இந்த நிருபத்தின் உயிர்நாடி போன்ற பகுதி இது. இதில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை நிலைநாட்டி, பயபக்திக்குரிய விதத்தில் கொலோசெ விசுவாசிகள் ஆவியில் பரவசமாகி அவரை பணிந்து கொள்ள செய்கிறார் பவுலடியார். இயேசு கிறிஸ்து, எல்லாவற்றிற்கும் முந்தினவர், சபையாகிய சரீரத்திற்கு தலைவர், எல்லாவற்றிலும் முதன்மையானவர் என்பதை வலியுறுத்திக் காண்பிக்கிறார். மேலும், இறைத்தன்மையில் அவரே அதரிசனமான

தேவனுடைய தற்சுரூபம் தேவனுக்கு சமமானவர் (வ . 15). சகல பரிபூரணமும் அவ ருக்குள்ளே வாசமாயிருக்கிறது (வ . 19) என்று கிறிஸ்துவின் உன்னத நிலையை அவர்களுக்கு உணர்த்துகிறார்.

கிறிஸ்து தான் படைப்பின் காரணர். பிரபஞ்சம் அனைத்தையும் படைத்தவர். அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. அவருக்காகவே சர்வ சிருஷ்டியும் உண்டாக்கப்பட்டது (வ. 16). அவர் தான் சிருஷ்டிகளைத் தாங்குகிறவர். எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது (வ. 17). திருச்சபைக்கு கிறிஸ்துவே தலை என்பதை இந்த நிருபத்தில் பவுல் அதிகமாய் வலியுறுத்துகிறார். அவரே நம்மை இரத்தம் சிந்தி மீட்டு தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்ட ஒரே மீட்பர். நம்மை மட்டுமல்ல பூலோகத்தில் உள்ளவைகள் யாவையும் பரலோகத்திலுள்ள யாவையும் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார் (1 : 20-23).

இந்த நிருபத்தில் சுவிசேஷத்தை ஒரு இரகசியம் என்கிறார் பவுல். ஆதிகாலங்களில் மறைவாயிருந்து, இப்பொழுது பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப் பட்ட இரகசியம் என்றும், கொலோசெயர் போன்ற புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியம், 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக அவர்களுக்குள் இருப்பதே' (1 : 24 - 29) என்றும் பவுல் குறிப்பிடுகிறார்.

II கிறிஸ்தவ ஜீவியத்திற்கான ஆலோசனைகள் அடங்கிய பகுதி

(2 : 4 - அதி. 4 முடிய)

இப்பகுதியையும் நாம் மூன்று தலைப்புகளின் கீழ் படிக்கலாம்.

1. தவறான உபதேசங்களுக்கு விலகும்படி எச்சரிப்பு (வ 4 - 23)

ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடி பார்த்துக் கொள்ளுங்கள் (வ. 4). லௌகீக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தினாலும் ஒருவரும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (வ. 8). பண்டிகை, மாதப்பிறப்பு, ஓய்வு நாள் ஆசரிப்பு ஆகிய வீணான ஆசாரங்களைக் குறித்தும் (வ. 16), தேவதூதர்களுக்கு செய்யும் ஆராதனைகளைக் குறித்தும் (வ. 19), சுயஇஷ்டமான ஆராதனை, மாயமான தாழ்மை, சரீரத்தை ஒடுக்குதல் ஆகியவை பற்றியும் ஒருவரும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (வ. 23). இவ்வாறு கொலோசெ சபையின் தவறுகளை கண்டிக்கிறார்.

2. கிறிஸ்துவோடு ஐக்கியமும் அதன் பலன்களும் (அதி. 3 முதல் அதி. 4 : 6)

கிறிஸ்துவுடனே அவருடைய ஜீவன் பெற்று எழுந்தவர்கள், தேவனுடைய வலது பாரிசத்தில், கிறிஸ்து உட்கார்ந்திருக்கும் இடத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் என்ற உயர்ந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை இந்த நிருபத்தில் கொலேசெ விசுவாசிகளுக்கு நினைப்பூட்டி, அதற்கு ஏற்ற வகையில் உன்னதத்தின் காரியங்களை தேடச் சொல்கிறார் (வ1). இப்போது அவர்களின் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது என்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் (வ.2).

மேலும் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு அவரோடு அவர்கள் ஐக்கியப்பட்டு விட்டதால், வாழ்க்கையில் அவர்களுக்கு கிடைக்கும் பரிசுத்தம் குடும்ப வாழ்க்கையில், வேலை செய்யும் ஸ்தலங்களில், மற்றும் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியம் அவர்களின் நடத்தையில் மாற்றங்களைக் கொண்டு வந்து அவர்களைப் பரிசுத்தப்படுத்திவிடும் (*அதி. 3:4* முதல் *அதி. 4 : 6* வரை) என்கிறார் பவுல்.

3. கொலோசெயருக்கு பவுலின் வாழ்த்துக்கள் (அதி. 4: 7 - 18)

இங்கு பவுல் தன்னோடு ஊழியத்தில் இணைக்கப்பட்ட அநேக ஊழியர்களைக் குறித்தும், அதில் சிலரை கொலோசெ சபைக்கு அனுப்புவதாகக் கூறி, சக ஊழியர்களின் வாழ்த்துக்களையும் தனது வாழ்த்துக்களையும் சேர்த்துக் கூறி இந்த நிருபத்தை முடிக்கிறார்.

அத்தியாயம் - 15

I தெசலோனிக்கேயர் நிருபம்

முதல் முதல் பவுலால் எழுதப்பட்ட நிருபம் தெசலொனிக்கேயருக்கு எழுதின இந்த முதலாம் நிருபமே. இந்த் நிருபத்தை அவர் கொரிந்து பட்டணத்திலிருந்து எழுதினார். கி.பி. 53ல் இது எழுதப்பட்டிருக்கலாம்.

தெசலொனிக்கேயர் சபை

பவுலின் முதலாம் மிஷனெரிப் பயணத்தில் (*அப். 17 : 1-9*), அவர் பிலிப்பி பட்டணத்திற்கு சென்று வந்த பிறகு இந்த சபையை அவர் ஸ்தாபித்தார். தெசலோனிக்கே பட்டணத்தில் சுமார் ஒரு மாத காலம் தங்கி மிகவும் பிரயாசப்பட்டு ஊழியம் செய்தார். அவருடைய சுவிசேஷ முயற்சிகள் சிறப்பானதாக இருந்ததால், ஒரு மாத காலத்தில் சபையை நிறுவினதோடல்லாமல் அதை ஸ்திரப்படுத்தியும் விட்டார். அப்போஸ்தலர் நடபடிகள் *3 : 7* முதல் 9 வசனங்களில் நாம் காண்கிற அந்த முடவன் தனது கால்களும் கரடுகளும் பெலன் கொண்டு, குதித்தெழுந்து, உடனே நடந்து, குதித்து, தேவாலயத்திற்குள் போய் தேவனைத் துதிக்கத் தொடங்கினது போல், இந்த தெலோனிக்கேய சபையின் இளம் விசுவாசிகளும் கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசத்தில் சீக்கிரம் முதிர்ச்சியடைந்து விட்டனர். எனவே பவுலும் அவர்களுடைய முதிர்ச்சி நிலைக்கேற்ப 'திடமான ஆவிக்குரிய உணவை' இந்த நிருபத்தில் கொடுக்கிறார். தேவனால் தெரிந்து கொள்ளப்படுதல் (*1 : 3*), 'பரிசுத்த ஆவி' (*1 :6*), 'திரித்துவம்' (வ. *1, 6*), 'கிறிஸ்துவின் இரண்டாம் வருகை' (*1 : 10*), 'பரிசுத்தம்' (*4 : 1-3*) போன்ற கிறிஸ்துவுக்குள் நன்கு வளர்ந்து விட்டவர்கள் மட்டுமே அறிந்து கொள்ளக் கூடியதாய் இந்த நாளில் கருதப்படும். உன்னத சத்தியங்களையும் உபதேசங்களையும் பவுல் இவர்களுக்கு எழுதுகிறார்.

இந்நிருபம் எழுதப்பட்ட நோக்கம்

சில்வானுவும் தீமோத்தேயுவும் தெசலோனிக்கே சபைக்குப் பவுலால் அனுப்பப்பட்டு, அங்கிருந்து அவர்கள் திரும்பி வந்தவுடன் (*3 : 1,2*) இந்த நிருபத்தை பவுல் எழுதியதாக நாம் அறிய வருகிறோம் (*3 : 6-8*). தெசலோனிக்கே சபை விசுவாசிகள் ஆவிக்குரிய நிலையில்

முதிர்ச்சி அடைந்து வருவதை அறிந்து, பவுல் அதிக சந்தோஷப் படுகிறார். ஆயினும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த விஷயத்தில் அவர்கள் வைத்திருந்த சில தப்பெண்ணங்களைச் சரிப்படுத்தவும் இதனை எழுதுகிறார். உதாரணமாக, மரித்துப் போனவர்களைக் குறித்து, அவர்கள் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கு கொள்ளாமல், சபை எடுத்துக் கொள்ளப்படுமுன் மரித்து விட்டார்களே என்று இச்சபையார் துக்கப்பட்டதாக பவுல் அறிய வந்தார். அதோடு இன்னும் சிலர், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிகச் சமீபமாயிருப்பதால் வேலை செய்வதையே நிறுத்தி விட்டு, அவர் வருவதையே எதிர்நோக்கியபடி சும்மா இருந்து விட்டதாகவும் கேள்விப்படுகிறார் (4 : 13 - 18; 4 : 11, 12). இது பற்றியும் தமது சரியான போதனையை தெசலோனிக்கேயருக்கு எழுதுகிறார்.

புதிய ஏற்பாட்டில் மொத்தம் 260 அதிகாரங்கள் உள்ளன. அவற்றில் கர்த்தரின் வருகையைக் குறித்து 318 தடவை எழுதப்பட்டுள்ளது. எனவே, கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு புதிய ஏற்பாட்டில் எவ்வளவு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதை நாம் அறிகிறோம்.

I தெசலோனிக்கேயர் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை 5 பிரிவுகளாக நாம் படிக்கலாம். இவற்றுள் நான்கு பிரிவுகளில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த உபதேசத்தோடு இப்பிரிவு முடிகிறது.

1. தெசலொனிக்கேயரின் மனமாற்றமும் கர்த்தரின் இரண்டாம் வருகையும் (அதி1)

இப்பகுதியில் கர்த்தருடைய இரண்டாம் வருகை கொலோசெய சபையின் புதிய விசுவாசிகளுக்கு கிறிஸ்துவின் மேல் மென்மேலும் நம்பிக்கை வைக்கத் தூண்டுகிறது என்கிறார். முதலாம் வசனத்தில் வாழ்த்துதல் கூறிவிட்டு 2 முதல் 8 வசனங்களில் தெசலொனிக்கேய சபையாரின் விசுவாசக் கிரியை, அன்பின் பிரயாசம், கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கை ஆகியவற்றில், கர்த்தரைப் பின்பற்றுகிறதிலே மற்ற விசுவாசிகளுக்கு அவர்கள் முன்மாதிரியாயிருப்பது, கர்த்தருடைய வசனத்தை மற்ற இடங்களில் அவர்கள் அறிவிப்பது போன்ற காரியங்களுக்காக பவுல் தேவனுக்கு தோத்திரம் செலுத்துகிறார்.

9, 10 வசனங்களில் இந்த புதிய விசுவாசிகள் சுவிசேஷத்தை ஏற்ற

வுடன் விக்கிரக வழிபாட்டை விட்டு தேவனிடத்திற்கு திரும்பின தையும் தேவகுமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும் எழுதுகிறார்.

2. ஊழியமும் கர்த்தரின் இரண்டாம் வருகையும் (அதி 2)

உண்மையாய் கர்த்தருடைய ஊழியம் செய்பவர்களுக்கு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இன்னும் அதிகமாய் ஊழியத்தில் பெருக உற்சாகமளிக்கிறது என்று, தன்னையே உதாரணமாகக் காண்பித்து எழுதுகிறார். தெசலோனிக்கேயருக்காக அவர் பட்ட பிரயாசம் வீணாகவில்லை (வ 1). எதிர்ப்பு, பாடுகள், நிந்தைகள் மத்தியில் பவுல் தைரியமாய் ஊழியம் செய்து இந்த தெசலோனிக்கே சபையை ஸ்தாபித்தார் (வ. 2). வஞ்சகமாய் இச்சக வார்த்தைகள் பேசி, பொருளாசையால் அவர்களுக்கு அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வில்லை. கடவுளின் நாமம் மகிமைப்படவே பிரசங்கித்தார் (3 - 6). ஒரு தாயைப் போல் அவர்கள் மீது பாசம் வைத்தார் (7 - 9), பரிசுத்த மாய் வாழ்ந்து பிரசங்கித்தார் (10 - 12). அவர் ஊழியம் வெற்றி பெற்றது (13 - 18), தெசலோனிக்கே சபையார் கர்த்தருடைய இரண்டாம் வருகையிலே அவருக்கு 'சந்தோஷமும் மகிழ்ச்சியுமான கிரீடமுமாயிருப்பார்கள்' என்று தமது நிச்சயத்தையும் மகிழ்ச்சியையும் அவர்களோடு பகிர்ந்து கொள்கிறார் (19 - 20).

2. தெசலொனிக்கேயரின் பரிசுத்த வாழ்வும் இரண்டாம் வருகையும் (அதி. 3 - அதி 4 : 12)

இந்தப் பகுதியில் தெசலோனிக்கே சபை விசுவாசிகளுக்கு, கர்த்தரின் இரண்டாம் வருகை பற்றிய எதிர்பார்ப்பு அவர்களை அதிக மதிகமாய்ப் பரிசுத்தப்படுத்திவிடும் என்று நம்பிக்கையூட்டி எழுதுகிறார்.

1 முதல் 4 வசனங்களில் தெசலோனிக்கேயர்களைக் குறித்து அனேகந்தரம் அதிக பாரமுடையவராயிருப்பதை அவர்களுக்கு எழுதித் தெரிவிக்கிறார். 'உபத்திரவங்கள் உங்களுக்கு வருமென்று முன்னறி வித்தோம்'' (வ 4) என்கிறார். ''நீங்கள் (உபத்திரவத்தில்) கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்'' (வ.8) என்று எழுதுகிறார். கர்த்தருடைய வருகையில் 'நீங்கள் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை தேவன் ஸ்திரப்படுத்துவராக'' என்கிறார். 4ம் அதிகாரம் முதல் வசனத்தில்

தெசலோனிக்கே விசுவாசிகள் தேவனுக்குப் பிரியமாய் நடப்பதில் அதிகம் தேர்ச்சியடைய வேண்டும் என்று ஜெபிக்கிறார். *3* முதல் *8* வசனங்களில், நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும், வேசிமார்க்கத்துக்கு விலகி சரீரத்தை பரிசுத்தமாய் காக்க வேண்டும். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைக்கிறார் என்று எழுதுகிறார். *9, 10* வசனங்களின் சகோதர சிநேகத்தைக் குறித்து, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருக வேண்டும் என்கிறார்.

இரண்டாம் வருகைக்காக காத்திருக்கும் விசுவாசிகள் ''சொந்த அலுவல்களைப் பார்க்கவும், சொந்தக் கைகளினால் வேலை செய்யவும்'' வேண்டுமென்று புத்தி சொல்லி எழுதுகிறார்.

4. மரித்துப்போனவர்களுக்கான துக்கமும் கர்த்தரின் வருகையும் (அதி. 4 : 13 - 18)

கர்த்தரின் இரண்டாம் வருகை விசுவாசிகளுக்கு ஒரு ஆறுதலின் நம்பிக்கையை அருளுகிறதாக இப்பகுதியில் பவுல் குறிப்பிடுகிறார். அவருடைய வருகையில் கிறிஸ்துவுக்குள் மரித்த அவருக்குப் பிரியமானவர்கள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள் அவர்களை அவரோடு கூட அவர் கொண்டு வருவார் (வ. *12*). ''பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால் இந்த வார்த்தைகளினாலே ஒருவரை ஒருவர் தேற்றுங்கள்'' *(17 - 18)* என்று விளக்கமளித்து எழுதுகின்றார் பவுல்.

5. விழிப்பாயிருப்பதும் கர்த்தரின் இரண்டாம் வருகையும் (அதி 5)

இரவிலே திருடன் வருகிறது போல் கர்த்தரின் இரண்டாம் வருகை இருக்கும். அமைதியாக கணப்பொழுதில், எதிர்பாராத நேரத்தில் நடந்து விடும். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் அவருக்காக எதிர் பார்ப்போடு காத்திருக்கும் நமக்கு, அவர் ஒரு திருடனைப்போல் வருவதில்லை (வ.*4*), என்று தெசலோனிக்கேயருக்கு பவுலடியார் *6*ம் வசனத்தில் ஒரு நல்ல எச்சரிப்பைக் கொடுக்கிறார். ''மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கக் கடவோம்'' என்கிறார்.

எப்படி விழித்திருக்கவேண்டும் என்பதை *11*ம் வசனம் முதல் *22*ம்

வசனம் வரை விவரித்துக் கூறுகிறார். மேலும் தேவனே அவர்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவார் என்றும் கிறிஸ்துவின் வருகையில் அவர்கள் குற்றமற்றவர்களாய் இருக்கும்படி காத்துக் கொள்வார் (வ. 23) என்றும் கூறி ''உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார்'' (வ. 24) என்று அவர்களுக்கு உறுதி கூறுகிறார்.

தூங்குகிற கிறிஸ்தவர்களைத் தட்டி எழுப்பி, கிறிஸ்துவுக்குள் திடமாய், விழிப்பாய் ஜீவிக்க அவர்களுக்கு எத்தனை பெரிய நம்பிக்கையை பவுல் இங்கே கொலோசெ பட்டணத்து சபையாருக்கு கொடுக்கிறார் பாருங்கள். அவர்களை எவ்வளவாய் உற்சாகப் படுத்துகிறார்.

அத்தியாயம் - 16

II தெசலோனிக்கேயர் நிருபம்

இந்த நிருபம் எழுதப்பட்ட நோக்கம்

முதல் நிருபத்தை எழுதி அனுப்பிய கொஞ்சகாலத்தில் தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு இந்த இரண்டாம் நிருபத்தை எழுதுவதை அவசியமாகக் கண்டார் பவுல். இதற்குக் காரணம் பவுல் அப்போஸ்தலரே எழுதியது போன்ற ஒரு 'போலி' நிருபம் அவர்களுக்கு கிடைத்ததாக பவுலுக்குத் தெரிய வந்தது. இன்னும் வாய்மொழியாக பவுல் சொன்னதாக தவறான உபதேசங்கள் சிலவும் தெசலோனிக்கே சபைக்குக் கிடைத்ததாக அவர் அறிந்தார் (அதி. 2:2). இதனால் அவர்கள், இப்போது மகா பெரிய உபத்திரவ காலத்தில் வாழத் தொடங்கி விட்டதாக தப்பெண்ணம் கொண்டு விட்டனர். ''பெரிதும் பயங்கரமான கர்த்தருடைய நாள்'' வந்து விட்டதாக அவர்கள் நினைத்தார்கள்.

இந்த நிருபத்தின் போதனைகள்

கர்த்தருடைய நாள் வந்து விட்டது என்று குழப்பமடைந்த தெசலோனிக்கே சபையினரை அமைதிப்படுத்தி, அந்தநாள் வருவதற்கு முன் நடக்க வேண்டிய காரியங்களை விளக்கிச் சொல்லு கிறார். முதலாவது, விசுவாச துரோகம் முந்தி நேரிடவேண்டும் (2:3). அடுத்து, கிறிஸ்து தமது மக்களுக்காக வரும் இரகசிய வருகை நடைபெற வேண்டும். அடுத்து, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்படவேண்டும் (வ. 2:3) அவன் கிறிஸ்துவுக்கு எதிர்த்து நின்று தன்னைத்தான் தேவனென்று அறிவிப்பான். கடைசியாக தேவன் தம்முடைய மக்களோடு கூட உலகத்தை (தம்மை விசுவாசியாத மக்களை) கொடிய ஆக்கினைத் தீர்ப்புச் செய்ய வருவார். அதன் பிறகே உபத்திரவ காலம் வரும் (2:2-4) என தெளிவுபடுத்தினார். அவர்களை சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்றார்.

முதல் நிருபத்தில் மரித்த பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் வருகையில் பங்கு கொள்வார்கள் என்றவர், இரண்டாம் நிருபத்தில் கர்த்தருடைய நாளுக்குப் பிறகு தான் அவர்கள் இரண்டாம் வருகை யில் பங்கு பெறுவார்கள் என்கிறார். முதல் நிருபத்தில் கர்த்தரின் வருகை நொடிப் பொழுதில் நடந்து விடும் என்றார். இந்த இரண்டாம்

நிருபத்தில் 'நொடிப் பொழுது' என்றால் 'உடனே' என்று அர்த்தங் கொள்ளக்கூடாது என்று எழுதுகிறார்.

II தெசலோனிக்கேயர் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை நான்கு தலைப்புகளின் கீழ் பகுத்துப் படிக்கலாம்.

1. சபையின் உபத்திரவமும் கர்த்தரின் வருகையும் (1:1-7)

இப்பகுதியில் உபத்திரவத்துக்குள்ளான தெசலோனிக்கே விசுவாசிகளுக்கு கர்த்தரின் இரண்டாம் வருகை ஆறுதலளிக்கும் என்று பவுல் போதிக்கிறார்.

1, 2 வசனங்களில் வாழ்த்துதல் கூறிவிட்டு, *3, 4* வசனங்களில் அவர்கள் விசுவாசத்தையும், உடன் விசுவாசிகள் மேல் உள்ள அவர்கள் அன்பையும் பாராட்டுகிறார். *3-4* வசனங்களில் கர்த்தரின் இரண்டாம் வருகை தெசலோனிக்கே சபையாரை பரிசுத்தத்தில் பெருகவும், விசுவாசத்தில் வளரவும், அன்பில் ஆழமாய் வேரூன்றவும் அவர்களைத் தூண்டுகிறதோடு, அவர்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்க அவர்களைத் தூண்டுகிறது. *5 - 7* வசனங்களில் உபத்திரவப்படுகிற அவர்களுக்கு தேவன் இளைப்பாறுதலையும், அவர்களை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையையும் கொடுப்பார் என்று கூறுகிறார்.

2. மனந்திரும்பாத மக்களும் கர்த்தரின் வருகையும் (1:7 - 12)

இந்தப் பகுதியில் கர்த்தரின் வருகை மனந்திரும்பாதவர்களுக்கு கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு நித்திய அழிவாகிய பயங்கரமான தண்டனையைக் கொண்டு வரும் என்பதைக் கூறுகிறார்.

இந்த வசனங்கள், முழு உலகமும் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும் வரை கர்த்தர் வரமாட்டார் என்ற தவறான உபதேசத்தை பொய்ப்பிக்கின்றன. அவரைச் சிலுவையில் அறைந்தபின் உலகம் அவரைக் காணவில்லை. இப்பொழுது எல்லாரும் பார்க்கும் வகையில் உலகத்திற்கு அவர் தம்மை வெளிப்படுத்துவார். தேவனை அறியாதவர்களுக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்த வருவார். அவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.(வ 10) என்று கூறுகிறார்.

3. விசுவாச துரோகமும் கர்த்தரின் வருகையும் (2 : 1 - 12)

இப்பகுதியில் கிறிஸ்து தம்முடைய ஜனத்துக்காக வருமுன், கேட்டின் மகனாகிய பாவமனுஷன் முதலாவது வெளிப்படுவான். இந்தப் பாவ மனுஷனாகிய அக்கிரமக்காரன் அவருடைய ஜனங்களோடு கிறிஸ்து வரும் போது அழிக்கப்படுவான் என்று பவுல் எழுதுகிறார்.

கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது என்று யாராவது சொன்னால் கலங்க வேண்டாம் என்கிறார் (வ.2). அதற்கான காரணத்தை பின்வரும் வசனங்களில் *(3 - 10)* விவரிக்கிறார். நிருபத்தின் இந்தப் பகுதியில் அந்திக்கிறிஸ்துவைப் பற்றி பவுல் தீர்க்கதரிசனமாக ஒரு முக்கியமான உண்மையைக் கூறுகிறார். ('பாவ மனுஷன்' என்பது எபிரேய பதம். அதன்பொருள் 'பெரிய அக்கிரமக்காரன்' என்பது.)

குறிப்பு :

கர்த்தர் தம்முடைய ஜனத்தை இரகசியமாக எடுத்துக் கொண்டு போகும் வரை அக்கிரமக்காரன் எல்லோருக்கும் வெளிப்பட மாட்டான், எனவே மனிதனின் பாவமே இறுதியில் பாவ மனிதனாக உருவெடுக்கும் என்று ஒரு இறையியல் கருத்து சொல்லப்படுவதுண்டு.

அங்ஙனமே தேவபக்தி என்பதன் இரகசியம் கடவுள் மனிதனாக தம்மைத் தாழ்த்தினது என்றும், அக்கிரமத்தின் இரகசியம் மனிதன் தன்னைக் கடவுளாக உயர்த்தி விடுவது என்றும் மற்றொரு இறையியல் கருத்து உண்டு என்று சொல்லப்படுகிறது.

4. ஊழியமும் கர்த்தரின் வருகையும் (அதி. 3 : அதி. 2 : 13 - 17).

இப்பகுதியில் கர்த்தரின் வருகை தாமதிப்பதன் காரணம், தான் இன்னமும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய சிறப்பான சந்தர்ப்பங்களை தேவன் தனக்குக் கொடுப்பதற்காக என்கிறார் பவுல் *(2 : 13, 14)*.

மேலும் கர்த்தருடைய வருகை கீழ்க்காணும் காரணங்களுக்காகவும் தாமதமாகிறது என்கிறார். முதலாவது தெசலோனிக்கேய சபையார், பவுல் உபதேசித்த உபதேசங்கள் யாவையும் கைக்கொள்வதற்காக *(2 : 15)* கர்த்தர் தாமதிக்கிறார். அடுத்து, கர்த்தருடைய வசனம் எங்கும் பரவி மகிமைப்படுத்துவதற்காக *(3 :1)* அவர் தாமதிக்கிறார். மேலும், கீழ்க்காணும் காரணங்களுக்காகவும் அவர் தாமதிப்பதாகக் கூறுகிறார்.

கர்த்தருடைய ஊழியனாகிய தனக்காகவும், தனது உடன் ஊழியர்களுக்காகவும், தெசலோனிக்கே விசுவாசிகள் அதிகம் ஜெபிப்பதற்காக (வ 2) தாமதிக்கிறார். அவர்களுடைய இருதயங்களை பொறுமைக்கு நேராய் தேவன் நடத்துவதற்காக (வ 5) தாமதிக்கிறார். பவுலைப் போல் தெசலோனிக்கே மக்களுக்கும் மாற்றப்பட்ட மகிமையான ஜீவியம் கிடைப்பதற்காகவும் *(3 : 6 - 14)*, தவறு செய்யும் தங்கள் உடன் விசுவாசிகளை சகோதரர்களாக எண்ணி அவர்களுக்கு அவர்கள் புத்தி சொல்வதற்காகவும் கர்த்தர் தாமதிக்கிறார் என்று பவுல் கூறுகிறார்.

அத்தியாயம் - 17

I தீமோத்தேயு நிருபம்

தீமோத்தேயுவைப் பற்றி

பவுலின் உடன் ஊழியரான இளைஞன் தீமோத்தேயுவை விசுவாசத்தில் தனது உத்தமகுமாரன் என்று பவுல் அழைக்கிறார். தீமோத்தேயுவின் தந்தை ஒரு கிரேக்கர், தாய் ஒரு யூதப் பெண் (அப். 16 : 1). லீஸ்திரா பட்டணத்தில் பவுல் ஊழியம் செய்து கொண்டிருந்த போது இந்த இளைஞன் தனது 15வது வயதில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டான் (1 தீமோ. 1 : 2). ஏழு வருடங்கள் கழித்து தேவகிருபையில் வளர்ந்த பிறகு, ''நல்ல சாட்சியோடு'' கூட பவுலுக்கு உடன் ஊழியனாகி விட்டான் (அப். 16ம் அதி.) பவுலும் தீமோத்தேயுவும் நட்புக் கொண்டதோடு ஒருவருக்கொருவர் ஊழியத்திலும் ஜீவியத்திலும் பயனுள்ளவர்களாய் இருந்தனர் (பிலி. 2 : 22) என்று காண்கிறோம். குறிப்பாக, தகப்பனுக்கு மகன் ஊழியம் செய்தது போல் பவுலுக்கு தீமோத்தேயு உதவியாக இருந்தான்.

இந்நிருபம் எழுதப்பட்ட சூழ்நிலை

ஸ்பானியா நாட்டுக்குப் போகிறதற்கு முன்பு, பவுல் தனது முதல் சிறைவாசத்திலிருந்து வெளிவந்தவுடன் (ரோ. 15 : 24; பிலமோன் 22) மக்கதோனியா, எபேசு ஆகிய பட்டணங்களில் ஊழியம் செய்தார். எபேசுவில் அதிக நாட்கள் அவர் தங்க முடியாததால் தனது ஊழியத்தைத் தொடர்ந்து செய்ய தீமோத்தேயுவை அங்கே விட்டு விட்டு வந்தார். பவுலின் இந்தப் பிரிவு தீமோத்தேயுவுக்கு ஒரு பெரிய உத்திரவாதத்தை கொடுத்து விட்டது (1 தீமோ. 1 : 3; 2 தீமோ. 1 : 4). எனவே 'தீமோத்தேயுவை ஊழியத்தில் உற்சாகப்படுத்தவும் அவருக்கு சில காரியங்களைக் கற்றுக் கொடுக்கவும் இந்த நிருபத்தை கொரிந்து பட்டணத்தில் இருந்து எழுதி அவனுக்கு அனுப்புகிறார். காரணம், தீமோத்தேயு, சரீரத்தில் பலவீனமாயிருந்தான் (5 : 23). ஒரு சிறிய கஷ்டத்தையும் தாங்கிக் கொள்ள முடியாதவன் என்பது பவுலடியாருக்குத் தெரியும்.

இந்த நூலின் தன்மை

தீமோத்தேயு முதலாம் நிருபம், இரண்டாம் நிருபம், தீத்து நிருபம்

ஆகிய மூன்றும் சபை ஊழியர்களுக்கான நிருபங்கள். இவைகள் சபைகளுக்கு எழுதப்படாமல் தனி நபர்களுக்கு எழுதப்பட்டவை. பவுல் எழுபது வயதாயிருந்தபோது இந்த நிருபங்களை எழுதினார். அதனால் கிறிஸ்தவ ஊழியர்களுக்கு, பழுத்த அனுபவசாலியான ஓர் அப்போஸ்தலருடைய அறிவுரைகளும் ஆலோசனைகளும் கட்டளைகளும் இந்த நிருபங்கள் மூலம் கிடைக்க ஏதுவுண்டாயிற்று. எத்தனையோ நூற்றாண்டு காலமாக இந்த நிருபங்களின் மூலமாய் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கான உதவிகளையும் உற்சாகத்தையும் கிறிஸ்தவ ஊழியர்கள் பெற்றுக் கொண்டு வருகின்றனர். சில பிரசித்தி பெற்ற தேவ ஊழியர்கள், வாரம் ஒரு முறை இந்த நிருபங்களைப் படிக்கும் பழக்கமுடையவர்கள்.

இந்த நிருபம் எழுதப்பட்ட நோக்கம்

1 தீமோ. 3 : 15ல் ''தேவனுடைய வீட்டில் நீ நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்'' என்று பவுல் எழுதியதன் நோக்கம், இந்த இளமையான ஊழியக்காரன் தேவனுடைய சபையை நடத்திச் செல்வதில் வளர்ந்து பெருக வேண்டும் என்பதே. ''நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு'' *(4 : 12)* என்று அறிவுரை கூறி பவுல் இந்த நிருபத்தை தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.

I தீமோத்தேயு நிருபம் - ஓர் ஆய்வு

நான்கு தலைப்புகளின் கீழ் இந்த நிருபத்தை பிரித்துப் படிக்கலாம்.

1. ஆரோக்கியமான உபதேசம் குறித்த பவுலின் கட்டளைகள் (அதி.1)

தேவனுடைய கட்டளைப்படியே இந்த நிருபத்தை தாம் எழுதுவதை, முதலாவது தெளிவுபடுத்துகிறார் *(1 : 1-2)*. மக்கதோனியாவுக்கு பவுல் போனபோது எபேசு பட்டணத்தில் தீமோத்தேயுவை தான் விட்டு வந்ததன் நோக்கத்தைக் கூறிவிட்டு *(3,4)*, பின்பு மெய்யான கிறிஸ்தவ அன்பு, விசுவாசம் பற்றி போதிக்கிறார் *(5,6)*. *7* முதல் *11* வரையுள்ள வசனங்களில் நியாயப் பிரமாணத்தை சரியாக அனுசரிப்பது பற்றியும், நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட நோக்கம் பற்றியும் தீமோத்தேயுவுக்குப் போதிக்கிறார். பவுல் தன்னையே உதாரணங் காட்டி, பாவிகள் மீது தேவனுடைய இரக்கம், அவருடைய கிருபை

எப்படி இருக்கிறது என்று போதிக்கிறார் *(13 - 17)*. *18* முதல் *20* வரையுள்ள மூன்று வசனங்களில் தீமோத்தேயுவைக் குறித்து உண்டான தீர்க்க தரிசனங்களை அவனுக்கு நினைப்பூட்டி, விசுவாசமும் நல்மனச் சாட்சியும் உடையவனாயிருக்கும்படி கட்டளை கொடுக்கிறார். அதைச் செய்யாத இமெனே, அலெக்சாந்தர் என்பவர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தில் ஏற்பட்ட பரிதாப முடிவை சுட்டிக்காண்பித்து அவனை எச்சரிக்கிறார்.

2. பொதுவான ஜெபங்களைக் குறித்து பவுலின் போதனைகள் (அதி. 2 : 1-8)

என்னென்ன காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும் *(1 - 3)*, எப்படி ஜெபிக்க வேண்டும் *(வ 8)* என்று தீமோத்தேயு மற்றவர்களுக்கு போதிக்கும்படி பவுல் கற்றுக் கொடுக்கிறார். எல்லா மனுஷருக்காகவும் சிறப்பாக ராஜாக்களுக்காகவும் அதிகாரமுடைய யாவருக்காக வும் ஜெபிக்க வேண்டும்; அது தேவனுக்குப் பிரியம் *(வ 3)*; எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் நாம் ஜெபிப்பது தேவனுடைய விருப்பம் *(வ. 4)*; தேவன் ஏற்படுத்திய இரட்சிப்பின் காரியங்களைப் பிரசங்கிக்க வேண்டும் *(5 - 7)* என்றும் புருஷர்கள் ஜெபிக்க வேண்டிய விதம் பற்றியும் போதிக்கிறார் *(வ 8)*. பின்பு, ஸ்திரீகள் கடைப்பிடிக்க வேண்டிய தகுதியான காரியங்கள் பற்றி *(9 - 12)* அவர்களுக்குப் போதிக்கும்படி பவுல் தீமோத்தே யுவுக்குச் சொல்கிறார்.

3. சபையின் கண்காணிகளுக்கு வேண்டிய தகுதிகள் (அதி. 2 : 9 முதல் அதி 3 முடிய)

குடும்ப ஜீவியத்தில் அவர்கள் எப்படி இருக்கவேண்டும் *(அதி 3 : 2, 4, 5, 11, 12)* என்று கூறுகிறார். அங்ஙனமே எப்படி அவர்கள் இருக்கக் கூடாது என்பதையும் அதி *3 : 3, 6, 7, 8, 10* ஆகிய வசனங்களில் கூறி கண்காணிகளுக்கான தகுதிகளை தீமோத்தேயுவுக்குப்போதிக்கிறார். அப்படிப்பட்டவர்களையே சபைப் பொறுப்புகளில்மூப்பர்களாக உதவிக்காரர்களாக நியமிக்கும்படி கூறுகிறார்.

4. கிறிஸ்தவ ஊழியர்களின் ஆவிக்குரிய பணிகள் (அதி. 4 முதல் அதி 6 வரை)

இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருக்கவேண்டும். கள்ளப் போதகர்களுக்குள் கிரியை செய்கிற வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி சாய்த்து விசுவாசத்தை விட்டு

விலகிப் போகாதிருக்க சரியான போதனைகளை விசுவாசிகளுக்கு ஊழியர்கள் போதித்து எச்சரிக்கும் படி தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கொடுக்கிறார் *(4 : 1-6)*.

வீணான சரீர முயற்சிகளை விட்டு தேவ பக்தியில் பெருகும்படி விசுவாசிகளுக்குக் கட்டளை கொடுப்பதோடு, வார்த்தையிலும் நடக்கையிலும் அவர்களுக்கு தீமோத்தேயு முன்மாதிரியாயிருக்கவும், வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் ஜாக்கிரதையாயிருக்கவும், தேவன் கொடுத்த வரங்களை நினைவில்பதித்துக் கொண்டு அவற்றிலே நிலைத் திருக்கவும் கட்டளையிடுகிறார் *(4 : 7, 8, 9 - 16)*.

சபையிலுள்ளவர்களை அவன் எப்படி நடத்த வேண்டும் என்பதைக் குறித்து 5ம் அதிகாரம் முழுவதிலும் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை களையும் கட்டளைகளையும் வழங்குகிறார். முதிர் வயதுள்ள ஆண்களையும் பெண்களையும் *(1, 2)* எவ்வாறு நடத்த வேண்டும்; முதிர் வயது விதவைகளை, இளம் வயது விதவைகளை எப்படி நடத்த வேண்டும் *(3 - 15)*; சபையிலுள்ள நல்ல மூப்பர்களை எப்படி கனத்துக்குரியவர்களாய் நடத்தவேண்டும்; அவர்களுக்கு விரோதமாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை எப்படி விசாரித்து ஏற்றுக் கொள்வது; பாவஞ்செய்தவர்களை எப்படி கடிந்து கொள்ளவேண்டும் *(17 - 21)* என்றெல்லாம் தீமோத்தேயுவுக்கு பவுல் கற்றுக் கொடுக்கிறார்.

கிறிஸ்தவ எஜமான்களும் வேலைக்காரர்களும் ஒருவருக்கொருவர் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று போதித்து அவர்களுக்கு புத்தி சொல்லும்படி கற்றுக் கொடுக்கிறார் *(6 : 1-2)*. ஆரோக்கியமான உபதேசங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களை, கெட்ட சிந்தனையுள்ள வர்களை, தேவபக்தியை ஆதாயத் தொழிலென்று எண்ணுபவர்களை விட்டு விலகியிருக்கும்படி தீமோத்தேயுவுக்கு பவுல் கட்டளை கொடுக்கிறார் *(6 : 3-5)*. இவ்வாறு ஒரு தேவ ஊழியக்காரன் செய்ய வேண்டிய பல காரியங்களை இந்த 6ம் அதிகாரத்தில் அவனுக்குக் கற்றுக் கொடுக்கிறார். போதுமென்கிற மனதோடு பணஆசை இல்லாமல் வாழ்ந்து, நீதியிலும் தேவபக்தியிலும் அன்பிலும் பெருகச் சொல்கிறார். பொறுமை, சாந்த குணம் போன்றவற்றில் அதிக நாட்டங் கொண்டிருக்கும்படி கூறி தீமோத்தேயுவுக்கு எத்தனையோ நல்லாலோசனைகள் வழங்குகிறார்.

கிறிஸ்தவ ஊழியர்களுக்கு இந்த ஆலோசனைகள் எவ்வளவு தேவை என்பதைப் பார்க்கும் போது, இந்த நிருபம் தேவ ஊழியர்களுக்கு மிகப் பெரிய ஆசீர்வாதமாக அமைந்து விட்டது என்று நாம் கூறலாம்.

அத்தியாயம் - 18

II தீமோத்தேயு நிருபம்

பவுலின் இரண்டாவது சிறைவாசம்

தீமோத்தேயுவுக்கு முதல் நிருபத்தை எழுதிய பிறகு கொரிந்து பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு பவுல் கிரேத்தாதீவு வந்து சேர்ந்தார். கிரேத்தாவிலுள்ள சபையில் சில ஒழுங்குகளைச் செய்வதற்காக தீத்துவை அங்கே விட்டு விட்டு *(தீத்து 1 :5)* நிக்கொப்போலியில் மாரி காலத்தை கழிக்க வந்தார் *(தீத்து. 3 : 12)*.

அங்கிருந்து துரோவாப்பட்டணத்தில் கார்ப்பு என்பவருடைய வீட்டில் இருந்த போது பவுல் கைது செய்யப்பட்டு ரோமபட்டணத்தில் காவலில் வைக்கப்பட்டார். திடீரென்று அவர் கைது செய்யப்பட்டதால் அவர் தனது புத்தகச் சுருள்களையும், அவருடைய மேலங்கிகளையும் கார்ப்புவின் வீட்டில் விட்டு விட்டு வரவேண்டியதாயிற்று. *(2 தீமோ. 4 : 13)*.

முதலாவது சிறைவாசத்தில் பவுல் ஒரு வாடகை வீட்டில் தங்கி ஊழியம் செய்ய அனுமதிக்கப்பட்டார். ஆனால் இப்போது அவர் கடுங்காவலில் வைக்கப்பட்டு விட்டதால் யாரும் அவரைப் போய் பார்க்கமுடியாது. ஒநேசிப்போரு என்பவர் மட்டும் ஆபத்தான சூழ்நிலையில் மிகவும் கஷ்டப்பட்டு, பவுலைப் பார்த்து வந்தார் *(1 :16, 17)*. முதல் சிறைவாசத்தில் நண்பர்கள் அவரைச் சூழ இருப்பார்கள். இப்போது பவுல் தனித்து விடப்பட்டார் *(4 : 10 - 12)*. மரணத்தை எதிர்பார்த்தபடி சிறைக் கொட்டடியில் கிடக்கிறார்.

இந்த நிருபத்தை எழுதுவதில் பவுலின் நோக்கம்

ரோமப் பேரரசன் நீரோவின் முன்பு ஒரு முறை பவுல் விசாரிக்கப் பட்ட பின்பு, விசாரணை ஒத்திப் போடப்பட்டது *(4 : 16, 17)*. மீண்டும் மாரி காலத்தில் பவுல் விசாரிக்கப்படுவதாயிருந்தது. எனவே அவசரமாக இந்த நிருபத்தை தீமோத்தேயுவுக்கு அவர் எழுதுகிறார். தீமோத்தேயுவும், சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தான் (எபி. *13 : 23*). எனவே கார்ப்புவின் வீட்டில் அவர் விட்டு வந்த மேலங்கியையும் தோற்சுருள்களையும் எடுத்துக் கொண்டு மாற்குவை கூட்டிக் கொண்டு உடனே அவரைப் பார்க்க வரும்படி இந்த நிருபத்தில்

எழுதி அனுப்புகிறார் (4 : 9, 11, 13, 21). ஆனால் மழை காலமாயிருந்ததால் தீமோத்தேயு வரமுடியவில்லை. பவுலுக்கான நியாய விசாரணை மாரி காலத்திற்கு முன்பே நடந்து முடிந்து மரண தண்டனையும் நிறைவேறிற்று. அதற்கு முன்பு கள்ளப்போதனைகள் குறித்த எச்சரிப்புகளை அவசரமாக இந்த நிருபத்தில் எழுதி தீமோத்தேயுவுக்குஅனுப்புகிறார். சோர்ந்து போகாமல் உற்சாகமாக தைரியத்தோடு பொறுமையாக தான் விட்டு வந்த ஊழியங்களை நிறைவேற்ற தீமோத்தேயுவை இந்த நிருபத்தில் பவுல் அதிகம் ஊக்குவிக்கிறார்.

இந்த நிருபத்தின் சிறப்பு அம்சங்கள்

இது தான் பவுல் எழுதிய கடைசி நிருபம். தன்னைக் குறித்தும் உடன்ஊழியர்கள் நண்பர்களைக் குறித்தும் பவுல் பேசும் வார்த்தைகள் மிகமிக முக்கியமானவை. கிட்டத்தட்ட 23 நபர்களைக் குறிப்பிட்டுப் பேசுகிறார். இது எதேச்சையாய் எந்த ஆயத்தமுமின்றி எழுதப்பட்ட நிருபம். மிகவும் உணர்ச்சியோடு பழைய சம்பவங்களை நினைவு கூர்ந்து, வருங்காலத்தைக் குறித்த நிச்சயமற்ற எண்ணங்களோடு எழுதுகிறார். ஒரு சிறந்த தேவ ஊழியர் கூறுவது போல், பவுலின் இந்தக் கடைசி நிருபத்தில் அவருடைய இதயத் துடிப்பை நாம் உணர்ந்து விடமுடிகிறது.

II தீமோத்தேயு நிருபம் - ஓர் ஆய்வு

இந்நூலினை கீழ்க்காணும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து நாம் படிக்கலாம்.

1. பாடுகள் நடுவில் கர்த்தருக்கும் அவருடைய சத்தியத்திற்கும் உண்மையாயிருத்தல் (அதி. 1)

சுவிசேஷ ஊழியத்திற்கு தான் அழைக்கப்பட்ட விதத்தையும் தீமோத்தேயுவுக்காக இரவும் பகலும் கண்ணீரோடு தான் ஜெபிப்பதையும் பவுல் எழுதுகிறார் (*1 : 1-3*). தீமோத்தேயுவைக் காண வாஞ்சையாயிருப்பதை 3ம் வசனத்தில் கூறுகிறார்.

தீமோத்தேயுவின் ஆரம்ப கால வாழ்க்கையும் ஊழியமும் விசுவாசமும் 5 - 6 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. நல்ல விசுவாச பரம்பரையிலிருந்து வந்தவன். அவருடைய பாட்டி லோவிசாளுக்குள்ளிருந்து, பின் அவனுடைய தாயார் ஐனிக்கேயாளுக்குள் வளர்ந்து வந்த விசுவாசம், இப்போது

தீமோத்தேயுக் குள்ளும் வந்து விட்டது என்கிறார் (வ. 6). பவுல் அவன் மேல் கைகளை வைத்தபோது, அவனுக்கு தேவனுடைய வல்லமை வரமாகக் கிடைத்ததை நினைப்பூட்டி அதை அனல் மூட்டி எழுப்பி விடச் சொல்கிறார் (வ. 6).

சுவிசேஷத்திற்காக தான் பாடுபட்டதைப் போல் இளைஞனாகிய தீமோத்தேயுவும் பாடுபட வேண்டும் என்று விரும்புகிறார் (வ 6), 7ம் வசனம் முதல் 14ம் வசனம் வரையுள்ள பகுதியில் தன்னைப் போல் தீமோத்தேயுவும் சுவிசேஷத்திற்காக அவன் வெட்கப்படாத ஊழியனாயிருக்க வேண்டும் என்கிறார். தனக்கு உதவி செய்தவர்களைப் பாராட்டுகிறார். அங்ஙனமே அவரைவிட்டு விலகிச் சென்றவர்களையும் துக்கத்தோடு நினைவு கூறுகிறார் (15 - 18).

2. அர்ப்பணிப்போடு ஊழியம் செய்வதில் கர்த்தருக்கு உண்மையாயிருத்தல் (அதி 2)

கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதை ஐந்து சிறிய உவமைகளைக் கொண்டு இப்பகுதியில் தீமோத்தேயுவுக்கு விளக்கிப் போதிக்கிறார். கிறிஸ்தவ ஊழியன் கிருபையில் பலப்படுகிற பலசாலி (வ1); உண்மையுள்ள உக்கிராணக்காரன் (வ. 2); தீங்கனுபவிக்கும் போர்ச் சேவகன் (வ. 3); மல்யுத்த வீரன் (வ5); பிரயாசப்பட்டு பயிரிடுகிறவன் (வ. 6).

அடுத்து இப்பகுதியில் ஒரு கிறிஸ்தவ ஊழியன் செய்ய வேண்டிய நான்கு காரியங்களை பவுல் குறிப்பிடுகிறார் : இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தவர் என்பதை முக்கியமாக அவன் நினைவில் கொள்ளவேண்டும் (வ 8). ஒரு தேவனுடைய ஊழியன் காவலில் கட்டப்பட்டிருக்கலாம். ஆனால் தேவ வசனமோ கட்டப்பட்டிருக்க முடியாது (வ.9) என்பதை அறிய வேண்டும். கிறிஸ்தவ ஊழியர்கள் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் கிறிஸ்து உண்மையுள்ளவர், அவர் தம்மைத்தாம் மறுதலிக்க மாட்டார். அதாவது இயேசு கிறிஸ்து கூடவே இருந்து கிரியை செய்து காரியங்களை நிறைவேற்றுவார் என்பதை விசுவாசிக்க வேண்டும் (வ.13). இது தேவ ஊழியத்திற்கு பலமான அஸ்திபாரம்; கடைசியாக, தேவ ஊழியன் வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறதற்காக அதை ஆழ்ந்து படிக்க வேண்டும் (வ. 15).

16 - 19 வசனங்களில், எவ்வாறு கள்ளப் போதகர்கள் தங்கள் வீண் பேச்சுகளால் அவபக்தியை விசுவாசிகளிடம் உண்டு பண்ணுகிறார்கள்,

அதன் மூலம் பலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, ''ஆகிலும் தேவனுடைய அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது'' என்று விசுவாசிகளை உற்சாகப்படுத்துகிறார்.

20 - 22 வசனங்களில் பலரகமான ஊழியர்களை ஒரு வீட்டில் உள்ள சிலவகையான பாத்திரங்களுக்கு ஒப்புமை சொல்லி அவனவன் செய்யும் ஊழியத்திற்கேற்ற கூலி பெறுவான் என்று கூறுவதன் மூலம் சரியாக ஊழியம் செய்யாதவர்களை மறைமுகமாக பவுல் எச்சரிக்கிறார்.

24 - 26 வசனங்களில் கர்த்தருடைய ஊழியக்காரனுக்கு வேண்டிய முக்கிய குணாதிசயங்கள் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். அவன் சண்டை பண்ணுகிறவனல்ல, சாந்த குணமள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனும் (வ. *24*), எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி, பிசாசினால் பிடிபட்டு இச்சையிலகப் பட்டவர்கள் மயக்கம் தெளிந்து பிசாசின் கண்ணியிலிருந்து தப்பிக்கொள்ள, சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டியவன் என்று தீமோத்தேயுவுக்குப் போதிக்கும் போது, அனைத்து கிறிஸ்தவ ஊழியர்களுக்கும் இருக்க வேண்டிய விலையேறப் பெற்ற குணாதிசயங்களைப் தெளிவு படுத்துகிறார் பவுல்.

3.தேவனை மறுதலிப்பவர்கள் நடுவில் கர்த்தருக்கும் அவருடைய சத்தியத்திற்கும் உண்மையாயிருத்தல் (அதி. 3 முதல் அதி. 4 : 5 வரை)

3: 1 - 9 வசனங்களில் கொடிய காலங்கள் வரும்போது மனிதர்கள் எவ்வளவு தூரம் பொல்லாதவர்களாய் வாழுவார்கள், அதன் மூலம் தேவபக்தியின் வேஷத்தை தரித்து அதன் பெலனை அவர்கள் மறுதலிப்பார்கள் என்பதை எடுத்துக் கூறி, தீமோத்தேயுவை அப்படிப்பட்டவர்களை விட்டு விலகும்படி எச்சரிக்கிறார்.

10 முதல் *17* வசனங்களில் வேத வாக்கியங்களின் மேன்மையை தீமோத்தேயுவுக்குப் போதிக்கிறார்.

இந்த நிருபத்தில், தீமோத்தேயு அறிந்திருந்த இரண்டு காரியங்களை, அதாவது பவுலின் வாழ்க்கை அவனுக்கு முன்மாதிரியா யிருப்பதையும் (வ. *10*), அடுத்து பரிசுத்த வேத எழுத்துக்களை தேவ ஆவியானவர் எழுதித் தந்துள்ளார் என்று தீமோத்தேயு அறிந்திருப்பதையும் (வ. *15*) பவுல் நினைப்பூட்டுகிறார்.

அடுத்து 4ம் அதிகாரம் 1- 6 வசனங்களில் கடைசி நாட்களில் கொடிய

காலங்கள் வரும் போது ஒரு கிறிஸ்தவ ஊழியர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார். சமயம் வாய்த்தாலும் வாய்க்கா விட்டாலும் அவர்கள் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கிக்க வேண்டும். அத்தகைய நேரங்களில் தீமோத்தேயு போன்றவர்கள் மனத்தெளிவோடிருந்து, தீங்கனுபவித்து, சுவிசேஷகனுடைய ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும் *(4 : 5)* என்கிறார்.

பவுல் மூன்று காரியங்களுக்கு தான் 'ஆயத்தமாயிருப்பதை'க் கூறுவதை அவருடைய நிருபங்களில் வாசிக்கிறோம். முதலாவது ரோமர் *1 : 15*ல் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு என்றும் ஆயத்தமாயிருக்கிறார் என்றும் இரண்டாவது அப். *21 : 13*ல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் காவலில் அடைக்கப்படுவதற்கும் மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறார் என்றும் மூன்றாவது, இந்த நிருபத்தில் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போக ஆயத்தமாயிருக்கிறேன் என்றும் எழுதுகிறார்.

4. உண்மை ஊழியர் பவுலோடு யாவராலும் கைவிடப்பட்ட நிலையில் கர்த்தர் இருந்தார் (அதி. 4 : 6 முதல் முடிய)

இந்தக் கடைசிப் பகுதியில் மீண்டும் கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு யுத்தத்திற்குப் போவதைப் போன்றது என்று கூறி நல்ல போர் வீரனைப் போல ஒரு ஊழியன் போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டும் என்கிறார். அடுத்து, கிறிஸ்தவ ஜீவியம் ஓட்டப் பந்தயத்தில் ஓடுவது போன்றது என வருணித்து, வெற்றி பெறும்படியாக அதில் ஓடவேண்டும் என்கிறார். அது ஒரு உக்கிராணப்பொறுப்புமாகும். இந்தப் பொறுப்பை கடைசி வரை பத்திரமாய்க் காத்து அதை நிறைவேற்றவேண்டும் என்கிறார்.

''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்'' என்று ஜெய தொனியிடுகிறார் *(7,8)* பவுல்.

இவ்வளவு தைரியமாகவும் உற்சாகமாகவும் கிறிஸ்துவுக்காக வெற்றி வாழ்க்கை வாழ்ந்த போதிலும், ஒரு மனிதன் என்ற நிலையில் தனிமையைத் தாங்க இயலாமல் தவிக்கிறார் *(9 - 12, 21)*. சில வசதிக் குறைவை உணருகிறார் *(13, 21)*; ஒரு எதிர்ப்பாளன் தீமை செய்ததால் தனக்கு வந்த பாடுகளை எண்ணி வருந்துகிறார் *(14, 15)*. தனது சார்பில்

நியாயத்தை எடுத்துக் கூற யாரும் தனக்கு இல்லை என்று அங்கலாய்க்கிறார் *(16)*.

*17*ம் வசனத்தில் 'கர்த்தர் தனக்குத் துணையாக நின்று ''என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும் புறஜாதியாரெல்லாம் கேட்கிறதற்காகவும் என்னைப் பலப்படுத்தினார்'' என்கிறார். ஓர் ஒப்பற்ற கிறிஸ்தவ ஊழியரின் சாட்சியை இங்கு நாம் படிக்கிறோம்.

*18*ம் வசனத்தில் 'கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்' என்று தேவனைக் குறித்து ஒரு பரிசுத்தவானுக்குள்ள உன்னதமான நம்பிக்கையை அறிக்கையிடுகிறார்.

இந்த நிருபம் கிறிஸ்தவ ஊழியங்களில், ஊழியர்களை சோர்வடையும் நேரத்தில் வெகுவாய் உற்சாகப்படுத்தும் ஒரு சிறந்த நூல்.

அத்தியாயம் - 19
தீத்து நிருபம்

இந்த நிருபத்தைப் பற்றி

இந்த நிருபத்தை பவுல் எழுதியிருக்க முடியாது என்று ஒரு ஐயப்பாடு சிலருக்கு உண்டு. காரணம் இதில் 'கிரியைகள்' பற்றி மிகவும் வலியுறுத்தப்படுகிறது (அதி. 1 : 16; அதி. 2: 7, 14; அதி. 3 :1; 8 : 14) ஆனால் பவுல் தான் எழுதியிருக்கவேண்டும் என்பதற்கு சரியான ஆதாரம் உண்டு (அதி. 3:5). தீமோத்தேயு முதலாம் நிருபமும் தீத்து நிருபமும் பவுலால் ஒரே இடத்திலிருந்து ஒரே சமயத்தில் எழுதி அனுப்பப்பட்ட நிருபங்கள்.

தீத்து என்பவரைப் பற்றி

இவர் பவுலின் ஊழியத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர் (1:4). பவுலின் ஆரம்பகால ஊழியத்தில் இயேசுகிறிஸ்து அருளும் இரட்சிப்பை அடைந்தவர். பவுல் மனமாற்றம் அடைந்து 17 வருடம் கழித்து அவர் தனது முதல் மிஷனெரிப் பயணத்தைத் தொடங்கிய போது, பர்னபாவும் தீத்துவும் பவுலுடன் சென்றதாகப் படிக்கிறோம் (கலா. 2 : 1). இவரையும் தீமோத்தேயுவையும் இவர்களுக்கு எழுதும் நிருபங்களில் ''உத்தம குமாரர்கள்'' என்று அழைக்கிறார். இருவருக்கும் சில வேறுபாடுகள் உண்டு. தீமோத்தேயு யூத வளர்ப்பைப் பெற்றவர்; பவுலினால் விருத்தசேதனம் செய்யப்பட்டவர். ஆனால் தீத்து யூதரல்லாதவர்; விருத்தசேதனம் பண்ணப்படாதவர் (கலா. 2 : 3). தீமோத்தேயுவை விட தீத்து வயதானவர்; கிருபையிலும் அதிகம் வளர்ந்தவர். சரீர பலவீனத்தைக் குறித்தோ, அறநெறி வாழ்க்கையைக் குறித்தோ இவருக்கு எந்த புத்திமதியும் பவுல் இந்த நிருபத்தில் எழுதவில்லை. எனவே, திடகாத்திரமான சரீரமுடையவராக இவர் இருந்திருக்க வேண்டும். அங்ஙனமே வயது காரணமாக பிற விசுவாசிகளிடத்தில் நன்மதிப்பும் பெற்றிருந்திருக்கவேண்டும். எனவே தீமோத்தேயுவுக்கு எழுதினது போல் அறநெறிப் போதனைகளைப் பவுல் இவருக்கு எழுதவில்லை.

கிரேத்தா தீவில் உள்ள விசுவாசிகள் பற்றி

இவர்களைப் பற்றி இந்த நிருபத்தில் பவுல் சில குறைகளை

எழுதுகிறார் (*1 : 12, 13*). இவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும் மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவி சாய்த்து, கிறிஸ்தவ விசுவாசத்தில் பின்னடைந்து போனவர்கள் (*1:14*). மூன்றாம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களைப் படிப்பதிலிருந்து இவர்கள் யாருக்கும் அடங்காதவர்கள் தூஷிக்கிறவர்கள், சண்டை பிடிக்கிற வர்கள், பொறுமையில்லாமல் சீக்கிரம் கொதிப்படைந்து காரியங்களைச் செய்து விடுபவர்கள் என்பதை பவுல் நம்மை அறியச் செய்கிறார்.

இந்த நிருபத்தின் சிறப்பம்சங்கள்

புதிய ஏற்பாட்டில் காணப்படும் மிக முக்கியமான இரு கிறிஸ்தவ சத்தியங்கள் குறித்த போதனைகள் 2ம் அதிகாரம் 11 முதல் 14 வரையுள்ள வசனங்களிலும், 3ம் அதிகாரம் 4 முதல் 7 வரையுள்ள வசனங்களிலும் காணப்படுகின்றன.

பவுல் கொத்தடிமை என்ற அர்த்தத்தில், தான் தேவனுடைய ஊழியக்காரன் என்று தன்னைத்தாழ்த்திக் கூறுவது இந்த நிருபத்தில் தான் காணப்படுகிறது (*1:1*).

இந்த நிருபத்தில் பவுல் புறஜாதிகளின் நூல்களிலிருந்து ஆதாரம் காட்டி சில காரியங்களை எழுதியுள்ளார் (*1 : 12*). இது தவிர அப்போஸ்தலர் நடபடிகளிலும் (*17 : 18*), 1 கொரிந்தியர் நிருபத்திலும் (*15 : 33*) மட்டுமே இப்படி அவர் செய்ததாக நாம் அறிகிறோம்

மேலும் 13 ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்துவின் இரகசிய வருகை குறித்து தெசலோனிக்கேயருக்கு எழுதியது போல், இந்த நிருபத்தில் தான் கிறிஸ்துவின் ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்பே கிறிஸ்துவின் இரகசிய வருகையிருக்கும் என்று எழுதுகிறார் (*2 : 13*).

தீத்து நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை மூன்று முக்கிய பகுதிகளாக நாம் பகுத்துக் காணலாம்.

1. சபை ஒழுங்கினை வலியுறுத்தும் பகுதி (அதி 1)

தீத்துவுக்கு வாழ்த்துதல் கூறுவதோடு தனக்கு தேவன் கொடுத்த ஊழியத்தையும் அதன் நோக்கத்தையும் இதில் பவுல் கூறுகிறார் (*1 - 4*).

5ம் வசனம் இந்தப் பகுதியின் முக்கிய வசனம். இது தீத்துவுக்கு பவுல் கொடுத்த பொறுப்பைக் கூறுகிறது. குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும் படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்ட

படியே பட்டணங்கள்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தும் படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேன் என்று நினைப்பூட்டி எழுதுகிறார் (1 : 5).

சபைகளில் மூப்பரை ஏற்படுத்தும் போது தீத்து எப்படிப்பட்டவர்களை இப்பொறுப்புகளில் நியமிக்க வேண்டும் என்று அதற்கான தகுதிகளை 6 முதல் 9 வசனங்களில் பவுல் கூறுகிறார். 10 முதல் 16 வசனங்களில் கிரேத்தா தீவாரைப் பற்றி பொதுவாகவும் விசுவாசிகள் பற்றி குறிப்பாகவும், அவர்களிடம் காணப்படும் பயங்கரமான குணக்கேடுகளையும் குறைகளையும் எடுத்துச் சொல்லி தீத்து அவர்களைக் கண்டிப்பாய் கடிந்து கொண்டு புத்தி சொல்ல வேண்டும் என்கிறார். 15, 16 வசனங்கள் அநேக விசுவாசிகளுக்கும், ஏன் ஊழியர்களுக்கும் கூட, கிறிஸ்தவ ஜீவியத்திலும் ஊழியத்திலும் சபை நிர்வாகக் காரியங்களிலும் நல்ல புத்திமதிகளாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

2. சரியான உபதேசங்களின் மேல் சபைகள் கட்டப்பட பவுலின் வலியுறுத்தல் (அதி. 2)

தீத்துவுக்கு ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் போதித்து சபையைக் கட்டும்படி எழுதுகிறார் (வ 1). நற்கிரியைகளுக்கு மாதிரியாக இருக்கவும் (வ 7), உபதேசத்தில் விகற்பமில்லாதபடி, ஆரோக்கியமான வசனத்தைப் பேசவும் (வ 8), சகல அதிகாரத்தோடும் போதித்து கடிந்து கொள்ளச் சொல்லி (5 : 15) எழுதுகிறார்.

2, 3 வசனங்களில் முதிர் வயதுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுக்கவேண்டிய போதனைகளைக் குறிப்பிடுகிறார். 4-6 வசனங்களில் இளவயதுள்ள ஆண்கள் பெண்களுக்கான புத்திமதிகளை பவுல் எழுதுகிறார். 9 - 10 வசனங்களில் வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களிடம் நடந்து கொள்ளவேண்டிய விதம் பற்றி தீத்து அவர்களுக்கு செய்ய வேண்டிய போதனைகளை எழுதுகிறார்.

11 முதல் 14 வசனங்களில் மொத்த சுவிசேஷத்தின் போதனைகளை தொகுத்து அவற்றையே மற்றவர்களுக்கு போதிக்கும்படி தீத்துவுக்கு அவைகளை கற்றுக் கொடுக்கும் வகையில் எழுதியுள்ளார்.

3. நற்கிரியைகளில் விசுவாசிகள் பெருகும்படி பவுல் போதிக்கிறார் (அதி. 3)

எந்த ஒரு அரசாங்கத்தின் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்

கிரேத்தா சபை விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்கச் சொல்கிறார். *(வ. 1)*. ஒரு கிறிஸ்தவன் முன்மாதிரி யான நாட்டுப்பிரஜையாயிருக்க வேண்டும். கிரேத்தா தீவின் மக்கள் சுபாவப்படி அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்கும் மக்கள். கி.மு. 67ல் ரோமர்களுக்கு அடிமைப்படுமுன் இவர்கள் ஒரு சுதந்திர நாடாக, சுதந்திர இனமாக இருந்தவர்கள். எனவே அடிக்கடி அரசாங்கத்துக்கு விரோதமாய் வெகுண்டு எழுவார்கள் என்பதை பவுல் அறிந்திருந்தார். எனவே கிரேத்தா விசுவாசிகள் சண்டை பண்ணாமல், தூஷியாமல், எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்க வேண்டும் என்று தேவ ஊழியக்காரனாகிய தீத்து அவர்களுக்கு புத்தி சொல்லவேண்டும் என்று எழுதுகிறார். முற்காலத்தில் இருந்த நிலைமையை நினைத்து நல்ல நடத்தை உள்ள கிறிஸ்தவர்களாயிருக்கவேண்டும் என்கிறார் *(வ 3)*.

4 - 7 வசனங்களில் சுவிசேஷம் மக்களில் நடப்பிக்கும் அற்புத மாற்றத்தைக் குறித்து தீத்துவிடம் பவுல் பேசுகிறார். அருமையான இரட்சிப்பின்சத்தியமாகிய இந்த சுவிசேஷம் உண்மையாயிருப்பதால் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் நற்கிரியைகளைச்செய்ய ஜாக்கிரதைப்படவேண்டும் *(வ 8)* என்கிறார். ஒரு நல்ல விசுவாசி, தர்க்கங்களையும் வாக்கு வாதங்களையும் விட்டு விலக வேண்டும் *(9)* வேதப் புரட்டர்களை விட்டு விலக வேண்டும் *(10)*

மற்றும் சில காரியங்களைச் செய்யும்படி தீத்துவுக்கு சொல்லி முடித்து வாழ்த்துதல் கூறி ஆசீர்வாதத்துடன் நிருபத்தை முடிக்கிறார்.

அத்தியாயம் - 20

பிலமோன் நிருபம்

தனிப்பட்ட நபருக்கு எழுதப்பட்ட நிருபம்

இது தனிப்பட்ட முறையில் பிலமோன் என்ற தனது நண்பருக்கு பவுல் எழுதிய நிருபம். பவுலின் மிகச்சிறிய நிருபம். தனிநபர்களுக்கு அவர் எழுதிய வேறு நிருபங்கள் எத்தனையோ இருந்திருக்கலாம். ஆனால் இந்த ஒன்றுதான் பத்திரப்படுத்தப்பட்டு நம் கைகளில் கிடைத்துள்ளது. இது ஒரு அருமையான ஆவிக்குரிய நிருபம்.

இந்த நிருபத்தில் வரும் நிகழ்ச்சி

பிலமோன் என்பவர் கொலோசே சபையின் ஒரு முக்கிய உறுப்பினர். ஒநேசிமு என்ற ஒருவன் அவரிடத்தில் அடிமை வேலை செய்து வந்தவன். தனது எஜமானாகிய அவருடைய வீட்டில் பணத்தை திருடிக் கொண்டு ஒநேசிமு ரோமப் பட்டணம் வந்து சேர்ந்தான். தெய்வாதினமாக அவன் பவுலைச் சந்தித்து அவர் மூலம் கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக் கொண்டு விட்டான். அத்துடன் பவுலுக்கு அன்பாக சேவை செய்து அவருக்கு மிகவும் பிரியமானவன் ஆகி விட்டான். பிலமோனுக்கு சட்டப்படி ஒநேசிமு அடிமையாயிருப்ப தால் பிலமோனின் சம்மதமின்றி பவுல் அவனைத் தனக்குப் பணிவிடை செய்ய வைத்துக் கொள்ள முடியாது. அப்படி வைத்துக் கொள்வது சட்டவிரோதமான செயல்.

பவுலுக்குள்ள பிரச்சினை

பிலமோனை விட்டு ஓடிவந்து விட்டதால், ரோமச் சட்டப்படி ஒநேசிமு அடைய வேண்டிய தண்டனையிலிருந்து அவனைத் தப்புவிக்க பவுல் விரும்பினார். எனவே பிலமோனை சாந்தப்படுத்தி இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க பவுல் முற்படுகிறார். அவன் செய்த குற்றத்தை அவர் மன்னித்து மறந்து, குற்றவாளியான ஒநேசிமுவை பிலமோன் மீண்டும் தன் வீட்டில் வைத்துக் கொள்ள அவரிடம் பரிந்து பேசுகிறார். இதனை எப்படி செய்து முடிப்பது? இது தான் இந்த முதிர் வயதில் பவுல் அப்போஸ்தலனுக்கு எழுந்த பெரிய பிரச்சினை.

இதற்கு பவுல் கையாண்ட முறை

கோபமாயிருக்கிற பிலமோனை அவருடைய அடிமையாகிய ஒநேசிமு தனியாகப் போய்ப் பார்த்துப் பேசுவது நன்மை பயக்காது என்று எண்ணிய பவுல் தீகிக்கு என்றதனது உடன் ஊழியரை (கொலோ 4 : 7) ஒநேசிமுவின் சார்பில் பிலமோனிடம் பேச அனுப்புகிறார். அதற்காக இந்த நிருபத்தை எழுதி அதை ஒநேசிமுவைக் கொண்டு போகச் செய்கிறார். எனவே இந்த நிருபத்தை மிகவும் ஞானமாக மனத் தாழ்மையோடு பவுல் எழுதியிருக்கிறார். இதைப் படித்த பிறகு ஒநேசிமு என்ற குற்றவாளியை தான் மன்னிக்காமல் இருக்க முடியாத நிலைமையை பிலமோனுக்கு உண்டு பண்ணி, ஒநேசிமுவை அவர் மன்னிக்கத் தக்கதாக கொலோசெ பட்டணத்து முழுச் சபையாருக்கும் கூடச் சேர்த்து இந்த நிருபத்தை எழுதி விட்டார் பவுல் (கொலோ 4 : 9 ஐ பார்க்கவும்).

பிலமோன் நிருபம் - ஓர் ஆய்வு

இதைப் படிக்கும் போது இந்த நிருபத்தை 4 பகுதிகளாகப் பிரிக்க முடியும் என்று தோன்றுகிறது. பவுல் பிலமோனை முதலில் வாழ்த்துகிறார் (1 -3). அடுத்து, பிலமோனுடைய குணவியல்புகளைக் குறித்து பவுல் அவனைப் புகழ்கிறார் (4 -7). அதன் பிறகு, பிலமோனிடம் ஒநேசிமுவை ஏற்றுக் கொள்ளும்படி பவுல் மன்றாடுகிறார் (8 - 21). கடைசியாக பிலமோனுக்கு மீண்டும் வாழ்த்துதல் கூறி கடிதத்தை முடிக்கிறார் (22 - 25).

இந்த நிருபத்தின் சிறப்பம்சங்கள்

1. பவுலின் குணாதிசயத்தை இது வெளிப்படுத்துகிறது

பொதுவாக ஒருவன் தன்னுடைய பேச்சில், எழுத்தில் சிறந்த ஓர் மனிதனாக பிறருக்குத் தோன்றலாம். ஆனால் அவன் எழுதும் தனிப்பட்ட கடிதங்கள் அவனுடைய உண்மையான குணத்தை வெளிப்படுத்திவிடும் என்பார்கள். ஆனால் இந்த நிருபத்தைப் படிக்கும்போது, எல்லாவற்றிலும் ஒரே சீராக பவுலின் குணநலன்கள் இருப்பதைக் காண்கிறோம். யாரும் விரும்பத்தக்க விதத்தில் தாழ்மை பரிசுத்தம், அன்பு நிறைந்தவரும், தன்னல மின்றி வாழ்ந்தவருமாக பவுலை இந்த நிருபத்தில் காண முடிகிறது.

2. ஞானமாக செயல்படும் பவுலின் திறமையை இது வெளிப்படுத்துகிறது

சிறையில் "கட்டப்பட்டிருக்கிற" தமது நிலையை இருமுறை (வ 1, வ 8) கூறி, பிலேமோனின் இதயம் நெகிழுமளவுக்கு ஒநேசிமுவுக்காக கெஞ்சுகிறார். அங்ஙனமே பிலேமோனின் குணநலன்களையும் எடுத்துக் கூறுகிறார் (4 - 7). பிலேமோனின் மனதை மாற்றும் வரை ஒநேசிமுவின் பெயரைக் கூறாமல் எழுதிக் கொண்டு போகிறார். ஒரு அப்போஸ்தலன் என்ற அதிகாரத்தோடு எழுதாமல், ஒரு ஆத்ம நண்பனாகப் பிலேமோனிடம் ஒநேசிமுவுக்காகப் பரிந்து பேசுகிறார் (8, 9, 20). ஒநேசிமுவை 'தனது மகன்' என்று அழைத்து (10) பிலேமோனிடம் அவனுக்கு தயவு காட்டும் படி மன்றாடுகிறார். ஒநேசிமுவின் குற்றத்தை பவுல் ஒப்புக் கொள்கிறார் (11). அதனால் பிலேமோனுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை திருப்பிக் கொடுப்பதாகவும் வாக்குப் பண்ணுகிறார் (18, 19). முன்பு அவருக்கு பிரயோஜனமில்லாமல் இருந்த ஒநேசிமு, இனி அவருக்கும் தனக்கும் பிரயோஜனமாயிருப்பான் என்று அவனுடைய நடத்தைக்கு உத்திரவாதம் கொடுக்கிறார் (13). இன்னும் ஞானமாக சரியான வார்த்தைகளைத் தெரிந்தெடுத்து பிலேமோனுக்கு எழுதுகிறார். 'ஓடிப் போனான்' என்ற பதத்தை பயன்படுத்தாமல் 'பிரிந்து போனான்' என்று எழுதுகிறார். அதிலும் கொஞ்சக் காலம் பிரிந்து போனானாக்கும் என்கிறார். ஒநேசிமுவின்மேல் பிலேமோன் கசப்புக் கொள்ளாமல் இருக்கும்படியான சொற்களைப் பயன்படுத்தி, அவரை மனமிரங்கச் செய்கிறார். 22ம் வசனத்தில், பிலேமோனுடைய ஜெபத்தினால் பவுல் விடுதலையாகி அவரோடு வந்து தங்கப் போவதாக நம்பிக்கை தெரிவித்து, தன் மீதும் ஒநேசிமுவின் மீதும் அதிக அன்பு அவருக்கு உண்டாகச் செய்கிறார்.

3. சமுதாய மாற்றங்களை 'சுவிசேஷ முறை'யில் கொண்டு வர, பவுல் நல்ல முன்மாதிரி காட்டுகிறார்

சமுதாயத்தில் அடிமைப்பட்டு அல்லல்படும் மக்களை விடுவித்து நல்வாழ்வு பெறச் செய்ய, இந்தப் பவுலின் 'சுவிசேஷ முறை' நல்லதொரு முறை என்பதை இந்த நிருபம் கற்றுத் தருகிறது. 16, 17 வசனங்களில் அடிமையாகிய ஒநேசிமுவின் காரியத்திற்காக பரிந்து பேச பவுல் பயன்படுத்தும் வார்த்தைகள் இரும்பு போன்ற கடின இருதயங்களையும் நொறுக்கி விடும். பரிந்து பேசுதல் கூடுதலாக

காரியங்களை சாதித்து விடும் என்பதைப் பவுல் எல்லோருக்கும் போதிக்கிறார். ஆவியானவரின் அன்பின் வல்லமைக்கு மேலான வல்லமை இல்லை என்பதை இந்த நிருபம் நன்கு போதிக்கிறது.

4. நம்முடைய ஆத்ம இரட்சிப்பு ஒநேசிமுவின் விடுதலைக்கு ஒப்பானது

இந்த நிருபத்தில் சொல்லப்பட்ட நிகழ்ச்சி ஒரு உபமானக்கதையாக எடுத்துக் கொண்டு இரட்சிப்பை பிரசங்கிக்க உதவும். ஒரு பாவி தேவனுக்குச் சொந்தமானவன். அவன் தனது எஜமானாகிய தேவனை விட்டு ஓடி விட்டான். அது மட்டுமல்ல அவரைக்கொள்ளையடித்து விட்டு ஓடி விட்டான். அவன் எதிர்பார்த்த நியாயப் பிரமாணம் அவனுக்கு அடைக்கலம் கொடுக்க முடியவில்லை. ஆனால் கிருபை தேவனிடம் மீண்டும் சேர உரிமை கொடுத்தது. தேவனுக்கு பங்காளரான இயேசுவிடம் அடைக்கலம் தேடி ஓடுகிறான். அவரில் அவன் புதுப்பிறப்படைகிறான். அவனுக்காகப் பரிந்து பேசுகிறவராக இயேசு இருக்கிறதைக் கண்டு கொண்டபோது, தேவனிடம் மகிழ்ச்சியோடு திரும்பி வருகிறான். இப்பொழுது தேவன் அவனை அடிமையாக அல்ல, கிறிஸ்துவைப் போல தனது சுதந்திரனாக ஏற்றுக் கொள்கிறார். அவனுடைய பாவ அக்கிரமக் கடன்களையெல்லாம் கிறிஸ்து தன் கணக்கில் ஏற்றுக் கொள்கிறார்.

பிலமோன் நிருபம் ஆவியானவர் துணையோடு பவுல் அப்போஸ்தலனால் எழுதப்பட்ட அற்புதமான ஒரு ஆவிக்குரிய படைப்பு.

அத்தியாயம் - 21
எபிரேயர் நிருபம்

இந்நூலாசிரியர் யார்?

அலெக்சாண்டிரியா பட்டணத்து தந்தை பாண்டேனு இந்த நிருபத்தை அப்போஸ்தலர் பவுல் தான் எழுதினார் என்று உறுதியாகக் கூறுகிறார். கார்தேஜ் பட்டணத்தைச் சேர்ந்த தந்தை தெர்த்துலு என்பவர் பர்னபாவை இந்த நிருபத்தின் ஆக்கியோன் என்கிறார். மார்டீன் லூத்தர் அப்பெல்லோ என்பவர் இதை எழுதினார் என்கிறார். கேம்பல் மார்கன் என்பவர், இது பவுலுடைய சிந்தனையில் பிறந்து லூக்காவின் பேனாவால் எழுதப்பட்ட நிருபம் என்று, எபிரேயர் நிருபத்தைப் பற்றி கூறுகிறார். டாக்டர் ஸ்கோபீல்டு என்பவர், ஜெப ஆலயங்களில் பவுல் செய்த பிரசங்கங்களின் தொகுப்பு இந்நூல் என்கிறார். ஆனாலும், அநேகர் பவுல் தான் எழுதியிருக்க வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இது எழுதப்பட்ட காலம் கி.பி. 64 ஆக இருக்கவேண்டும். காரணம் இது எழுதப்படும் போது தேவாலயம் இருந்ததாக இந்நூல் குறிப்பிடுகிறது.

எழுதப்பட்ட நோக்கம்

கிறிஸ்துவின் நிமித்தம் தாங்கொண்ணா கொடிய உபத்திரவம் நேரிட்டதால், யூதக் கிறிஸ்தவர்கள் தாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதால் பழைய யூத மத சிலாக்கியங்களை எல்லாம் (பலி பீடம், ஆசாரிய முறைமைகள் என்பவற்றையெல்லாம்) இழந்து போனதாக எண்ணத் தொடங்கி விட்டனர். கிறிஸ்தவ சிலாக்கியங் களைக் குறைத்து மதிப்பிட ஆரம்பித்தார்கள். உபத்திரவத்தையே எண்ணி எண்ணி கிறிஸ்துவை விட்டு அநேகர் பின்மாற்றம் அடைந்தனர். இந்த நிருபத்தை எழுதியவர், இப்படிப்பட்ட விசுவாசி களிடம் இருந்த குறைபாடுகளை சரிப்படுத்த முயன்றார் எனலாம்.

ஆக்கியோனின் திறமையான படைப்பு

இந்த நிருபத்தின் ஆக்கியோன் சத்தியங்களை திறமையாய் எழுதி உபத்திரவப்பட்டு நம்பிக்கையிழந்து நிற்கும் கிறிஸ்தவர்

களுக்கு அதிக நம்பிக்கையூட்டுகிறார் என்பதை நம்மால் காண முடிகிறது.

முதலாவது கிறிஸ்துவின் ஆள்தத்துவத்தின் மகிமையையும் அவருடைய கிரியையின் மேன்மையையும் உபத்திரவப்படுகிற கிறிஸ்தவர்களுக்கு எடுத்துக் கூறுகிறார்.

இரண்டாவது எல்லாவற்றையும் இழந்து விட்டதற்குப் பதிலாக அவர்கள் எல்லாவற்றையும் உடையவர்கள் என்பதை அவர்கள் மனதில் பதியவைக்கிறார். ''நாம் எல்லாம் உடையவர்களாயிருக்கிறோம்'' என்று இந்த நிருபத்தில் பலமுறை வருகிறது *(4 : 14; 8:1; 10 : 3; 13:10,14)* அதோடு கூட அவர்களின் கிறிஸ்தவ விசுவாசம், யூதமத விசுவாசத்தைக் காட்டிலும் மேலானது. அது மாத்திரமல்ல எபிரேய விசுவாசிகள் மற்றவர்கள் அனுபவித்த பாடுகளை விட குறைவான பாடுகளையே அனுபவிக்கிறார்கள் என்று தெளிவுபடுத்துகிறார். ரோமர் நிருபம் கிறிஸ்தவ விசுவாசத்தின் அவசியத்தை நன்கு குறிப்பிடுகிறது போல், இந்த எபிரேயர் நிருபம் கிறிஸ்தவ விசுவாசத்தின் மேன்மையை நன்றாக நிலைநாட்டுகிறது. இந்த நூலின் ஆசிரியர் பழைய ஏற்பாட்டு காரியங்களைக் குறைத்து மதிப்பிடாமல், புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டின் நிறைவேற்றம் என்பதைக் காண்பிக்கிறார். இஸ்ரவேலர் பழைய உடன்படிக்கை முறைமையில் நல்ல பல காரியங்களைப் பெற்றிருந்தனர். நாமோ இப்போது அதைவிட சிறந்த வைகளைப் பெற்றிருக்கிறோம் என்கிறார். எபிரேயர் நிருபம் ''ஐந்தாவது சுவிசேஷம்'' என்று அழைக்கப்படுகிறது. மற்ற நான்கு சுவிசேஷங்களும் கிறிஸ்து பூமியில் செய்து முடித்த கிரியைகளைக் கூறுகிறது. ஆனால் எபிரேயர் நிருபம் பரலோகத்தில் இப்போது அவருடைய கிரியைகளைக் கூறுகிறது.

எபிரேயர் நிருபம் - ஓர் ஆய்வு

இதனை கிறிஸ்துவின் மேன்மையை நிலைநாட்டும் பகுதி என்றும் அதனால் நாம் செய்ய வேண்டியவைகளைக் கூறும் பகுதி என்றும் பிரித்துக் காணலாம்.

I. கிறிஸ்துவின் மேன்மையை நிலைநாட்டும் பகுதி (அதி. 1 முதல் அதி 10 : 18 வரை)

இதில் கிறிஸ்துவின் மகிமையான ஆள்தத்துவமும் வேலையும் பற்றி கூறப்பட்டுள்ளது. இப்பகுதியை 5 தலைப்புகளின் கீழ் மேலும் பகுத்து நாம் ஆராய்ந்து படிக்கலாம்.

1. தீர்க்கதரிசிகளிலும் இயேசு கிறிஸ்து பெரியவர் (1:1-3)

முதல் அதிகாரம் முதல் மூன்று வசனங்களில் இயேசு கிறிஸ்துவை தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் பெரியவர், உயர்ந்தவர், மேலானவர் என்று இந்த நிருபத்தின் ஆக்கியோன் காண்பிக்கிறார். தீர்க்கதரிசிகள் பெரியவர்கள் தான். ஆனால் தேவகுமாரன் அவர்களை விட மிக உயர்ந்தவர் என்கிறார். காரணம் அக்காலங்களில் தேவன் தமது தீர்க்க தரிசிகள் மூலமாய் பேசினார். இப்பொழுதோ குமாரன் மூலமாய், அவரில் இருந்து கொண்டு தேவன் பேசுகிறார். இயேசு கிறிஸ்துவே முடிவான தேவனுடைய வார்த்தை என்பது இதைத்தான் கூறுகிறது.

3ம் வசனத்தில் ''உன்னதமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்'' என்று நாம் படிக்கிறோம். இந்த 'உட்கார்ந்தார்' என்பதற்கான எபிரேய பதம், ஒருவர் கொடுத்த பணியை பூரணமாய் செய்து முடித்ததை குறிக்கின்றது.

2. தேவ தூதர்களைக்காட்டிலும் மேன்மையுள்ளவர் (1:4 - அதி.2)

இந்த பதினோரு வசனங்களில் தொடர்ந்து இயேசு கிறிஸ்துவின் மேன்மையை ஆக்கியோன் கூறும் போது, அவர் தேவதூதர்களைவிட உயர்ந்தவர் என்கிறார். தேவதூதர்கள் விசேஷமான படைப்புதான். ஆனால் இயேசு கிறிஸ்து அவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர். ஏனென்றால் இவர் தேவ தூதர்களைப் போல் சிருஷ்டிக்கப் பட்டவர்அல்ல. இவர் பிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்டவர். மேலும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து பிதா சொன்னவைகள் தேவதூதர் களைக் குறித்து சொல்லப்படவில்லை. கிறிஸ்துவைக் குறித்து ''தேவ தூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக் கடவர் கள்''(வ.6)என்றும், ''தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென் றைக்குமுள்ளது'' (வ 8)என்றும், ''தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்'' (வ. 9) என்றும் தேவன் சொல்லியிருக்கிறார். பூமியில் அவதரித்த போது துக்கம் நிறைந்தவராக இருந்தவர், இப்போது 'ஆனந்த மயமானவராய்' பரலோகத்தில் இருக்கிறார் என்பதை இந்த வசனம் கூறுகிறது.

3. மோசேயைப் பார்க்கிலும் அதிகம் உயர்ந்தவர் (அதி. 3)

மூன்றாம் அதிகாரம், இயேசு கிறிஸ்து ''மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்'' (வ. 3) என்று கூறுகிறது.

மோசே பழைய ஏற்பாட்டு தேவ மனிதர்கள் அனைவரிலும் உயர்ந்தவர். ஆனால் இயேசு அவரைக் காட்டிலும் மிக உயர்ந்தவர் என்பதை இந்த அதிகாரத்தின் முதல் ஆறு வசனங்கள் விளக்கிக் கூறுகின்றன. மோசே தேவனுடைய வீட்டில் உண்மையுள்ள பணிவிடைக்காரராயிருந்தார். ஆனால் இயேசு கிறிஸ்து வீட்டை உண்டு பண்ணினவராக *(2-4)* தேவனுடைய குமாரன் என்ற நிலையில் அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவராக உண்மையுள்ளவராயிருந்தார் *(வ 6)* என்று இந்நிருபத்தின் ஆக்கியோன் கூறுகிறார்.

இந்த வசனங்களை, அக்காலத்தில் வாழ்ந்த யூதர்கள் கேட்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டிருக்க வேண்டும். மோசேயை விட உயர்ந்தவர் என்பதை அவர்களால் எப்படி சகித்துக் கொள்ளமுடியும்?

4. யோசுவாவைக் காட்டிலும் மிக மிக உயர்ந்தவர் (4:1-13)

மோசேக்கு அடுத்தபடியாக இஸ்ரவேலை வழிநடத்திச் சென்ற யோசுவா ஒரு பெரிய தலைவனாக இருந்தான். ஆனாலும் அவன் இஸ்ரவேலை இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கப் பண்ணவில்லை. *(வ. 8)* என்று காண்கிறோம். யோசுவாவைக் காட்டிலும் இயேசு எவ்வளவோ உயர்ந்தவர் என்பதை எபிரேயர் நிருபத்தின் இந்தப் பகுதியில் படிக்கிறோம். அவர் ஒருவரே இஸ்ரவேலரை மட்டுமின்றி அனைத்து விசுவாசிகளையும் மெய்யான இளைப்பாறுதலுக்குள் பிரகாசிக்கச் செய்ய வல்லமை படைத்த தேவகுமாரன். 12ம் வசனத்தில் தேவகுமாரன் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறார். அவர் ஜீவிக்கிற வார்த்தை. சகலமும் அறிந்த வல்லமையான தேவனுடைய வார்த்தை அவர் என்று அவரைக் குறித்து எபிரேய நிருப ஆக்கியோன் எழுதுகிறார்.

5. பிரதான ஆசாரியனாகிய ஆரோனுக்கு மேலானவர் (4:14 - 10:18)

பிரதான ஆசாரியர் யூதமதத்தில் மிக உயர்ந்த ஸ்தானம் வகிப்பவர். ஆயினும் ஆரோனைக் காட்டிலும், மற்ற பிரதான ஆசாரியர்களைக் காட்டிலும், இயேசு மிகவும் பெரியவர் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதற்கான காரணங்கள் நாலாம் அதிகாரம் முதல் தொடர்ந்து ஆக்கியோனால் இந்நிருபத்தில் விளக்கிக்கூறப்பட்டுள்ளன.

★ இயேசு பாவமில்லாதவர். பிரதான ஆசாரியர்கள் மற்ற மனுஷர்களைப் போல் பாவத்தன்மையுடையவர்கள் *(4:15)*.

★ இயேசு கிறிஸ்து ஆரோனுடைய ஆசாரிய முறைமையை விட மிக உன்னதமான மெல்கிசேதேக்கின் முறைமையின்படி பிரதான ஆசாரியரானவர் *(5 : 6)*.

★ இயேசு கிறிஸ்து நமக்கு முன்னோடியானவர். நித்திய பிரதான ஆசாரியராக நமக்காக மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் இயேசு பிரவேசித்திருக்கிறார் *(6 : 20)*.

★ கோத்திரப் பிதா ஆபிரகாம் மெல்கிசேதேக்கை ஆசாரியனாக ஏற்று அவருக்கு தசம பாகங்களைக்கொடுக்கும் அளவுக்கு மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை உயர்ந்தது *(7 : 4)*. அந்த முறைமையில் வந்தவர் இயேசு கிறிஸ்து.

★ இயேசு கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி, அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். அவர் நித்திய பிரதான ஆசாரியர் *(7 : 16, 17)*.

★ ஆரோனுடைய ஊழியம் பூமிக்குரியதும் நிழலாட்டமானதுமான ஊழியம். இயேசு கிறிஸ்துவின் ஊழியம் பரலோகத்துக்குரியதான மெய்யான ஊழியம் *(8 : 1-5)*.

★ ஆரோனுடைய பிரதான ஆசாரிய ஊழியம் பழைய உடன்படிக்கையின் ஊழியம். இயேசு கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியம் புது உடன்படிக்கையின் மேலான ஊழியம் *(8 : 6 - 13)*.

★ இயேசு கிறிஸ்து இப்போது சிறந்ததும் மெய்யானதுமான கூடாரத்தில் ஊழியம் செய்கிறார். "ஆரோனைப்போல் கையினால் செய்யப்பட்ட இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாக, தம்முடைய சொந்த இரத்தத்தினால் ஒரே தரம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார்" *(8 : 2; 9 : 1-25)*.

★ இயேசு கிறிஸ்து செலுத்தின பலியினால் சிந்தப்பட்ட அவருடைய இரத்தம், நியாப்பிரமாண பலிகளில் சிந்தப்படும் இரத்தத்திலும் மேலானது. பிரதான ஆசாரியன், காளை, இளங்காளை இரத்தத்தோடு வருடந்தோறும் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க வேண்டியதிருந்தது. இயேசு கிறிஸ்துவோ தம்மையே பலியிட்ட தினாலே ஒரே தரம் பலியிடப்பட்டார். ஒரே தரம் திரைக்குள் பிரவேசித்து தம்மை விசுவாசிப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளிச்

செய்துவிட்டார் (9 : 25 - 28).

II. அதனால் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் (அதி. 10:19முதல் முடிய)

இந்த நிருபத்தை எழுதியவர் ஒரு நல்ல பிரசங்கியாரைப் போல் சத்தியங்களைப் போதிக்கும் போதே, அந்தந்த இடங்களிலே சத்தியங்களைப் படிப்பவர்கள், பிரசங்கத்தைக் கேட்பவர்கள் போல, கீழ்ப்படிய வேண்டிய காரியங்களையும், அர்ப்பணிக்க வேண்டிய காரியங்களையும் எழுதிக் கொண்டே வருகிறார் *(அதி. 2 : 1-4; அதி. 3 : 7 - 19; 6 : 1-12)*

கடைசியில் தொடர்ந்து நாம் செய்ய வேண்டிய, செய்ய வேண்டாத காரியங்களை அவர் தொகுத்துக் கூறுகிறார். அவற்றை வரிசைக்கிரமமாய்க் காண்போம்.

1. மனந்திரும்புதல் முதலிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல் இருப்போம் (6 : 1); 2. தேவனிடம் சேரக்கடவோம் (10 : 22); 3. நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம் (10 : 23); 4. அன்பிலும் நற்கிரியையிலும் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்போம் (10 : 24); 5. மிகுந்த போராட்டத்தை நாமும் சகிப்போம் (10 : 32); 6. பாரமான யாவற்றையும் தள்ளி விடுவோம் (12 : 1); 7. நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (12:1); 8. சிலுவையைச்சகிப்போம் (12:3-29); 9. சகோதரசிநேகத்தில் நிலைத்திருப்போம் (13:1); 10. பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து கொள்வோம் (13 : 5); 11.அவருடைய நிந்தையைச் சுமந்து பாளையத்துக்குப் புறம்பே (அவர்பாடுபட்ட இடத்திற்கு) புறப்பட்டு போகக் கடவோம் (13 : 13); 12. அவருடைய நாமத்தைத் துதிக்கும் ஸ்தோத்திரபலியை செலுத்தக்கடவோம் (13 : 15).

அத்தியாயம் - 22
யாக்கோபு நிருபம்

நூலாசிரியர் பற்றி

கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு இந்த நிருபத்தை எழுதினார். புதிய ஏற்பாட்டில் மூன்று "யாக்கோபு" உண்டு. ஒருவர் செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபு. அடுத்தவர் அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு. மூன்றாமவர் இந்த நிருபத்தின் ஆக்கியோனாகிய யாக்கோபு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களிலே ஆண்டவரின் ஊழியத்திற்கு மிகவும் பலமான எதிர்ப்பு தெரிவித்தவர் இவர். ஆனால் உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விசேஷமாக இவரைச் சந்தித்து தம் பக்கம் இழுத்துக் கொண்டார் (1 கொரி. 15:7). அது முதல் ஒரு பெரிய ஜெப வீரனாகவே இவர் வாழ்ந்து வந்தார். இவர் எருசலேம் பட்டணத்து முதல் கண்காணி (பிஷப்)யாக இருந்தார். இது பற்றிய குறிப்புகள் அப். 15 : 13 முதல் 21 வசனங்களிலும், கலாத்தியர் 2 : 9 இலும் காணப்படுகிறது. கி.பி. 62ல் யூத எதிர்ப்பாளர்களால் இவர் கொலை செய்யப்பட்டார்.

இந்நூலினைப் பற்றி

யாக்கோபு ஒரு யூதராக இருந்ததால் யூதர்களுக்காகவே இந்த நிருபத்தை எழுதினார். மிகவும் கண்டிப்பானவர். கிட்டத்தட்ட பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி போன்றவர். சொல்ல வேண்டியதை தயங்காமல் உடனுக்குடன் தைரியமாகச் சொல்லி விடுவார். உவமேயங்களை இந்த நிருபத்தில் மிகவும் திறமையாகக் கையாண்டு போதிக்கிறார்.

இந்நூல் எழுதப்பட்ட காலம்

புதிய ஏற்பாட்டு நூல்களில் முதல் முதல் எழுதப்பட்ட நூல் இது என்பது அறிஞர்களின் முடிவான கருத்து. கி.பி. 45 முதல் 53க்குள் இது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் இது. ஏனென்றால், ரோமர் நிருபத்தில் பவுல் எழுதிய 'விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதல்' என்ற சத்தியத்திற்கு எதிர்ப்பாக, இந்த நிருபத்தை யாக்கோபு

எழுதியிருக்க வேண்டும் என்று பலர் நினைத்தார்கள். ஆனால் இந்த நூல் ரோமர் நிருபத்திற்கு வெகு காலத்திற்கு முன்பே கி.பி. 53 ல் எழுதப்பட்டு விட்டது.

இது எழுதப்பட்ட நோக்கம்

யூதக் கிறிஸ்தவர்கள் மிகுந்த சோதனைகள், பாடுகள் வழியாகக் கடந்து சென்ற காலத்தில் அவர்களுக்கு ஆறுதல் கூறி உற்சாகப் படுத்தவே இந்நூலை யாக்கோபு எழுதினார். அதுவுமின்றி யூதக் கிறிஸ்தவர்கள் மத்தியில் கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து பல குழப்பங்கள் இருந்தன. எனவே, அவற்றைச் சரிப்படுத்தி அவர்களை சத்தியத்தில் சரியாக வழிநடத்த இது எழுதப்பட்டது. இன்னும் ஒரு நோக்கமும் இதில் உண்டு.

பொதுவாக இந்த நிருபத்தில் நீதியை அடையும் இரு வழிகளாக விசுவாசத்தையும் கிரியைகளையும் யாக்கோபு எழுதுகிறார் என்று பலருக்கு எண்ணத் தோன்றும். இதனாலேயே இந்த நூலைக்குறித்து மார்ட்டீன் லூத்தருக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. *1 கொரி. 3:12*ல் பவுல் பேசுகிற 'புல் வைக்கோல்' போன்றதாக இந்த நிருபத்தை லூத்தர் மதித்தார். இதில் இரட்சிப்புக்கான விசுவாசத்தை யாக்கோபு குறைத்துப் பேசுவதாக அவர் எண்ணினார். ஆனால் பல வருடங் களுக்குப் பிறகு, லூத்தர் பவுலின் விசுவாசப் போதனைகளை நிறைவு செய்வதாக யாக்கோபின் கிரியைகள் குறித்த போதனைகள் அமைந்திருப்பதை கண்டு கொண்டார். 'நான் நீதிமானாக்கப்பட்டேன் என்பது என் கிரியைகளில்தான் தெரியவருகிறது' என்ற சத்தியத்தை அவர் ஏற்றுக் கொண்டார். இந்த சத்தியத்தை விசுவாசிகளுக்குப் போதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த நிருபத்தை யாக்கோபு எழுதினார். யாக்கோபின் இந்த நோக்கம் இந்த நிருபத்தை படிக்கும் எவருக்கும் உடனடியாக புலப்படாது.

இந்த நூலில் அடங்கிய விஷயங்கள்

இந்த நிருபத்தில் கிறிஸ்தவ உபதேசங்கள் குறைவு. ஆனால் விசுவாசிகள் கடைப்பிடிக்க வேண்டிய கிறிஸ்தவ நடத்தை பற்றி யாக்கோபு நிறைய எழுதியுள்ளார். எப்பொழுதும் தான் போதிக்கிறவை களைக் கடைப்பிடித்து யாக்கோபு நடந்தார். பரிசுத்தமான கிறிஸ்தவ ஜீவியத்திற்கு இந்நூல் சிறந்த வழிகாட்டி. இந்த நிருபம் நமக்குத் தரும் முக்கிய செய்தி ''கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது'' என்பதாகும்

(2 : 26). விசுவாசத்தின் தன்மையும் கிரியையின் முக்கியத்துவத்தையும் ஒன்றாக சேர்த்து நமக்குப் போதிக்கும் சிறந்த நூல் இது. மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் இந்த நிருபம் புதிய ஏற்பாட்டு நீதிமொழிகள் போல காணப்படக் கூடும். ஆனால் விசுவாசம் பற்றிய ஆழமான சத்தியங்களை முறைப்படுத்தி யாக்கோபு இந்நூலில் எழுதியிருப்பதை இதனை ஆழ்ந்து படிக்கும்போது நம்மால் காண முடிகிறது.

யாக்கோபு நிருபம் - ஓர் ஆய்வு

பன்னிரண்டு யூத கோத்திரங்களில் சிதறிக் கிடக்கும் விசுவாசிகளுக்கு முதல் வசனத்தில் வாழ்த்துதல் கூறி நிருபத்தை ஆரம்பிக்கிறார். மிகவும் தாழ்மையாக தன்னை தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன் (அடிமை) என்று அறிமுகம் செய்து கொண்டு எழுத ஆரம்பிக்கிறார். சரீரத்தில் இயேசுவின் கூடவே பல ஆண்டுகள் வளர்ந்து வந்தாலும், உயிர்த்தெழுதலுக்குப் பின் யாக்கோபு இயேசுவை மிகவும் பக்தி விநயத்தோடு ஆவியில் சேவிப்பதை நாம் காணமுடிகிறது.

இந்த நிருபத்தை ஆறு பிரிவுகளாகப் பிரித்து நாம் படிக்கலாம்.

1. **சோதனைகளில் விசுவாசத்தைக் காண்பிக்கவேண்டும்** (1: 2-21)

நமது விசுவாசம் சோதிக்கப்படுவது ஒரு மகிமையான காரியம். அதை சந்தோஷமான காரியமாய் எண்ணவேண்டும் என்கிறார் யாக்கோபு. விசுவாசப் பரீட்சை நம்மில் பொறுமையை உண்டாக்குகிறது (வ.3). இப்படிப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள, நமக்கு தேவையான ஞானத்தை தேவனிடம் கேட்க வேண்டும் என்கிறார் (வ.5). சோதனையை வேண்டாம் என்று தவிர்க்கப் பிரயாசப்படாமல், அதைச் சகிக்கிறவன் பாக்கியவான் என்று எழுதுகிறார் (வ. 12). தீமையான சோதனைகளுக்கு தேவன் பொறுப்பல்ல (13 - 15), சோதிக்கப்படும் நாட்களில் நாம் பேசுவதற்கு பொறுமையாய் இருக்கவேண்டும் (19 - 21) என்கிறார்.

2. **கிரியைகளில் விசுவாசம் வெளிப்படவேண்டும்** (1 : 22 முதல் அதி. 2 முடிய)

விசுவாசிகள் கடவுளைப் பற்றிய காரியங்களில் வஞ்சிக்கப்பட்டு மோசம் போகக்கூடாது என்கிறார் (வ. 16) யாக்கோபு. திருவசனத்தைக் கேட்டு விட்டு அதன்படி நடவாவிட்டால் நம்மை நாமே வஞ்சித்து

மோசம் போகிறோம் என்பதை தெளிவாக எடுத்துக் கூறுகிறார். தேவபக்தியுடையவர்களாயிருப்பதில், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. நாவை அடக்காவிட்டால், நம்முடைய தேவபக்தி வீண்! திக்கற்றவர்களுக்கு உதவுவதும் உலகத்தால் நம்மை கறைப்படுத்தி கொள்ளாமல் வாழ்வதுமே பக்தி *(26, 27)* என்கிறார். ஆள் பார்த்து பட்சபாதமாக சகவிசுவாசிகளை நடத்துவது கிறிஸ்தவர்களுக்கு தகாத நடத்தை என்று கண்டிக்கிறார். அது தேவனுக்கு முன்பாக பாவம் *(2 : 1-13)* என்றும் எழுதுகிறார்.

14 முதல் *26* வரையுள்ள பகுதி இந்த நிருபத்தின் மிக முக்கியமான உபதேசத்தைத் தருகிறது. மெய்யான விசுவாசம் எப்பொழுதும் கிரியைகளினால் மட்டுமே அறியப்படும்.

3. விசுவாசம் நாம் பேசும் வார்த்தைகளில் வெளிப்படவேண்டும் (அதி 3)

இந்த அதிகாரத்தைப்படித்தால், யூத கிறிஸ்தவர்களிடையே ஒருவரையொருவர் தவறாகப் புரிந்து கொள்ளும் காரியங்கள், கெட்ட சுபாவங்கள், தாங்கள் செய்வதே சரி என்று சாதிக்கும் பிடிவாதம் எல்லாம் அதிகம் உண்டு என்று நாம் கண்டு கொள்ள முடியும். கோபங் கொண்டு ஆவேசமாய்ப் பேசுங்காரியங்களும் அதிகம். வீணாக தர்க்கம் பண்ணிக் கொள்வார்கள். மூர்க்கமாய் சண்டை பிடிப்பார்கள். இவர்களிடம், நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டீர்கள் என்பதை, உங்கள் வாயின் வார்த்தைகள் மூலமே மற்றவர்களுக்கு நீங்கள் நிரூபிக்க முடியும் என்கிறார். நம்முடைய வாயிலிருந்து உண்டாகும் பேச்சுகள் நாம் யாரென்றும், நாம் யாருக்குச் சொந்தமானவர்கள் (தேவனுக்கா? பிசாசுக்கா?) என்பதைக் காண்பித்து விடும் என்ற சத்தியத்தை யூதக் கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகிறார்.

4. உலகத்தைச் சிநேகிக்காத வாழ்க்கை விசுவாசத்தைக் காண்பிக்கும் (அதி. 4)

இங்கு 'உலகம்' என்பது இன்று காணப்படும் நம்மைச் சுற்றியுள்ள மக்கள், அல்லது அவர்களுடைய தன்மையைக் குறிக்கிறது. அதாவது ஆவிக்குரிய காரியங்களுக்கும் கடவுளுடைய சித்தத்திற்கும் மரித்து உணர்வற்றுக் கிடக்கும் மனிதர்களைக் குறிப்பிடுகிறது.

விசுவாசிகள் உலகைச் சினேகிக்காமல் இருப்பது இயேசு கிறிஸ்துவின் மேல் நாம் வைக்கும் இரட்சிப்பின் விசுவாசத்திற்கு நல்ல அத்தாட்சி என்கிறார் யாக்கோபு *(வ 4)*.

அடுத்து யாக்கோபு பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்படி எச்சரிக்கிறார். அதைச்செய்யுமுன்பு, தேவனுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்பதை அவர் இந்த அத்தியாயத்தில் தெளிவுபடுத்துகிறார் (வ. 7).

5. அநீதி இழைக்கப்படுகையில் பொறுமையாயிருப்பது கிறிஸ்துவை நாம் விசுவாசிப்பதை வெளிப்படுத்தும் (5:1-12)

பணம் படைத்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு வேலை செய்யும் ஏழை விசுவாசிகள் அதிகமாய் ஒடுக்கப்பட்டனர். அவர்களுடைய கடின உழைப்பால் கிடைக்கும் லாபத்திலிருந்து கொடுக்கும் சொற்ப சம்பளத்தையும் வேலைக்காரர்களுக்கு சரியாக கொடுக்காமல் அவர்களை கொள்ளையிட்டனர் (வ. 4)

இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசமும், அவருடைய வருகையைக் குறித்த எதிர்பார்ப்பும் இப்படிப்பட்ட தீமைகளைச் சகிப்பதற்கு ஏழை விசுவாசிகளை பலப்படுத்துகிறது என்கிறார் யாக்கோபு.

6. விசுவாசத்தோடு ஏறெடுக்கும் ஊக்கமான ஜெபம் விசுவாசத்தைக் காண்பிக்கும் (5:13 - 20)

யாக்கோபைக் குறித்துச் சொல்லப்படுகிற ஒரு விசேஷம் என்னவென்றால் அதிகமான ஜெப வாழ்க்கையினால், அவருடைய முழங்கால் ஒட்டகத்தின் முழங்கால் போல் காய்ப்புப் பிடித்து முரடாக இருக்குமாம். 'யாக்கோபு' அனுபவமாக தாம் செய்து வந்த ஜெப வாழ்க்கையை மற்றவர்களையும் கடைப்பிடிக்கச் சொல்லிக் கட்டளை கொடுக்கிறார்.

இந்த நிருபம் வாழ்த்து சொல்லாமல் முடிக்கப்படுகிறது. ஆனால் ''நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல்கள் பிணியாளியை இரட்சிக்கும்'' என்று கூறி, அதற்கு பழைய ஏற்பாட்டு பெரிய தீர்க்கதரிசியான எலியாவின் ஜெப வாழ்க்கையை எடுத்துக்காண்பித்து அதன் பயனாக தேவனுடைய நாமம் அதிகம் மகிமைப்பட்டதையும் கூறுகிறார்.

கடைசியாக சத்தியத்தை விட்டு யூத விசுவாசி யாரேனும் விலகிப் போகும் போது மற்றவர்கள் அவனைத் திருப்பவேண்டும் என்ற ஆலோசனையோடு யாக்கோபு நிருபத்தை முடிக்கிறார்.

அத்தியாயம் - 23

I பேதுரு நிருபம்

யாருக்காக எழுதப்பட்டது?

இந்த நிருபம் பேதுருவின் அந்திம காலத்தில் (கி.பி. 60ல்) எழுதப் பட்டது. பாபிலோனில் உள்ள சபையில் அவர் தங்கியிருந்தபோது இதனை எழுதி (அதி. 5 : 13) சீலாவின் மூலமாய் அனுப்பிவைத்தார். பவுல் சிறையிலிருந்த காரணத்தால் அவருடைய உடன் ஊழியனாகிய சீலா பேதுருவோடிருந்து ஊழியம் செய்திருக்கக் கூடும். இந்த நிருபத்தை பேதுரு, முக்கியமாக எபிரேய கிறிஸ்தவர்களுக்காக எழுதினார் (1 : 1). யூதரல்லாத கிறிஸ்தவர்கள் பயனடையவும் இதை அவர் எழுதியிருக்கலாம் (அதி. 2 : 9,10).

எழுதப்பட்ட நோக்கம்

இரண்டு நோக்கங்களுக்காக இந்த நிருபம் எழுதப்பட்டது. ஆசியாவில் பவுல் ஸ்தாபித்த சபைகளில், கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை சத்தியங்கள் குறித்து பவுலுக்கும் பேதுருவுக்கும் பெரிய கருத்து வேறுபாடுகள் இருக்கிறது ஏன்ற ஒரு பேச்சு இருந்தது. எனவே பேதுரு இந்த நிருபத்தை எழுதி பவுலின் உடன் ஊழியனாகிய சீலாவிடம் அந்த சபைகளுக்குக் கொடுத்து அனுப்பினார். இதன் மூலம் இந்த தவறான எண்ணங்களை அவர்கள் மனதிலிருந்து முற்றிலுமாய் அகற்றிப் போட பேதுரு பிரயாசப்பட்டார். இது ஒரு நோக்கம். இரண்டாவது நோக்கம் உபத்திரவங்கள் போராட்டங்கள் நிமித்தம் கஷ்டத்துக்குள்ளான யூதக் கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்தவும், அவர்களை கிறிஸ்துவின் கிருபையில் பலப்படுத்தவும் பேதுரு இதை எழுதியிருக்கக் கூடும். இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தனக்குக் கொடுத்த ஊழியமாகச் செய்தார். லூக்கா 22ம் அதிகாரம் 32ம் வசனத்தில் இயேசு பேதுருவிடம் நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை (யூதக் கிறிஸ்தவர்களை) திடப்படுத்து என்று கூறியது பேதுருவின் நினைவில் இருந்திருக்கவேண்டும்.

பேதுருவின் மறுரூபமாக்கப்பட்ட நிலை

நற்செய்தி நூல்களில் நாம் பார்க்கும் பேதுருவுக்கும் அவருடைய நிருபங்களில் நாம் காணும் பேதுருவுக்கும் அதிக வேறுபாடு

இருக்கிறது. முந்தியதில் பேதுரு தனது ஆண்டவர் மறுரூபமான காட்சியைக் கண்டார். ஆனால் இப்பொழுது தேவனுடைய அளவற்ற கிருபையால் பேதுரு மறுரூபமாக்கப்பட்டதை அவருடைய நிருபங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. நற்செய்தி நூல்களில் பேதுருவை துடுக்காகப் பேசுபவராகவும் தைரியசாலியாகவும், தனக்கு எதிராகப் பேசப்படும் சின்ன விஷயத்தையும் தாங்க முடியாதவராகவும், அதிகாரம் பண்ணுவதற்கு துடிப்பவராகவும் காண்கிறோம். மாறாக, அவருடைய நிருபங்களைப் படிக்கும்போது பேதுரு அப்போஸ்தலன் பொறுமையுள்ளவராகவும் மன்னிக்கிறவராகவும் அமைதி உள்ளவராகவும் அன்புள்ளவராகவும் காணப்படுகிறார். மாம்சத்திலிருந்த அவருடைய துடுதுடுப்பும், தைரியமும் இப்போது தெய்வீகத் தன்மையோடு கூடியதாக இருப்பதைக் காண்கிறோம். தேவனுடைய கிருபையின் வல்லமை எவ்வளவாய் ஒருவரை மாற்றி அமைத்து விடும் என்பதற்கு பேதுரு ஒரு சாட்சியாகத் திகழ்கிறார்.

பேதுருவுக்குப் பிடித்தமான வார்த்தைகள்

'விலையேறப்பெற்ற' என்ற வார்த்தை பேதுருவுக்கு வெகு பிரியம் இந்த நிருபத்தில் ஏழு விலையேறப்பெற்ற காரியங்களை கூறுகிறார். பேதுருவுக்கு மற்றொரு பிரியமான வார்த்தை 'நம்பிக்கை' என்பது. இதனால் பேதுரு *''நம்பிக்கையின் அப்போஸ்தலர்''* என்று அழைக்கப்படுகிறார். 'தெரிந்து கொள்ளப்பட்டதை'க் குறித்து 'கிறிஸ்துவின் முன்னறிவு' என்பதைக் குறித்து, 'நமக்குப் பதிலாக அவர் மரித்ததை'க் குறித்து சிறப்பான முறையில் எழுதியுள்ளார்.

ஆனால் பேதுருவின் முக்கியமான வார்த்தை *''பாடுபடுதல்''* என்பது. இது 21 முறை இந்த நிருபத்தில் வருகிறது. கிறிஸ்துவுக்காக பாடனுபவித்தல் என்பது இந்த நிருபத்தின் முக்கிய செய்தி.

I பேதுரு நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை ஐந்து பகுதியாக பிரிக்கலாம்

1. பாடுகளில் சந்தோஷப்படுகிறோம். காரணம் பாடுகளால் இரட்சிப்பை சுதந்தரித்துக் கொண்டோம் (1:1-13)

யூதக் கிறிஸ்தவர்களுக்கான முக்கிய செய்தியை 6ம் வசனத்தில் காண்கிறோம். பாடுகளில் சந்தோஷங் கொள்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. இதனால் இரட்சிப்பாகிய சுதந்தரம் பரலோகத்தில் நமக்கு

வைக்கப்பட்டிருக்கிறது (வ. 5). ''இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்'' (வ. 6). கிருபையினாலே நாம் சுதந்தரித்த மகிமையான இரட்சிப்பு, பாடுகளிலும் உபத்திரவங்களிலும் கூட ''சொல்லி முடியாத சந்தோஷத்தை'' நமக்குத் தருகிறது என்கிறார் பேதுரு. ''இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களா யிருங்கள்'' *(வ.13)* என்று பாடுபடும் யூதகிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறார்.

2. பரிசுத்தர்களாக வாழ்ந்து பாடுபடுவதால் கிடைக்கும் சந்தோஷம் (அதி. 1 : 14 முதல் அதி 3 முடிய)

எண்ணத்திலும் நடத்தையிலும் பரிசுத்தம் வேண்டும் என்கிறார் பேதுரு. கிறிஸ்தவர்களாயிருப்பதற்கு இது மிக அவசியம். பேதுருவின் எழுத்துக்களின் சாராம்சம் இது தான் *(1:16, 17)*. மதியீனமாய் பாவத்தில் வாழ்வதினால் ஒரு கிறிஸ்தவன் கஷ்டப்படக்கூடாது. கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞராயிருப்பவர்கள் அவர்களைத் தூஷிப்பதற்கு இது இடமளிக்கும் என்கிறார்.

இப்பகுதியின் முக்கிய வசனங்கள் *2 : 12, 18, 20;* அதி. *3 : 1, 17*

3. பாடுபட்டால் கர்த்தரோடு கூட நாம் ஐக்கியப்பட முடியும் (அதி.4)

''துன்மார்க்க உளையிலே அவிசுவாசிகளோடு ஐக்கியப்படாமலிருக்கிறது அவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது'' *(வ. 4)* ''உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றி யெரிகிற அக்கினி''யை (பாடுகளை)க் குறித்து ஏதோ புதுமையென்று நீங்கள் ஆச்சரியப்படக் கூடாது *(வ.12)* என்கிறார்.

இங்கு பேதுரு சொல்ல வருகிற ஒரு சத்தியம் என்னவென்றால், பரிசுத்தமாய் வாழ்வதால் பாடுகள் வரும்போது கிறிஸ்தவ ஜீவியத்தில் கர்த்தரோடு நமக்கு ஐக்கியம் அதிகமாய் கிடைக்கும் என்பதே.

*8*ம் வசனத்தில் வரும் ''அன்பு திரளான பாவங்களை மூடும்'' என்று பேதுரு சொல்வதை பிறருடைய பாவங்களை நாம் அன்பினால் எண்ணிப்பாராமல் இருப்பது என்று பொருள் கொள்ளவேண்டும்.

4. பாடுபடும்போது வருங்கால மகிமையை நினைக்கவேண்டும் (5 : 1-4)

இப்பகுதியின் முக்கிய வசனம், முதலாம் வசனம். இதில் பேதுரு

இனி வெளிப்படும் மகிமைக்கு தான் பங்காளியாயிருக்கிறதை நினைவில் கொண்டு அதையே நமக்கு புத்திமதியாகச் சொல்லுகிறார் (அதி. *5 : 1*). நமது துக்கங்களிலும் பாடுகளிலும் கிறிஸ்துவில் நமக்குள்ள வருங்கால நம்பிக்கையே ஆறுதலைத் தருகிறது என்கிறார். இந்த வசனங்களில் வரப்போகிற கிறிஸ்துவின் மகிமை குறித்து பேதுரு தெளிவாகப் பேசுகிறார்.

5ம் வசனத்தில் மனத்தாழ்மையை அணிந்து கொள்ளும்படி இளைஞர்களுக்கு கூறுகிறார். ஒரு அடிமை தனக்குரிய தாழ்மையான ஆடையை அணிவது போல் மூப்பருக்குக் கீழ்ப்படிவதில் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் என்று எழுதுகிறார்.

5. **விசுவாசிகள் அனைவருக்கும் பாடுகள் உண்டு** (அதி. 5 : 5 முதல் முடிய)

நம்மைப் போல மற்ற எவருக்கும் பாடுகள் இருக்க முடியாது என்று நாம் எண்ணுவது தவறு. அது நமக்கு நன்மை கொண்டு வராது. பாடுகளும் துக்கங்களும் அனைத்து விசுவாசிகளுக்கும் பொதுவானவை *(வ . 9)*.

5ம் வசனத்தில் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் என்கிறார் பேதுரு. தாழ்மைப்படுங்கள், இல்லையென்றால் தாழ்மைப்படுத்தப்படுவீர்கள் என்று விசுவாசிகளுக்கு நல்லதொரு எச்சரிப்பைக் கொடுக்கிறார்.

அத்தியாயம் - 24

II பேதுரு நிருபம்

நூலாசிரியர் யார்?

புதிய ஏற்பாட்டு நூல்களில் இந்த நிருபத்திற்கு மட்டும் ஆக்கியோன் யார் என்று திட்டமாய்ச் சொல்ல முடியவில்லை. பேதுரு எழுதினதாகச் சொல்வது தவறு என்று சிலர் கூறி நான்கு காரணங்களை அதற்குச் சொல்கிறார்கள்.

முதலாவது, இந்த நிருபத்தில் 3ம் அதிகாரம் 15, 16 வசனங்களை நாம் படிக்கும்போது, அவற்றில் கூறப்பட்டிருக்கிறது சரியா என்று ஐயப்பாடு எழுகிறது என்கின்றனர். காரணம் பவுலின் எல்லா நிருபங்களும் அப்போது எழுதப்பட்டிருக்கவில்லை. இதிலிருந்து பேதுருவின் காலத்தில் இது எழுதப்படவில்லை என்பதை நம்மால் அறிய முடிகிறது என்கின்றனர். ஆனால் 3 : 16இன் வெளிப்படையான பொருள் பவுலின் 'அப்பொழுதிருந்த எல்லா நிருபங்களும்' என்பது தான்.

இரண்டாவது, பேதுருவின் முதல் நிருபத்திற்கும் இரண்டாவது நிருபத்திற்கும் அமைப்பிலும் மொழிநடையிலும் மிகுந்த வேறுபாடு உள்ளது என்கின்றனர். ஆனால் இந்த இரண்டாம் நிருபம் வேறு ஒரு நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டு நாம் பார்த்தால் இந்த ஐயப்பாடு சரியில்லை என்று கண்டு கொள்ள முடியும்

மூன்றாவது, இந்த நிருபத்தின் 2ம் அதிகாரம் யூதா நிருபத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டதாகவும், பேதுரு ஒரு மூத்த அப்போஸ்தலராக இருந்ததால் இதை எவரும் சுட்டிக்காட்ட அப்போது முன்வரவில்லை என்கின்றனர். இதற்கு மறுப்புச் சொல்பவர்கள் பேதுரு யூதாவிலிருந்து திருடியோ அல்லது யூதா பேதுருவின் இந்த 2ம் அதிகாரத்தைப் பார்த்தோ எழுதவில்லை. பேதுரு வருங்காலத்தில் நடக்கப் போவதாக தீர்க்க தரிசனமாய் கூறியவைகள் இப்போது நடக்கின்றன என்று யூதா தனது நிருபத்தில் 4, 12, 16, 17 ஆகிய வசனங்களில் எழுதியுள்ளார்.

நான்காவதாக, இந்த நிருபத்தில் ஆக்கியோன் பற்றி அதி. 1:18 இலிருந்து, மறுரூப மலையில் இருந்த மூன்று அப்போஸ்தலரில் ஒருவர் எழுதியிருக்கக் கூடும் என்று சிலர் கூறுவார்கள். ஆனால் அதி. 1 : 1 பேதுருவே இந்த நிருபத்தை எழுதினார் என்பதை நிச்சயிக்கிறது.

பேதுரு இதை எழுதவில்லை என்ற சந்தேகம் கி.பி. 3ம் நூற்றாண்டிலேயே இருந்தது. அதே சமயம், மற்ற புதிய ஏற்பாட்டு நூல்களின் ஆக்கியோன்கள் பற்றியும் ஐயப்பாடுகள் இருந்தன. ஆனால் இவைகள் அனைத்தும் ஆதாரமற்ற ஐயப்பாடுகள் என்பது தற்போது நிரூபிக்கப்பட்டு விட்டது.

இதில் அடங்கியுள்ள விஷயங்கள்

இந்த நிருபத்தில் மூன்று முக்கிய விஷயங்களை பேதுரு எழுதுகிறார். இதில் முதலாவது, முதல் அதிகாரத்தில் 5 முதல் 8 வசனங்களில் கிறிஸ்தவ ஜீவியத்தில் விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் என்னும் கனிகளை நாம் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் மிகவும் பயனுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழுவோம் என்று பேதுரு தெளிவாகக் கூறுகின்றார்.

இரண்டாவது, பேதுரு தனது கடைசி நாட்கள் பற்றி எழுது கிறார். மரணத்திற்கு மிக சமீபமாய் இருப்பதைக் குறித்து அவர் எழுதியவை முதல் அதிகாரம் 13, 14ம் வசனங்களில் காணப்படு கிறது. மூன்றாவது, 17, 18 வசனங்களில் மறுரூபமலை அனுபவத்தில் பேதுரு கிறிஸ்துவின் மகத்துவத்தை கண்ணாரக் கண்டதை (வ. 16) வருணிக்கின்றார்.

இந்த நூல் எழுதப்பட்ட நோக்கம்

இந்த நிருபத்தில் பேதுரு கள்ளப் போதகர்களைக் குறித்தும் அவர்களின் தவறான உபதேசங்களைக் குறித்தும் விசுவாசிகளை எச்சரிக்கிறார். முதல்நிருபத்தில் பாடுபடும் யூதக்கிறிஸ்தவர்களை ஆற்றித் தேற்றுவது பேதுருவின் முக்கிய நோக்கமாயிருந்தது. எதிர்ப் பாளர்களையும் சந்திக்கவேண்டியதாயிற்று, ஆனால், இங்கே கள்ள உபதேசங்கள் மூலம் அந்தகார இருள் விசுவாசிகளைச் சூழ்ந்து விட்டதால் அவர்களுக்கு சத்தியத்தின் ஒளி (1 : 19) தேவைப்படுகிறது என்பதைக் கூறி தவறுகளைக் கண்டித்து புத்தி கூறுகிறார்.

II பேதுரு நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து கீழ்க்காணும் தலைப்புகளில் படிக்கலாம்.

1. அறவொழுக்கக் கேடும் தேவனருளும் நிவாரணமும் (அதி. 1 : 2-14)

நிருபத்தின் ஆரம்பத்தில், இயேசு கிறிஸ்துவின் கிருபையால் அருமையான விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு என்று தொடங்கி, கிருபையும் சமாதானமும் பெருகுவதாக என்று வாழ்த்துகிறார்.

இயேசு கிறிஸ்து தம்மை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் ஏதுவான யாவற்றையும் தந்திருக்கிறார் (வ 3), அதோடு, அறவொழுக்கக் கேட்டுக்கு தப்புவதற்கு அவருடைய வாக்குத் தத்தங்களை நமக்குத் தந்திருக்கிறார் (வ. 4) என்கிறார்.

விசுவாசிகள் கனி கொடுக்கும் ஜீவியம் செய்யாவிட்டால் தேவன் செய்த நன்மைகளை மறந்து ஆவிக்குரிய நிலையில் குருடராக வாழும் பரிதாப நிலைக்குள்ளாக வேண்டியதிருக்கும் என்று எச்சரிக்கிறார். கனி கொடுக்கும் ஜீவியம் செய்தால், கிறிஸ்துவின் நித்திய ராஜ்யப் பிரவேசம் பூரணமாய் கிடைக்கும் (வ. 11) என்கிறார். எனவே விசுவாசிகள் அறவொழுக்கக் கேட்டுக்கு தப்பும்படி ஆவிக்குரிய ஜீவியத்தின் முன்னேற்றத்தில் அக்கரைப்படவேண்டும் என்ற சத்தியத்தை நினைப்பூட்டி பேதுரு இந்த நிருபத்தை எழுதினார்.

2. உபதேசக் கேடுபாடும் வேதம் அருளும் நிவாரணமும் (1 : 15 முதல் அதி 2 முடிய)

இப்பகுதியில் உபதேசக் குழப்பங்களை வேத வாக்கியங்களைக் கொண்டே சரி செய்ய முடியும் என்கிறார் பேதுரு. இருளில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்றது வேதத்தின் தீர்க்கதரிசன சத்தியங்கள் என்கிறார். ''தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்'' (1 : 21). எனவே உபதேச கேடுபாடுகளுக்கு வேத வசனங்களே சிறந்த மருந்து . கள்ள உபதேசங்களுக்கு தப்ப 'நான் சொன்னவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக் கொள்ளவேண்டும்'' என்று கூறுகிறார் (வ. 15).

3. இந்தக்கேடுபாடுகளுக்குத் தப்பும்படி கிறிஸ்தவ விசுவாசிகள் மனஉறுதியாயிருக்க வேண்டும் (அதி. 3)

17ம் வசனத்தில் ''அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' என்கிறார்.

இந்த அதிகாரத்தின் இரண்டாம் வசனத்தில் ''அப்போஸ்தலர்களாகிய எங்கள் கட்டளைகளை நினைவு கூரும்படி உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்'' என்கிறார். இதிலிருந்து உண்மையானவர்களுக்கும் 'கட்டளைகளை நினைப்பூட்டுதல்' தேவையாயுள்ளது என்பதை நாம் அறிய வேண்டும்.

உபதேசக்கேடு பாடுகளில் ஒன்று கர்த்தருடைய இரண்டாம் வருகை குறித்த சத்தியங்கள் அவசியமற்றவை என்று போதிப்பது. இது பற்றி 3 முதல் 9 வரையுள்ள வசனங்களில் பேதுரு தெளிவாக எழுதுகிறார். 10ம் வசனத்தில் கர்த்தருடைய நாள் நிச்சயமாய் வரும் என்கிறார்.

இருதயத் தூய்மையும் வாழ்க்கையின் பரிசுத்தமும் அவர் வருகையை விசுவாசிப்பதினால் கிடைக்கும் பலன்கள் என்று 11 - 17 வசனங்களில் எழுதுகிறார். இறுதியாக இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் என்று கூறி, வாழ்த்துதலோடு (வ 18) இந்த நிருபத்தை முடிக்கிறார்.

அத்தியாயம் - 25
I யோவான் நிருபம்

நூலாசிரியர் பற்றி

அப்போஸ்தலனாகிய யோவான் கி.பி. 90ம் ஆண்டில் தமது முதிர் வயதில் இந்த நிருபத்தை எழுதினார். எபேசு பட்டணத்தில் இருந்த படியே இதனை எழுதியிருக்கக் கூடும். எந்த குறிப்பிட்ட தனி நபருக்கோ சபைக்கோ என்று எழுதாமல் எல்லாக் கிறிஸ்தவர்களும் படித்துப் பயனடைய இதை எழுதினார் (அதி. *2 : 12 - 14*).

எழுதப்பட்ட நோக்கம்

கிறிஸ்தவ சபைகள் உண்டான சில காலத்திற்குள் தவறான உபதேசங்கள் உள்ளே நுழையத் தொடங்கின. யூதக் கிறிஸ்தவர்களும் யூதரல்லாத கிறிஸ்தவர்களும் தங்களுடைய முந்திய பின்னணியிலிருந்து, அவர்கள் விட்டு வந்த பழைய மத ஆசாரங்கள், கோட்பாடுகள் சிலவற்றைக் கிறிஸ்தவ விசுவாசத்தில் நுழைத்து விடமுயன்றனர். இதுதான் கள்ள உபதேசங்களுக்கும் உபதேசக் குழப்பங்களுக்கும் காரணமாயிருந்தது. இது ''அறிவுக் கொள்கை'' (Gnosticism) என்ற கள்ளப்போதகமாகி விட்டது. இக்கொள்கையினர் தங்களுக்குத்தான் எதைக் குறித்தும் உண்மையான மேலான அறிவு இருப்பதாக எண்ணிக்கொண்டனர். அப்போஸ்தலரின் சரியான விசுவாசத்தை ஏற்றுக் கொண்டவர்களை அதிகம் வெறுத்தனர். அறிவு நிலையில் அவர்களை குறைவாக மதித்தனர்.

இந்த அறிவுக் கொள்கையினரை மனதில் வைத்தே இந்த நிருபத்தை யோவான் எழுதினார். முதல் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களில், தான் கிறிஸ்துவின் சீடரான அப்போஸ்தலராயிருப்பதால் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டதுமல்லாமல் கண்களால் அவரைப் பார்த்ததையும், அவரைத் தொட்டுப் பார்த்ததையும் கூறி, கிறிஸ்துவின் மானிடத் தன்மையை மறுத்துப் பேசுகிற அறிவுக் கொள்கையினரை யோவான் கண்டிக்கிறார் (*4:2,3*). அப்போஸ்தலர்கள் மட்டுமே சரியான வெளிப்பாட்டு அறிவும் ஞானமும் உடையவர்கள் என்று (*1:5, 2:20, 27*) திடமாகப் போதித்து எழுதுகிறார்.

இந்த நிருபத்தை மூன்று தலைப்புகளின் கீழ் படிப்பது நல்லது. அப்போது இந்த நிருபத்தின் போதனைகள் நமக்கு தெளிவாகக் கிடைக்கும்.

I. அன்பு

அன்பைக் குறித்து யோவான் தரும் உபதேசங்களின் சாராம்சம் 1. பாவிகள் மீது கடவுளின் அன்பு (4:9, 10); 2. அந்த அன்பின் விளைவு புத்திர சுவிகாரம் (3 : 1); 3. நாம் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டிய அவசியம் (4:11; 3:11,23); 4. நாம் அன்பு கூருவதற்கான அத்தாட்சி (3:4); 5. அன்பிருந்தால் அவன் தேவனுடைய பிள்ளை இல்லாவிட்டால் பிசாசின் பிள்ளை (3 : 10); 6. நாம் ஏன் தேவனை நேசிக்கிறோம்? (4:19); 7. உலகத்தை நேசிப்பதன் பொருள் என்ன? (2: 15); 8. தேவனுடைய அன்பில் தேறினவர்கள் யார்? (2:5); 9. அந்த தேறின அன்பின் விளைவு எப்படிப்பட்டது? (4:18); 10. எல்லா உண்மைக்கும் மேலான சத்தியம் கடவுள் ஒளியாயிருப்பவர் என்பது மட்டுமல்ல (1 : 5), அவர் அன்பாகவே இருக்கிறார் (4 : 16) என்று அன்பைக் குறித்த சத்தியங்களை யோவான் அப்போஸ்தலன் எழுதுகிறார்.

II. பாவம்

பாவத்தைக் குறித்து இந்த நிருபத்தில் காணப்படும் உபதேசங்களின் சுருக்கம்: 1. எல்லோரிடத்திலும் பாவம் உண்டு (1:8,10); 2. பாவத்தைக் குறித்து இரண்டு இலக்கணங்கள் (3 : 4; 5:17); 3. கர்த்தர் ஏன் பூமிக்கு வந்தார்? (2 : 2; 3 : 5; 4:10); 4. பாவம் நீங்க கழுவப் படுதல் (1 : 7); 5. பாவங்களை அறிக்கையிட்டால் பாவம் மன்னிக்கப்படும் (1 :9); 6. நம்முடைய பாவங்கள் நமக்கு மன்னிக்கப்பட்டதென்று அறியலாம் (2 : 12); 7. மீண்டும் மீண்டும் பாவத்தில் விழ அவசியமில்லை (2: 1 ; 3 :8,9); 8. பாவத்தின் மீது ஜெயங்கொள்வது கிறிஸ்துவில் நிலைத்திருப்பதன் மூலம்; (3:6) அவரால் பாதுகாக்கப் படுவதன் மூலம் (5: 18) நமக்கு சாத்தியமாகிறது.

III. புதுப்பிறப்பு

புதுப்பிறப்பின் அனுபவமும் பலன்களும் பற்றி யோவான் தரும் விளக்கத்தின் சாராம்சம். 1. மறுபடியும் பிறந்தவன் தொடர்ந்து பாவத்தில் ஜீவிக்க மாட்டான் (3 :9); 2. தேவனால் பிறந்தவனிடம் அன்பு உண்டு (4 :7); 3. தேவனால் பிறந்தவனிடம் விசுவாசம் உண்டு (5 :1); 4. அவன் ஜெயங்கொள்ளுகிறவன் (5:4); 5. மறுபடியும் பிறந்தவன் பிதாவின் ஒரே பேறானவரால் நிலை நிறுத்தப்படுகிறான் (5:18);

நீதியைச் செய்கிறான் (2 : 29).

I யோவான் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை எழுதினதற்கான நான்கு காரணங்களை யோவான் கூறுகிறார். அத்தனையும் தேவனோடு உறவு கொண்டு வாழ்வதால் கிடைக்கும் பலன்கள். இதன் அடிப்படையில் இந்த நிருபத்தை நான்கு பிரிவுகளாக நாம் பகுத்துப் படிக்கலாம்.

1. கர்த்தரோடுள்ள ஐக்கியம் நிறைவான சந்தோஷம் தரும் (அதி 1)

முதல் அதிகாரம் 4ம் வசனத்தில், ''உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி எழுதுகிறேன்' என்கிறார் யோவான். இந்த நிருபத்தை யாருக்கு எழுதுகிறாறோ அவர்களுக்கு பாவங்கள் மன்னிக்கப் பட்டதால் சந்தோஷம் கிடைத்திருந்தது. ஆனால் 'நிறைவான சந்தோஷம்; தேவனோடு உள்ள ஐக்கியம் தரும் சந்தோஷம் கிடைத்திருக்கவில்லை.

எனவே யோவன் நிறைவான சந்தோஷம் பிதாவோடும், இயேசு கிறிஸ்துவோடும், உடன் விசுவாசிகளோடும், ஐக்கியங் கொள்வதன் மூலம் வருகிறது என்ற சத்தியத்தை முதல் அதிகாரத்தில் எழுதுகிறார்.

இந்த நிறைவான சந்தோஷம் தரும் ஐக்கியம் நான்கு நிபந்தனைகளை நிறைவேற்றினால் மட்டுமே கிடைக்கும்.

1. ஒளியில் நடக்க வேண்டும் 2. பாவங்களை தேவனிடம் அறிக்கையிட வேண்டும். 3. பாவங்கள் தேவனால் மன்னிக்கப்பட வேண்டும். 4. பாவமற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

2. கர்த்தரோடுள்ள ஐக்கியம் பாவத்தின் மேல் வெற்றிதரும் (2:1-7)

கர்த்தரோடு நாம் ஐக்கியப்படும் போது பாவ அடிமைத்தனத்தில் தொடர்ந்து இருக்க மாட்டோம். வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்யமுடியும். பாவம் செய்ய அவசியமிருக்காது. ஆயினும் அந்த ஐக்கியத்தை இழக்கும் போது நாம் பாவம் செய்கிறோம். நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசும் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து பரலோகத்தில் இப்போதும் பரிந்து பேசிக் கொண்டு இருக்கிறார். ஆகவே நாம் தேவனோடு தொடர்ந்து ஐக்கியம் கொள்கிறோம். அவர் நமக்காக ஜெபிக்கிறார், அவர் பிராயச்சித்தத்திற்கு முடிவில்லை. நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய ஐக்கியம் நித்தியமாக தேவனோடுள்ளது என்று யோவான் நம்மை சந்தோஷம் கொள்ளச் செய்கிறார் (2 : 1,2).

பாவத்தின் மேல் வெற்றி தரும் இந்த ஐக்கியம், நம்முடைய கீழ்ப்படிதல் (3-6), உலகத்தை நாம் சிநேகிக்காமல் இருப்பது (15-17), நம்முடைய சகோதரரிடத்தில் அன்பு கூர்வது (7-11) ஆகிய மூன்று காரியங்களைச் சார்ந்திருக்கிறது.

3. கர்த்தரோடுள்ள ஐக்கியத்தால் நாம் வஞ்சிக்கப் படாமல் காக்கப்படுகிறோம் (2:18 முதல் 4 : 6 வரை)

இரண்டாம் அதிகாரம் 26ம் வசனத்தில் ''உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்'' என்கிறார். அதாவது தேவனோடு நாம் ஐக்கியம் கொண்டால் எளிதாக வஞ்சிக்கப்படமாட்டோம் என்று எழுதுகிறார்.

கள்ளப் போதகங்கள் ஏற்கனவே சபைகளுக்குள் வந்து விட்டன. ஆனால் விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் அவைகளில் இருந்து பாதுகாக்கப் படுகின்றனர் *(2 : 20 - 27)* என்பதை யோவான் அவர்களை அறியச் செய்கிறார்.

அறிவுக் கொள்கையினர் நிறையப் பேசினார்கள். ஆனால் அசுத்தமாய் வாழ்ந்தார்கள். கிறிஸ்தவர்கள் அப்படி இருக்க முடியாது *(3 : 11-24)* என்று யோவான் போதிக்கிறார். இந்த உல்கம் நம்மைப் பகைக்கிறதற்குக் *(3 : 1)* காரணம் நாமும் அவர்களைப்போல் அசுத்தமாக வாழவில்லை என்பதனால்தான் என்பதை தெளிவாக்குகிறார்.

கள்ளப் போதகர்களைக் கண்டுபிடிக்க உதவும் காரியங்களை 4ம் அதிகாரம் *1* முதல் *6* வசனங்களில் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

4. கர்த்தரோடுள்ள ஐக்கியம் ஓர் ஆவிக்குரிய ஞானவாழ்க்கை (4:7 முதல் அதி. 5 முடிய)

தேவனுடைய வார்த்தையினாலும் தேவனுடைய ஆவியினாலும் உண்டாகிற சாட்சியின் மூலம் நாம் பெறுகின்ற தேவனுடைய காரியங்களைப் பற்றிய ஞானம் இது. நாம் எவற்றையெல்லாம் அறிந்திருக்கிறோம்? கீழ்க்காணும் வேத வசனங்களில் அவை சொல்லப் பட்டிருக்கிறது.

(1). அதி. 2 : 3,5,13,14,20,21,19 ; (2). அதி. 3 : 2,5,14,15,19,24; (3). அதி. 4 : 1,6,13,16; (4). அதி. 5 : 2,13,15, 18,19,20.

அத்தியாயம் - 26

II யோவான் நிருபம்

இந்த நூலினைப் பற்றி

புதிய ஏற்பாட்டு நிருபங்களில் இந்த ஒன்று தான் ஒரு அம்மாளுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்ட நிருபம். கிறிஸ்தவ அம்மாளின் பெயர் குறிப்பிடப் படவில்லை. தனியாருக்கு எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுக் கடிதங்களில் இது அருமையான ஒன்று. ஆதித் திருச்சபையில் யோவானும் பவுலும் தவிர வேறு அப்போஸ்தலர்கள் எவரும் இதுபோல் எழுதவில்லை. இந்த அம்மாள் யார் என்ற விபரங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. 'தெரிந்து கொள்ளப்பட்ட அம்மாள்' என்று யோவான் அழைப்பதால் பொருளாதார வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அம்மாளாய், கனம் பொருந்திய ஒரு ஸ்தீரியாக இருந்திருக்கலாம். வேறொரு விளக்கமும் 'அம்மாள்' என்ற வார்த்தைக்கு கொடுக்கப்படுகிறது. இது கிரேக்க மொழியில் 'கிரியா' என்றிருக்கிறது. இதற்கு இணையான எபிரேயச் சொல் 'மார்த்தாள்' என்பது. எனவே 'சகோதரி' என்று 13ம் வசனத்தில் வருவது மரியாளைக் குறிக்கலாம் என்று சில அபிப்பிராயப் படுவதுண்டு.

நூலாசிரியர் யார்?

இந்த நிருபத்தின் தொடக்கத்தில் அல்லது இறுதியில் எந்தப் பெயரும் இல்லாததால் இது யோவான் அப்போஸ்தலன் எழுதிய நிருபந்தானா? என்று சிலர் சந்தேகப்படுவதுண்டு. ஆனால் யோவான் அப்போஸ்தலன் எழுதியதற்கு போதிய சான்றுகள் உண்டு. முதல் நிருபத்தின் நடையிலேயே இதுவும் உள்ளது. இதில் உள்ள 13 வசனங்களில் 8 வசனங்கள் முதல் நிருபத்தில் வரும் அதே வார்த்தைகளாக அல்லது அதே கருத்தில் வருவதாக உள்ளன. இங்கு யோவான் தன்னை 'மூப்பர்' என்று அழைப்பதற்குக் காரணம் அவருக்கு வயது அதிகமாகி விட்டதால் (இதை எழுதும்போது 90 வயதாயிருந்திருக்கலாம்) என்று நினைக்கத் தோன்றுகிறது.

எழுதப்பட்ட நோக்கம்

இச்சிறிய நிருபத்தில் அன்பு என்ற சொல் நான்கு தடவை

வருகின்றது. *(1,3,5,6)*. 'சத்தியம்' என்ற வார்த்தை 5 முறை வருகிறது *(1ம் வசனத்தில் இருமுறை, 2,3,4ல் ஒரு முறை)*. மேலும் தவறான உபதேசங்களை சபைக்குள் கொண்டு வருகிற பிரசங்கிகளை ஆதரிக்கக் கூடாது என்று இந்த கனம் பொருந்திய அம்மாளுக்கு சொல்வதற் காகவே இந்த நிருபத்தை யோவான் எழுதினார்.

'சத்தியம் என்பது இந்த நிருபத்தின் முக்கியமான சொல். சத்தியம் என்பது கிறிஸ்துவைக் குறிப்பதாகவும் 'மெய்யானது' என்ற பொருளிலும் இங்கு பயன்படுத்தப்படுகிறது.

II யோவான் நிருபம் - ஓர் ஆய்வு

'சத்தியம்' என்பதை வைத்து இந்த நிருபத்தைக் கீழ்க்காணும் ஆறு பிரிவுகளில் படிக்கலாம்.

1. சத்தியத்தின் படி அன்பு கூர்தல் (வ.1)

யோவான் இந்த அம்மாளைக் கனப்படுத்திக் கீழ்க்காணும் விஷயங்களை எழுதுகிறார். சத்தியம் அன்பின் பிறப்பிடமாயுள்ளது; அன்பின் தன்மையாக உள்ளது என்கிறார். இந்த அம்மாள் சத்தியத்தின் படி நடக்கிறவர்கள்; சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து அன்பு கூருகிறவர்கள்.

இந்த அம்மாளிடம் யோவான் சத்தியத்தின்படி அன்பு கூர்ந்தது மட்டுமல்லாமல், இந்த அம்மாளையும் இவர்கள் குடும்பத்தையும் அறிந்த யாவரும் இவர்களை அப்படி நேசித்து வந்தார்கள்.

2. சத்தியத்தினிமித்தம் அன்பு கூர்தல் (வ.1)

இங்கு 'சத்தியம்' என்பது இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது. அவரே சத்தியம். அவர் சத்தியமாக நமக்குள் இருக்கிறார். நம்மோடு இருக்கிறார். அவருக்குள் நாமும் அன்பினால் கிரியை செய்கிறோம்.

3. சத்தியத்தில் நின்று வாழ்த்துக் கூறுதல் (வ.3)

யோவான் அனுப்பும் வாழ்த்துதலில் சத்தியத்தையும் அன்பை யும் இணைத்து வாழ்த்துச் சொல்லுகிறார். இது விசேஷமான வாழ்த்துதல். வேறு எந்த நிருபத்திலும் இப்படிப்பட்ட வாழ்த்துதலைக் காணமுடியாது.

4. சத்தியத்தில் நடத்தல் (வ. 4)

அம்மாளின் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதைக் கண்டு

யோவான் சந்தோஷப்படுகிறார் (வ.4). அதற்காகத்தான் தேவன் சத்தியங்களைக் கொடுத்தார் (வ.4). நாம் ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டும் (வ. 5). அன்பு உடனடியாக கீழ்ப்படிவதில் வெளிப்படும் (வ.6) என்கிறார்.

5. சத்தியம் சோதிக்கப்படுதல் (7 - 9)

இந்தப் பூமியில் கிறிஸ்து வாழ்ந்தபோது அவர் கொண்ட மானிடத் தன்மையை ஏற்க மறுப்பதும், அவருடைய இரண்டாம் வருகையில் மானிடத்தன்மையில் வருவார் என்பதை மறுத்துப் பேசுவதும், ஒருவன் அந்தி கிறிஸ்துவின் ஆவி உடையவன் என்பதற்கு அடையாளம். அவன் வஞ்சகனும் அந்தி கிறிஸ்துவு மாயிருக்கிறான் (வ. 7) என்கிறார் யோவான். அவன் பலனை (கிரீடத்தை) இழந்து போவான்.

6. சத்தியத்திற்காக உறுதியாய் நிற்றல் (9 - 12)

கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக் கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (வ. 9).

கள்ளப் போதகர்களை ஏற்றுக் கொண்டாலோ, அவர்களுக்கு வாழ்த்துதல் சொன்னாலோ, அவர்கள் சத்தியத்திற்காக நிற்க தவறி விட்டார்கள் (வ.10) என்று தைரியமாக இந்த கனம் பொருந்திய அம்மாளுக்குச் சொல்லி, கடைசியில் அன்போடு வாழ்த்துதலும் கூறி, நிருபத்தை முடிக்கிறார் யோவான் (12,13).

அத்தியாயம் - 27

III யோவான் நிருபம்

நூலைப் பற்றி

இந்த நிருபம் 'சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு' எழுதப்பட்டது என்று முதல் வசனத்தில் காண்கிறோம். இதுவும் அப்போஸ்தலனாகிய யோவான் தனது முதிர்வயதிலே எழுதின நிருபமே. நடபடிகள் நூலிலும் சில நிருபங்களிலும் காயு என்ற பெயரிலே 5 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர். *(1).* மக்கேதோனியா பட்டணத்து காயு *(அப். 19 : 29); (2)* தெர்பையைச் சேர்ந்த காயு *(அப். 20 :4); (3)* பவுல் ஞானஸ்நானம் கொடுத்த காயு *(1 கொரி. 1 : 14); (4)* பவுலை தன் வீட்டில் உபசரித்தவனாகிய காயு *(ரோ. 16 :23); (5)* இந்த நிருபத்தை பெற்றுக் கொள்பவனாகிய காயு. கடைசி மூன்று 'காயு'க்களும் ஒரே நபர் தான் என்று கருப்படுகிறது. எனவே இந்த காயு என்பவர், யோவானுடைய ஊழியத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு (வ. *4*), பின்பு பவுலினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர். கொரிந்து சபையில் வசதிபடைத்தவரும், எல்லோரையும் நன்கு உபசரிக்கிறவருமாகிய, ஒரு நல்ல விசுவாசி இந்த காயு.

இந்த நிருபம் எழுதப்பட்ட நோக்கம்

ஆதித் திருச்சபை கிறிஸ்தவர்கள் பலர் ஊர் ஊராகச் சென்று சவிசேஷத்தை அறிவித்து வந்தனர். இவர்கள் எந்த சம்பளமு மின்றி (வ.7) பல்வேறு பட்டணங்களில், கிராமங்களில் குடியேறியிருந்த கிறிஸ்தவர்களின் ஈகையின் மூலம், தங்கள் உணவு, உடை, போன்ற அன்றாட தேவைகள் சந்திக்கப்பட்ட அளவில், கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கும் பணியைச் செய்து வந்தனர். காயு அங்கத்தினராக இருந்த கொரிந்து சபையில் தியோத்திரேப்பு என்பவன், நற்செய்தியை அறிவித்து வந்தவர்களையும் யோவா னையும் மற்ற உடன் ஊழியர்களையும், சபையில் ஏற்றுக் கொள்ளவிடாமல் தடுத்தான். சபையோரில் யாராவது அவர்களை வீடுகளில் ஏற்றுக் கொண்டால், அவர்களை சபை நீக்கம் செய்து வந்தான் (வ. *10*). யோவான் இது பற்றி ஏற்கனவே ஒரு நிருபம்

அந்த சபைக்கு எழுதியிருந்தார். இந்த நிருபம் அந்நாட்களில் சபைகளுக்கு எழுதப்பட்டு, பின்பு தொலைந்து போன பல நிருபங்களில் ஒன்று. தியோத்திரேப்பு அந்த நிருபத்தையும் ஏற்க வில்லை. அதோடு கூட யோவானின் அப்போஸ்தல அதிகாரத்தை ஒப்புக் கொள்ள மறுத்தான் (வ.9).

இது சம்பந்தமாகவே வயதான யோவான் அப்போஸ் தலன் காயுவின் உதாரத்துவத்தையும் கிறிஸ்துவின் ஊழியர்களை உபசரிக்கும் அன்புக் கிரியைகளையும் பாராட்டி சபைக்கு அனுப்பப்படும் சுவிசேஷ ஊழியர்களை உபசரிக்கும்படி காயுவுக்கு எழுதுகிறார். யோவான் அங்கு வரும் போது இந்த தியோத்தி ரேப்புவின் காரியத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் எழுதுகிறார்.

இந்நிருபத்தில் வரும் மூன்று நபர்கள்

1. ஏற்கனவே நாம் பார்த்த காயு என்பவர் அன்புள்ளவரும் எல்லோரையும் உபசரிக்கிறவருமாய் இருக்கிறார். 2. தியோத்திரேப்பு அகங்காரம் நிறைந்த ஒரு சபை அலுவலராக காணப்படுகிறான். 3. தெமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல் சத்தியத்தாலும் சாட்சி பெற்றவன். யோவானும் இவனைக் குறித்து நற்சாட்சி கொடுக்கிறார்.

உபகாரக்காரியங்கள்

இந்த நிருபத்தில் சத்தியங்களைக் குறித்த உபதேசங்கள் ஒன்றுமில்லாவிட்டாலும் ஊழியர்களை உபசரிப்பதையும் அவர்களுக்கு உதவிகள் செய்வதையும் குறித்து எழுதப்பட் டுள்ளது. இந்நாட்களில் இருப்பது போல் சில சபைகளில் எதேச்சதிகாரமாய் அகங்காரத்தோடு காரியங்களைச் செய்யும் சபை அலுவலர்கள் சிலர் அந்நாட்களிலும் இருந்தனர். அவர்களில் தியோத்திரேப்பும் ஒருவன். ஊழியர்களை உபசரிப்பதில் இவர் கள் மோசமாக இருந்தனர் என்று இந்த நிருபத்திலிருந்து அறி கிறோம். கடந்த காலத்தில் மட்டுமல்லாமல் இந்த நாட்களிலும் கிறிஸ்தவ சபைகளில் இது போன்றவர்கள் இருக்கிறதைக் காண்கிறோம். இவர்கள் சபையில் உள்ள தங்களுக்கு மேல் அதிகாரம் படைத்த, யோவான் போன்ற அப்போஸ்தலர்களைக் கூட மதிக்காமல் காரியங்களைச் செய்து வருவதுண்டு.

சத்தியம் என்ற வார்த்தை

இரண்டாம் நிருபத்தில் வருவது போலவே 'சத்தியம்' என்ற வார்த்தை இந்த நிருபத்திலும் அடிக்கடி கையாளப்படுகிறது. முதல் வசனத்தில் காணப்படுவது போல், 1. அன்பின் தன்மை உடையதாயும் அன்பின் பிறப்பிடமாகவும் 'சத்தியம்' எண்ணப்படுகிறது (வ.1). 2. சத்தியம் என்பது நமக்குள் இருக்கிற தேவ பிரசன்னமும் வல்லமையாகவும் கருதப்படுகிறது (வ. 3). 3. அது வெளியரங்கமான கிரியைகளில் வெளிப்படுவதாகவும் பேசப்படுகிறது (3,4). 4. கிறிஸ்தவ ஊழியத்திலும், ஆவிக்குரிய யுத்தத்திலும் 'சத்தியம்' ஆயுதமாகப் பயன்படுகிறது (வ.8). 5. நம்முடைய நண்பனாகவும் உடன் வேலையாளாகவும் சத்தியம் இருக்கிறது (வ.8). அப்படி இருக்கும் போது மாத்திரமே சத்தியம் நம்மைக் குறித்து சாட்சி பகரும் (வ. 12).

III யோவான் நிருபம் - ஓர் ஆய்வு

இந்த சிறிய நிருபத்தை முதலில் மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம் . I. அறிமுகம், வாழ்த்து சொல்லும் பகுதி (1-4); II. இந்த நிருபத்தின் நோக்கத்தைக் கூறும் பகுதி (5-11); III. முடிவுரை (12-14).

I. அறிமுகமும் வாழ்த்துச் சொல்லுதலும் (1-3)

இப்பகுதியை மேலும் பகுத்து அப்போஸ்தலரின் அன்பு, அப்போஸ்தல ரின் ஜெபம், அப்போஸ்தலரின் மகிழ்ச்சியும் களிகூர்தலும் என்று சற்று விரிவாகப் படிக்கலாம்.

1. யோவான் அப்போஸ்தலரின் அன்பு (வ.1)

யோவான் அப்போஸ்தலரின் மிக உயர்ந்த வகையான அன்பு கூர்தல், இந்த முதல் வசனத்தின் மூலம் நமக்குத் தெரிய வருகிறது. அவருடைய அன்பு உண்மையானது; சத்தியத்தின்மேல் கட்டப்பட்ட அன்பு; சத்தியத்தின் காரணமாக உண்டான அன்பு.

2. யோவான் அப்போஸ்தலரின் ஜெபம் (வ. 2)

"உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்". இதில் வாழ்த்தும் ஜெபமும் இணைந்து கொள்கிறது. ஒரு வேளை காயு சுகவீனமாயிருந்தாரோ, என்று கருத இடமிருக்கிறது. சரீர சுகவீனமோ பலவீனமோ

இருந்திருக்கலாம். ஆனால் காயுவின் ஆத்துமா நன்றாக வாழ்ந்து கொண்டிருந்தது!

3. யோவான் அப்போஸ்தலரின் மகிழ்ச்சி (3,4)

சத்தியம் காயுவுக்குள் தங்கி அவருடைய ஆவிக்குரிய வல்லமை யாயிருந்தது. சத்தியத்திலே அவர் நடந்தார். 'சத்தியம்' அவர் சுவாசிக்கும் மூச்சாக இருந்தது. இதுவே யோவானை மகிழ்ந்து களி கூரச் செய்தது எனலாம்.

II. நிருபத்தின் நோக்கத்தைக் கூறும் பகுதி (5 - 11)

இந்தப் பகுதியைக் கீழ்க்காணும் இருபிரிவுகளாகப் படிக்கலாம்.

1. யோவான் அப்போஸ்தலரின் பாராட்டும் அறிவுரையும்

5ம் வசனத்தில் சபையிலுள்ள யூதக் கிறிஸ்தவர்களுக்கும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கும் வித்தியாசம் காட்டாமல், காயு உதவிகளைச் செய்து வருவதை யோவான் பாராட்டுகிறார். எங்கே யோவான் அப்போஸ்தலரின் பாராட்டு முடிகிறது, எங்கே அறிவுரை ஆரம்பிக்கிறது என்று சொல்ல இயலாதபடி இரண்டையும் அவர் சேர்த்து எழுதுகிறார்.

2. அப்போஸ்தலரின் கண்டனம் (9 - 11)

9ம் வசனத்தில் அவர் குறிப்பிடும் 'நிருபம்' யோவானால் இதற்கு முன்பு சபைக்கு எழுதப்பட்டு காணாமற்போன நிருபம். அந்த நிருபத்தை சபையின் முக்கிய அலுவலராக இருந்த தியோத்திரேப்பு சபையார் யாருக்கும் அறிவிக்கப்படாமல் பார்த்துக் கொண்டான். எனவே இந்த நிருபத்தில் அவனைக் கண்டனம் பண்ணுகிறார். சபையில் முதன்மை ஸ்தானத்தை விரும்புகிற தியோத்திரேப்பு யோவானைக் குறித்து தீதாகப் பேசி யோவான் அனுப்பி வைத்த உடன் ஊழியர்களை சபையில் ஏற்றுக் கொள்ளவில்லை. மற்றவர்களும் தங்கள் வீடுகளில் அவர்களை ஏற்றுக் கொள்ள விடவில்லை.

III. முடிவுரை (10 - 14)

முடிவுரையையும் கீழ்க்காணும் இருபிரிவுகளாகக் காணலாம்.

1. யோவான் அப்போஸ்தலரின் பாராட்டுதல்கள் (வ. 12)

தேமேத்திரியுவைப் பற்றி மற்றவர்கள் கூறிய நற்சாட்சிகளையும் கூறி, அவனைக் குறித்த தனது நற்சாட்சிகளையும் கூறி, சத்தியத்தில்

நற்சாட்சி பெற்றவன் தேமேத்திரியு என்று எழுதுகிறார்.

2. யோவான் அப்போஸ்தலரின் விளக்கம் (13 - 14)

இவ்வளவு சிறியதாக ஏன் இந்த நிருபத்தை எழுதினார் என்பதற்கு அவரே விளக்கம் தருகிறார். சீக்கிரமாய் காயுவிடம் போய் முகமுகமாய் பல காரியங்கள் பேசப் போவதால் இந்தச் சின்ன நிருபத்தை எழுதி முதலாவது அனுப்புகிறதாகக் கூறுகிறார். சகோதர சினேகத்தைப் பெரிதாக மதிப்பதை கடைசியில் கூறி வாழ்த்துதல் சொல்லி முடித்து விடுகிறார்.

அத்தியாயம் - 28

யூதா நிருபம்

நூலாசிரியர்

இந்த நிருபத்தை எழுதியவர் யூதா என்பவர். இவர் கர்த்தருடைய சகோதரன். எனவே, யாக்கோபு அப்போஸ்தலனுக்கும் சகோதரன். (மத். 13 :55; மாற்கு 6 :3). ஆனால் யாக்கோபுவைப் போல இவர் ஒரு அப்போஸ்தலன் அல்ல. சாதாரண சீடன். ஆவியில் தீவிரமாய்ச் செயல்படுகிறவர். ஒரு தீர்க்கதரிசிக்குள்ள வைராக்கியமுடையவர். இவைகளுக்கெல்லாம் பின்னணியில் இருக்கும், அவருடைய பட்சமான உள்ளம் பிறரிடம் அன்பு காட்டத் துடிக்கும். 'பிரியமானவர்களே' என்பது அவருக்குப் பிரியமானதொரு வார்த்தை! (3,17,20).

யாருக்கு எழுதப்பட்டது?

கி.பி. 69ம் ஆண்டில் இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கவேண்டும். காரணம் II பேதுரு நிருபத்தில் வருகிற ஒரு தீர்க்கதரிசனம் பற்றி இந்த நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. IIபேதுரு கி.பி. 66 வரை எழுதப்படவில்லை. இந்தக் கடிதத்தை யூதா எழுதுவதற்கு சில வருடங்களுக்கு முன்புதான் இவருடைய சகோதரன் யாக்கோபு இரத்த சாட்சியாக மரித்தார்.

யூதா நிருபம் குறிப்பாக ஒரு சபைக்கென்று எழுதப்படாமல் கிறிஸ்தவர்களுக்கென்று பொதுவாக எழுதப்பட்டது.

இந்த நிருபம் எழுதப்பட்ட நோக்கம்

மூன்றாம் வசனத்தில் யூதா சொல்கிறபடி இரட்சிப்பைக் குறித்து பெரிய நூலொன்று அவர் எழுத எண்ணியிருந்தார். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவருடைய திட்டத்தை மாற்றினார். ஏற்கனவே ஆரம்பகால சபைகளில், உள்ளேயிருந்த சில துரோகிகளால் சபைகள் பெரும் ஆபத்துக்குள்ளாயின. சபையின் விசுவாசிகளில் பலர் கிறிஸ்தவ விசுவாசத்தை தள்ளி விட்டனர். ஆயினும் தொடர்ந்து சபைகளில் இருக்க ஆசைப்பட்டார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிப்புக் கூறி தங்கள்விசுவாசத்தை ஜாக்கிரதையாய்க்

காத்துக்கொள்ளும்படி இந்த யூதா புத்திமதி கூறுகிறார்.

முழு வேதத்திலும் இந்த யூதா நிருபம் ஒரு கன்னியத்திற்குரிய படைப்பு எனலாம். ஆதிகாலத்திலே இருந்து வந்த விசுவாச துரோகம் கடைசிக்காலம் வரைக்கும் இருந்து வரும் என்கிறார் யூதா.

அதன் வரலாற்றை ஆரம்ப முதல் கடைசி வரை இந்தச் சிறிய நிருபத்தில் சொல்ல முற்படுகிறார். பேராசை பிடித்த தேவதூதர்கள் முதல், காலாகாலமாய் விசுவாசத் துரோகம் செய்யும் துன்மார்க்கக் கூட்டத்தார் இருந்து வந்திருக்கிறார்கள். மேலும் தனிநபர்கள் மேலும் வந்த ஆக்கினைகள் அடங்கிய வரலாற்றினை மற்றவர்களுக்கு எச்சரிப்பாக இந்த நிருபத்தில் எழுதி வைத்திருக்கிறார் யூதா.

சில சிறப்பான விஷயங்கள்

மோசேயினுடைய சரீரத்திற்காக பிசாசுடன் பிரதானதூதன் மிகாவேல் செய்த தர்க்கம் பற்றியும்(வ.9), ஏனோக்கின் தீர்க்க தரிசனங்கள் பற்றியும் (வ.15) இந்த நூலில் தான் நாம் படிக்கிறோம்.

யூதா நிருபம் - ஓர் ஆய்வு

இந்த நிருபத்தை ஆறு பிரிவுகளாகப்பிரித்து தெளிவாகப் படிக்கலாம்.

1. இயேசு கிறிஸ்துவுக்காக பரிசுத்தமாகக் காக்கப்பட்டவர்கள்

யூதா இந்த நிருபத்தை பொதுவாக தேவஜனத்துக்கு எழுதுவதாகக் கூறுகிறார். இந்த தேவஜனம் தேவனால் அழைக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவுக்காகவே பரிசுத்தமாக காக்கப்பட்டு வருகிறது இவர்களுக்கு வாழ்த்துதல் கூறி எழுதுகிறார். இவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்கள் இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டிருப்பவர்கள்.

2. விசுவாசத்திற்காக போராடவும் அதைக் காக்கவும் அழைக்கப் பட்டவர்கள் (3 - 4)

மூன்றாம் வசனத்தில் யூதா, இரட்சிப்பைக் குறித்தே இவர்களுக்கு முதலில் எழுத நினைத்திருந்தார். பரிசுத்த ஆவியானவர் அதை மாற்றி தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் இவர்கள் போராட வேண்டும் என்று எழுதும்படி தன்னை ஏவியதாக, இந்த

வசனங்களில் தெரியப்படுத்துகிறார். காரணம் தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்கள் சிலர் சபைகளுக்குள் நுழைந்து விடுகிறார்கள் என்பதே.

3. விசுவாசத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் நமக்கு ஒரு எச்சரிப்பாய் இருக்கிறார்கள் (5 - 7)

இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்டு இரட்சித்தாலும் அவர்களில் விசுவாசியாதவர்கள் அழிக்கப்பட்டார்கள் (வ. 5). தேவனுக்குக் கீழ்ப்படியாத தேவதூதர்களும் நியாயத்தீர்ப்புக்கென்று அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் (வ.6). சோதோம் கொமோரா பட்டணத்தாரும் அக்கினியின் ஆக்கினையை அடைந்தார்கள். இவர்கள் எல்லாம் நமக்கு நல்ல எச்சரிப்புகள் என்கிறார் யூதா.

4. விசுவாசத்தைக் காத்துக் கொள்ளாதவர்களின் குணக்கேடுகள் (8 - 19)

விசுவாசத்தை விட்டு வழுவிப் போகிறவர்கள் கொஞ்சங்கொஞ்சமாய் அறவொழுக்கத்தில் எப்படியெல்லாம் அழிகிறார்கள் என்பதை யூதா விவரிக்கிறார்.

இவர்கள் பிரிந்து போகிறவர்கள். ஜென்ம சுபாவத்தார். ஆவியில்லாதவர்கள் (வ.19). பரியாசக்காரர். இச்சைகளின்படி நடக்கிற துன்மார்க்கர் (வ. 18). மாம்சத்தை அசுசிப்படுத்திக் கொண்டு கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறவர்கள்; மகத்துவங்களை தூஷிக்கிறவர்கள் (வ.18). மிருகங்களைப் போல தங்களை கெடுத்துக் கொள்ளுகிறார்கள் (வ.10); முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், இறுமாப்பாய் பேசுகிறவர்களும், முகஸ்துதி செய்கிறவர்களுமாயிருக்கிறார்கள் இவர்கள் (வ. 16) என்கிறார்.

இவர்கள் தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிறவர்கள். தண்ணீரற்ற மேகங்கள் போன்றும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரம் செத்து வேரற்றுப்போன மரங்களைப் போன்றவர்களுமாயிருக்கிறார்கள்(வ.12). வெளித்தோற்றத்துக்கு 'பக்தி மான்கள்' இவர்கள் காரியங்கள் அவமானத்துக்குரியவைகள் (வ.13). என்று விசுவாசத்தைக் காத்துக் கொள்ளாத மாய்மால கிறிஸ்தவர்களைக் கண்டிக்கிறார்.

5. தேவஜனம் விசுவாசத்திலும் தேவ அன்பிலும் தங்களைக் காத்துக்கொள்பவர்கள் (20 - 23)

தேவ மக்களில் சிலர் சத்தியத்திற்குக் கீழ்ப்படியலாம். அதே சமயம்

அன்பற்றவர்களாய் நடந்து கொள்ளலாம். இப்படிப்பட்டவர்களுக்கு, பரிசுத்தமான விசுவாசத்தில் இவர்கள் உறுதியாயிருப்பதோடு தேவனுடைய அன்பிலே தங்களைக் காத்துக்கொள்ளும்படி புத்தி சொல்கிறார் யூதா.

இந்த நான்கு வசனங்களில்வரும் அவருடைய கீழ்க்காணும் ஆலோசனை வார்த்தைகள் நன்கு கவனிக்கப்படவேண்டியவை.

'உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்' (20) 'ஜெபம் பண்ணுங்கள்' (20), 'இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்' (21), 'பகுத்தறிவுள்ளவர்களாயிருங்கள்' (22) 'இரக்கம் பாராட்டுங்கள்' (22) அக்கினியிலிருந்து இழுத்து விடுங்கள்' (22) 'பயத்தோடே இரட்சியுங்கள்' (22), 'கறைப்பட்ட வஸ்திரத்தை வெறுத்துத் தள்ளுங்கள்' (23) இப்படி கண்டிப்பாகக் கூறி எச்சரிக்கிறார்.

விசுவாசிகளுக்கு எவ்வளவு தேவையான ஆவிக்குரிய அறிவுரைகள்!

6. தேவஜனத்தை தேவன் வழுவாமல் காப்பார் (24 - 25)

கடைசி இரண்டு வசனங்களும் அருமையான வாழ்த்துதலும் ஆசிர்வாதங் கூறுதலுமாக அமைந்துள்ளன. இதை மிகவும் அழகாக எழுதியுள்ளார் யூதா. வழுவாதபடி நம்மைக் காக்க தேவன் வல்லவர், நம்மைக்காப்பார் என்பது எவ்வளவு மகிமையான வாக்கு!

'வழுவாதபடி' என்பதிலிருந்து ஒரு பெரிய தேவ கிருபையை புரிந்து கொள்ளவேண்டும். விழுவதற்கு முன் வழுவுதல். விழாமல் காப்பாற்றுகிறார் என்றல்ல, அதற்கு முன்பே தேவன் தமது ஜனத்தை வழுவாமலேயே காத்துக் கொள்வார் என்கிறார் யூதா. தேவனுக்கே மகிமை!

அத்தியாயம் - 29

வெளிப்படுத்தின விசேஷம்

முகவுரை

வேதாகமத்தில்எளிதில் எவரும்புரிந்து கொள்ள முடியாத ஒரு கடினமான புத்தகம் இது. இதைப் படிப்பவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டென்று புத்தகத்தின் தொடக்கத்தில் *(1:3)* குறிப்பிட்டிருந்தாலும் இது அநேகரால் படிக்காமல் விடப்பட்டு விடும் ஒரு புத்தகம். இதை கிறிஸ்தவர்கள் படிக்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வதில் சாத்தானுடைய பெரிய பங்கு உண்டென்று நினைக்கத் தோன்றுகிறது. காரணம் இந்தப் புத்தகம் அவனுடைய இறுதியான வீழ்ச்சியையும் அழிவையையும் குறித்துச் சொல்லு கிறது.

இங்கு நாம் சற்று சிந்திக்க வேண்டும். இது புதிராகவும் படிப்பதற்கு சற்று கடினமாகவும் உள்ளதால் இதை ஏன் நாம் படிக்காமல் விடவேண்டும்? உதாரணமாக, விஞ்ஞானிகள் விளங்காத கடினமான விஞ்ஞான புதிர்களைக் கண்டு பிடிக்க எவ்வளவோ பிரயாசம் எடுக்கிறார்கள் அல்லவா? அப்படியானால் நாமும் ஏன் பிரயாசப்பட்டு இதைப் படிக்கக்கூடாது.

இந்நூல் பரிசுத்த வேதாகமத்திற்கு ஒரு சிறப்பான முடிவாக அமைந்துள்ளது

அறுபத்தாறு ஆவிக்குரிய நூல்களைக் கொண்ட பரிசுத்த வேதாகமம் என்ற இந்த தெய்வீக நூலகத்திற்கு, இது சிறப்பாக அமைந்துவிட்ட கடைசி நூல். வேத அறிஞர் ஒருவர் இதற்கும் ஆதியாகமத்திற்கும் உள்ள குறிப்பான வித்தியாசங்களை எடுத்துக் கூறுகிறார்; ''ஆதியாகமத்தில் அழகான பூமி உருவாக்கப்பட்டதைப் பார்க்கிறேன். வெளிப்படுத்தல் நூலில் அது இல்லாமல் கடந்து போவதைக் காண்கிறேன். ஆதியாகமத்தில் சூரியனும் சந்திரனும் படைக்கப்பட்ட விதம் பற்றிப் படிக்கின்றேன். வெளிப்படுத்தலில் அவைகளுக்கு இனி தேவையில்லாமற் போயிற்றென்று வாசிக்கின்றேன். முதல் மனிதனுடைய குடியிருப்பு ஒரு தோட்டத்தில் தொடங்கியதை ஆதியாகமம் கூறுகின்றது. வெளிப்படுத்தல் நூல் சகல ஜாதிகளும்

வாழக் கூடியதான ஒரு உன்னதமான பட்டணத்தை எனக்குக் காண்பிக்கிறது. ஆதியாகமம் தேவன் நடத்தி வைத்த, முதல் ஆதாமின் கலியாணம் பற்றிக் கூறுகிறது. வெளிப்படுத்தின விசேஷம், இரண்டாம் ஆதாமாகிய ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் பற்றி விவரிக்கிறது. ஆதியாகமத்தில் நமது எதிரியான சாத்தானின் முதல் சோகத்தோற்றம் காணப்படுகிறது. வெளிப்படுத்தல் நூலில் அவனுடைய சோக முடிவு சொல்லப்படுகிறது. ஆதியாகமத்தில் துக்கமும் பாடும் விம்பலும் கண்ணீரும் மனிதனுக்கு வந்த செய்தி அறிகிறோம். வெளிப்படுத்தலில் கண்ணீர் யாவும் துடைக்கப்படும். இனி கண்ணீர் இல்லை, துக்கமில்லை, வேதனையில்லை என்ற நல்ல செய்தி படிக்கிறோம். ஆதியாகமத்தில் 'பாவத்தினால் தேவ சாபம் வந்துவிட்டதே' என்ற முனகல் கேட்குது, வெளிப்படுத்தல் நூலில் 'இனி சாபமில்லை' என்ற முழக்கம் கேட்குது. ஆதியாகமத்தில் ஜீவ விருட்சமிருந்த தோட்டத்திலிருந்து மனிதன் துரத்தி விடப்பட்டான். வெளிப்படுத்தலில் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்க ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் மீட்கப்பட்ட மனிதன் மகிழ்வுடன் வரவேற்கப்படுகிறான். எத்தனை இனிமையான முடிவு! எத்தனை மேலான புதுவாழ்வை வாக்குப்பண்ணியிருக்கிறார்.

இந்நூலைப் புரிந்து கொள்ள சில ஆலோசனைகள்

1. இயேசு கிறிஸ்துவை ஜெயங்கொண்ட ராஜாதி ராஜாவாக இந்நூலில் காண்கிறோம் என்ற விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தப் புத்தகத்தில் முக்கிய பொருள், ''இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு'' இந்நூல், இயேசு கிறிஸ்து பரலோகத்தில் இருப்பதை நமக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. இயேசு கிறிஸ்துவைப் பற்றி இந்த நூல் என்ன சொல்கிறது என்ற கண்ணோட்டத்தில் இதைப் படிப்பவர்களுக்கு, அவரைப் குறித்த அற்புதமான வெளிப்பாடுகள் கிடைக்கும். அவருக்கு ''அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்'' என்ற பெயர் இந்த நூலில் 26 தடவை வருகின்றது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய செய்திகளே இதில் நிறைய இருக்கிறது.

2. மூன்றாம் அதிகாரம் முடிந்த பிறகு, திருச்சபை பூலோகத்தில் இருப்பதாகப் பேசப்படவில்லை. அதிகாரம் மூன்றுக்கும் நான்குக்கும் இடையில், சபை எடுத்துக் கொள்ளப்படுகிற சம்பவம் நடந்து விட்டது. நான்காம் அதிகாரம் தொடங்கி உபத்திரவ காலம் பற்றியும்கடைசி நிகழ்ச்சிகள் பற்றியுமே எழுதப்பட்டிருக்கிறது.

3. நடந்ததை திரும்பத் திரும்பக் கூறும் ஒழுங்கு, வேதத்தின் மற்ற புத்தகங்களில் குறிப்பாக, ஆதியாகமத்தில் இருப்பது இங்கும் வருகிறது. உதாரணமாக, ஊர்வலம் போன்ற ஏதாவது ஒரு முக்கிய நிகழ்ச்சியில் நாம் பங்கு பெற்று வீடு திரும்பினால் வீட்டிலுள்ள வர்களுக்கு அதைத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறும் வண்ணமாக, சொல்ல வேண்டிய விஷயங்களைக் கூறிய பிறகு, கூடுதலான விஷயங்களைக் கூற, முந்தின விஷயங்களை திரும்பவும் சொல்வது போல் இங்கு சில இடங்களில் எழுதப்பட்டுள்ளது. இதை யோவான் தமது இந்த நூலில் செய்கிறார். எனவே, வெளிப்படுத்தல் நூலைப் படிக்கும்போது இதனை நினைவில் கொண்டு படிக்கவேண்டும்.

பூமியில் நியாயத்தீர்ப்புகள் தொடங்கியதையும், இயேசு கிறிஸ்து ஜெயங்கொண்டு முடித்து விட்டதையும் அதி 4 முதல் அதி. 11 : 18 வரை கூறிய பிறகு , அதே விஷயங்களை அதி. 11 : 19ம் வசனம் முதல் அதி. 16 வரையிலும் கூறி விட்டு மீண்டும் 17ம் அதிகாரம் முதல், 22ம் அதிகாரம் வரையிலும் திரும்பவும் யோவான் எழுதுகிறார். இதைப் படிக்கும் போது கவனியுங்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் - ஓர் ஆய்வு

வெளி. 1 : 19ல் மூன்று தலைப்பின் கீழ் இந்நூலைப் படிக்க வேண்டும் என்ற குறிப்பு ஒன்றை அறிகிறோம். அதைப்பின் பற்றி கீழ்க்காணும் விதத்தில் இந்நூலைப் பகுத்து ஆய்ந்து படித்துப் பயனடையலாம்

I. மகிமையடைந்தவரான இயேசு கிறிஸ்து (அதி 1)

இந்த அதிகாரத்தில் ''இயேசு கிறிஸ்து தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப் படுத்தின விசேஷம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது (1 :1) வெளிப் பாடுகள் அல்ல 'வெளிப்பாடு', விசேஷங்கள் அல்ல 'விசேஷம்' என்பதை நாம் படிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டும்.

இது இயேசுவைக் குறித்த வெளிப்பாடு. யோவானைக் குறித்த வெளிப்பாடு அல்ல, வாசிக்கிறவனும், கேட்கிறவனும் கைக்கொள் ளுகிறவனும் ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெறுவான் (வ. 3) என்று யோவான் எழுதுகிறார்.

இயேசுகிறிஸ்து தமது மகிமையில் யோவானுக்கு வெளிப்பட்டார். அவர் கேட்டதையும் கண்டதையும் 10ம் வசனம் முதல் 16ம் வசனம் வரை எழுதியுள்ளார். யோவான் தனக்கு அங்கு சம்பவித்தவை

களையும் மகிமையில் இயேசு கிறிஸ்து அவருக்கு கட்டளையிட்டவைகளையும் 17 - 20 வரை எழுதியுள்ளார்.

5ம் வசனத்தில் ஏழு சபையில் உள்ள விசுவாசிகளுக்கு வாழ்த்துக் கூறி, 6ம் வசனத்தில் இயேசு கிறிஸ்துவின் அன்பையும் அவர் நமக்காக செய்தவைகளையும் எடுத்துக் கூறி, ''அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்'' என்று இயேசுவைத் துதிக்கிறார்.

II. திருச்சபையின் தலைவரான இயேசு கிறிஸ்து (அதி. 2, அதி 3)

இரண்டாம் அதிகாரத்திலும், மூன்றாம் அதிகாரத்திலும், அந்நாட்களில் இருந்த எபேசு, சிமிர்னா பெர்கமு, தியத்திரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா ஆகிய ஏழு சபைகளின் தூதர்களுக்கு சபைகளில் காணப்பட்ட நிறைகளையும் குறைகளையும் கூறி எச்சரிப்புகள் கிறிஸ்து தரும் கடிந்து கொள்ளுதல்கள், புத்திமதிகள் ஆகியவற்றையும் எழுதும்படி இயேசு கிறிஸ்து யோவானிடம் கூறுகின்றார்.

இவைகள் ஆசியாவிலிருந்த அக்காலத்து சபைகளுக்கு ஆவியானவர் சொன்ன சிறப்பான புத்திமதிகள். இக்காலத்து சபைகளுக்கும் இவை அவசியமானவை.

முதல் மூன்று அதிகாரங்களிலிருந்து நமக்கு ஆவியானவர் ஒரு உண்மையைக் கற்றுக் கொடுக்கிறார். யோவான் பிதாவாகிய கடவுளை தரிசித்ததைக் குறித்து (4 : 3) எழுதுவதற்கு முன்பு முதல் மூன்று அதிகாரங்களிலே, குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை தரிசித்து விட்டதை எழுதியுள்ளார். குமாரன் மூலமாக அல்லாமல் ஒருவரும் பிதாவிடம் வரமுடியாது; குமாரனைத் தரிசித்தவர்களே பிதாவின் சமூகத்தில் நிற்க முடியும்; அவரே பிதாவிடம் மனிதர்கள் வர ஒரே வழி என்ற ஆவிக்குரிய மேலான சத்தியத்தை இதில் கற்றுக் கொள்கிறோம்.

III. ஜெயங்கொண்டவரான இயேசு கிறிஸ்து (அதி. 4 - அதி. 22)

முதல் பகுதியில் யோவான் கண்டவைகள் எழுதப்பட்டன. இரண்டாம் பகுதியில் சபைகளில் இருப்பவைகள் எழுதப்பட்டன. இந்த மூன்றாம் பகுதியில், இனி சம்பவிக்கப் போகிறவைகள் எழுதப்பட்டுள்ளன. இந்தப் பகுதியை மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரித்து நாம் படிக்கப்போகிறோம்.

1. ஜெயங்கொண்டவரான இயேசு கிறிஸ்து - முதல் பகுதி (அதி. 4 முதல் அதி. 11 :18 வரை)

பூலோகக் காட்சியிலிருந்து இப்போது பரலோகக் காட்சியை நமக்குக் காண்பிக்கிறார் யோவான். உன்னதமான தேவனுடைய சிம்மாசனத்திற்கு முன்பு நடைபெறுவதை, யோவான் தரிசித்த வண்ணம் நமக்குக் கூறுகிறார் *(அதி. 4)*.

5ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புத்தகம் ஜீவ புத்தகம் அல்ல நியாயத் தீர்ப்பின் புத்தகம்.

6ம் அதிகாரம் 1ம் வசனத்தில் முதல் முத்திரையை ஆட்டுக் குட்டியானவர் உடைப்பதை யோவான் காண்கிறார். இந்த அதிகாரம் முழுவதிலும் ஆறு முத்திரைகளும் உடைக்கப்பட்டதைப் பற்றி கூறுகிறார். பிறகு ஆண்டவருடைய மகா கோபாக்கினையின் நாள் வந்து விட்டதைக் கூறி அப்பொழுது நடந்தவைகளையும், இந்த அதிகாரத்தில் கூறுகிறார்.

7ம் அதிகாரத்தில் தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போடப்படுவதை யோவான் காண்கிறார். இஸ்ரவேலின் 12 கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் (வ. 4) என்று எழுதுகிறார்.

''பின்பு சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக் காரரிலுமிருந்து வந்த திரள் கூட்டம் ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து குருத்தோலை பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முன்பாகவும் நின்றார்கள்'' (வ. 9) என்று எழுதுகிறார்.

உபத்திரவங்கள் வாதைகள் பற்றி யோவான் கண்ட காட்சிகளுக்கு இடையே, இந்த 7ம் அத்தியாயத்தில் சிங்காசனத்தின் முன்பு யாவரும் தேவனையும் ஆட்டுக்குட்டியானவரையும் தொழுது கொள்ளும் காட்சி, வாசிப்பதற்கு நமக்கு இதமாய் இருக்கிறது.

இறுதியாக, இப்பகுதியில் நமது தேவனும் மகிமையின் ஆண்டவருமான இயேசு கிறிஸ்து பூரணமான முடிவான வெற்றியைப் பெற்றதை யோவான் எழுதுகிறார்.

2. ஜெயங்கொண்டவரான இயேசு கிறிஸ்து - இரண்டாம் பகுதி (அதி.11 : 19 முதல் 16ம் அதிகாரம் வரை)

முதல் பகுதியில் பூமியின் மீது நடந்த தீமைகள் அக்கிரமங்களைப் பற்றியும், அப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து தேவனுடைய

நியாயத்தீர்ப்பை மையமாகக் கொண்டு, சிங்காசனத்தின் முன் நடக்கும் காரியங்களை யோவான் எழுதினார்.

இந்தப் பகுதியில் ஆவிக்குரிய அக்கிரமங்களைக் குறித்து அவர் கண்ட காரியங்களைத் தேவாலயத்தின் கண்ணோட்டத்தில் பார்த்தவைகளை இங்கு யோவான் எழுதுகிறார்.

முந்திய பகுதிகளில் இயேசு கிறிஸ்து மகிமையடைந்தவராய் யோவானுக்கு வெளிப்படுத்தின காரியங்களைப் படித்தோம். இங்கு, இயேசு குழந்தையாய்ப் பிறந்தபோது ஏரோதுவைக் கொண்டு அவரை பிசாசு கொலைசெய்ய பிரயாசப் பட்டதைப் போல இங்கும் யோவான் கண்ட காரியங்களைப் படிக்கிறோம்.

மூன்று தீமையான உருவங்கள் எழுந்து போராட வருவதை யோவான் கண்டதாக எழுதியவைகளை இங்கு படிக்கிறோம்.

பின்பு கிறிஸ்து ஜெயங்கொண்டதையும் அவருக்கு விரோதமாய் கூட்டுச்சேர்ந்த தீய சக்திகள் ஜெயிக்கப்பட்டதையும், மகாபாபிலோன் வீழ்ந்ததையும் யோவான் கண்ட விதமாக நாம் இப்பகுதியில் படிக்கிறோம்.

3. ஜெயங்கொண்டவரான இயேசு கிறிஸ்து - மூன்றாம் பகுதி

(அதி. 17 - அதி 22)

மீண்டும் நாம் இங்கு கடைசிக்கால சம்பவங்களைப் பற்றி காண்கிறோம். கூடுதலாக கீழ்க்காணும் கடைசிக்கால சம்பவங்களை நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

அ. பாபிலோனின் வீழ்ச்சி (அதி. 17, அதி. 18)

ஆ. ஜெயங்கொண்டவராக கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும் (அதி. 19)

இ. சாத்தானின் வீழ்ச்சியும் அந்தகாரச் சிறையில் அவன் அடைக்கப்பட்டு அழிக்கப்படுதலும் (அதி. 20)

ஈ. புதிய வானம் புதிய பூமி (அதி. 21)

உ. ஜீவ நதியும் ஆரோக்கியம் தரும் இலைகளை உடைய மரங்களும் உள்ள நகரத்தைக் குறித்து யோவான் கண்ட காட்சியும் இயேசு கிறிஸ்துவின் இறுதியான வார்த்தைகளை யோவான் கேட்டதையும் குறித்து 22ம் அத்தியாயத்தில் படிக்கிறோம்.

''இதோ சீக்கிரமாய் வருகிறேன்'' என்றார். ஆவியும் மணவாட்டியும் வாரும் என்கிறார்கள். நாமும் அப்படி யே கூறுவோம்.

அத்தியாயம் - 30

முடிவுரை

புதிய ஏற்பாட்டு இறையியல்

பழைய ஏற்பாட்டில் முற்பிதாக்களுக்கு தீர்க்கதரிசிகள் மூலமாய் தம்மை வெளிப்படுத்தின தேவன், புதிய ஏற்பாட்டில் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தம்மை வெளிப் படுத்தினார். இதுபற்றி முந்திய 29 அத்தியாயங்களில் படித்தோம். தொடர்ந்து பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை மக்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்.

பிதாவாகிய தேவனின் குணாதிசயங்கள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் ஆள் தத்துவத்தில் அடங்கியுள்ளதால், தேவனுடைய ராஜ்யம் கிறிஸ்துவின் மூலம் புதிய ஏற்பாட்டில் முக்கியத்துவம் பெற்றது. தேவனுடைய மீட்பின் திட்டத்தை இயேசு கிறிஸ்து தமது மரணத்தின் மூலம் நிறைவேற்றி, தேவனுடைய ராஜ்யத்தை பூமியில் மனிதர்களிடத்தில் ஸ்தாபித்து வருகின்றார். ஆதியில் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மனிதனின் இரட்சிப்பு கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலம் மனிதர்களுக்குக் கிடைக்கிறது. மேசியாவைக் குறித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் யாவும் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறின.

கிறிஸ்து பாடுபட்டு உயிர்த்தெழுந்த பின்பு, பெந்தேகோஸ்தே நாளில் தமது திருச்சபையை உருவாக்கினார் (அப். 2). திருச்சபையின் வளர்ச்சிக்காக பரிசுத்த ஆவியானவர் ஆதிகாலத்தில் அப்போஸ்த லரைக் கொண்டும், இன்று தேவனுடைய ஆசாரியக் கூட்டமாக இருக்கும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட விசுவாசிகளைக் கொண்டும் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து இன்றளவும் நடத்தி வருகிறார்.

இயேசு கிறிஸ்து தமது மணவாட்டியாகிய திருச்சபையை எடுத்துச் செல்ல மீண்டும் பூமிக்கு வருவார். தம்மை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளாத பாவிகளுக்கு ஆக்கினைத் தீர்ப்பளித்து, அவர்களையும் தேவனுக்கும் மனிதர்களுக்கும் சத்துருவான வலுசர்ப்பமாகிய சாத்தானையும் அவன் தூதர்களையும் அக்கினிக் கடலில் தள்ளுவார். பின்பு அவர் இராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக, தேவாதி

தேவனாக என்றும் அரசாளுவார்.

இவைகளே புதிய ஏற்பாட்டு இறையியல் சத்தியங்கள். இவற்றை மத்தேயு முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை 27 நூல்களில் படித்தோம்.

நற்செய்தி நூல்களில் இறையியல் உண்மைகள்

மத்தேயு இயேசு கிறிஸ்துவை தேவனால் வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாகவும் ராஜாவாகவும் யூதர்களுக்கு சித்தரித்துக் காண்பிக்கிறார். தாம் எழுதிய நூலில் மாற்கு அவரை மீட்பராகவும் பாடுபடும் தேவனுடைய அடிமையாகவும் ரோமர்களுக்காக சித்தரிக்கிறார். அடுத்து, யூதரல்லாத மக்களுக்காக குறிப்பாக, கிரேக்கர்களுக்காக இயேசு கிறிஸ்துவை பாவமில்லாத மனுஷகுமாரனாக லூக்கா சித்தரிக்கிறார். ஆனால் யோவான், எல்லா மக்களும் படித்தறி வதற்காக இயேசு கிறிஸ்துவை குற்றமற்ற தேவகுமாரனாக சித்தரித்துக் காண்பித்தார்.

லூக்காவால் எழுதப்பட்ட அப்போஸ்தலர் நடபடிகள், அப்போஸ் தலர்களின் இறையியல் போதனைகளும் ஊழியங்களும் நிறைந்த ஒரு சிறப்பான வரலாற்று நூல். ஆனால் இது முற்றுப் பெறாத நூல்.

பவுலின் நிருபங்கள் தரும் இறையியல் போதனைகள்

ரோமர் நிருபத்தில் இறையியல் சத்தியங்களையும் தேவனுக்கு உகந்த கடமைகளையும் பற்றி படிக்கிறோம். கொரிந்தியர் முதல் நிருபத்தில் சபைகளில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தேவன் அருளும் தீர்வுகளைக் காண்கிறோம். இரண்டாம் நிருபம் உண்மையுள்ள ஊழியத்தின் தன்மைகளை விவரிப்பதோடு, விசுவாசிகள் தேவனுடைய ஊழியத்தை காணிக்கைகளால் தாங்குவதைக் குறித்தும் போதிக்கிறது. கலாத்தியர் நிருபத்தில் நியாயப் பிரமாணத்தின் அடிமைத்தனத்தினின்று கிறிஸ்து நம்மை மீட்டார் என்ற ஆழமான சத்தியம் உண்டு. எபேசியர் நிருபத்தில் கிறிஸ்து திருச்சபையில் இருப்பது போல் திருச்சபை கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும் என்ற சிறந்த இறையியல் போதனை கிடைக்கிறது. பிலிப்பியர் நிருபத்தில் கிறிஸ்து இயேசுவிலுள்ள தாழ்மைச் சிந்தையைத் தரித்துக் கொள்ளும்படி சொல்லப்படுகிறோம். கொலோசெயர் நிருபத்தில் கிறிஸ்து எல்லாவற்றிற்கும் உயர்ந்தவர் என்ற மேலான சத்தியம் பளிச்சிடுகிறது.

தெசலோனிக்கேயர் முதல் நிருபத்தில், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்து அறிகிறோம். இரண்டாம் நிருபத்தில் கிறிஸ்து திரும்ப வரும்வரை உபத்திரவங்கள் மத்தியிலும் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருந்து ஊழியம் செய்யும்படி நாம் போதிக்கப்படுகிறோம். தீமோத்தேயு முதல் நிருபத்தில், போதனையிலும் நடத்தையிலும் மூப்பர்கள் சபைக்கு முன்மாதிரியாய் நடந்து கொள்ளவேண்டும், சரியான உபதேசங்களை அக்கரையோடு விசுவாசிகளுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும் என்று காண்கிறோம். இரண்டாம் நிருபத்தில் ஒரு தேவ ஊழியன் கிறிஸ்துவுக்கு நல்ல போர் வீரனாக தீங்கனுபவிப்பதோடு அவன் திருவசனத்தை எப்பொழுதும் போதிக்கவேண்டும் என்பதை அறிகிறோம். தீத்து நிருபத்தில், மூப்பர்களை சபைகளில் ஏற்படுத்தி அவர்களுக்கு சரியான உபதேசங்களைக் கற்றுக் கொடுக்கும்படியும் நற்கிரியைகளைச் செய்ய அவர்களை ஆயத்தப்படுத்தும்படியும் சொல்லப்படுகிறது. பிலமோன் நிருபத்தில் கிறிஸ்தவ ஜீவியத்தின் மெய்யான தன்மை நமக்கு விரோதமாய் குற்றம் செய்தவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்வதில் அடங்கியுள்ளது என்ற உயர்வான சத்தியத்தைக் காண்கிறோம்.

பொதுவான நிருபங்கள் தரும் இறையியல் போதனைகள்

எபிரேயர் நிருபத்தில் கிறிஸ்து மோசேயைவிட, யோசுவாவைவிட, தீர்க்கதரிசிகளைவிட, தேவதூதர்களைவிட மிகவும் உயர்ந்தவர் என்ற சத்தியத்தை அறிகிறோம். யாக்கோபு நிருபத்தில் விசுவாசம் கிரியைகளில் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். அதுவே மெய்யான கிறிஸ்தவ விசுவாசம் என்று போதிக்கப்படுகிறோம். பேதுருவின் முதல் நிருபத்தில், நித்தியத்தில் அடையப்போகும் நன்மைகளைக் கருத்தில் கொண்டு ஒரு விசுவாசி பாடுகளை சகிக்கவேண்டும் என்ற போதனை கிடைக்கிறது. பேதுருவின் இரண்டாம் நிருபத்தில், சத்தியத்தில் நிலைத்திருப்பது குறித்தும், க்ள்ளப் போதகர்களை நிராகரிப்பது குறித்தும் எச்சரிப்பாயிருக்க கட்டளை பெறுகிறோம்.

யோவான் முதல் நிருபத்தில் எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தில் வளரவேண்டும். அங்ஙனமே அன்பிலும் வளர்ந்து பெருகவேண்டும். தேவன் ஒளியாய் மட்டுமல்ல அன்பாயும் இருக்கிறார் என்ற இறையியல் போதனை கிடைக்கிறது. இரண்டாம் நிருபத்தில் சபை விசுவாசிகள் சத்தியத்தில் நடப்பது தேவனுக்கும் தேவ ஊழியருக்கும் மகிழ்ச்சி தருகிறது என்ற உண்மையை அறிகிறோம். மூன்றாம் நிருபத்தில் சபைகளில் தியோத்தேரேப்பு

சந்து மீண்டும், தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்துக்கு உயர்த்தி விட்டார். இந்த அந்தஸ்தை தேவ கிருபையினாலே கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் மனிதன் பெற்றுக் கொள்ள முடியும். இதுவே தேவனுடைய அநாதி திட்டத்தின்படி மனிதன் பெறக்கூடிய இரட்சிப்பு என்னும் பாக்கியமான சிலாக்கியம் (ரோ. 3:9-19; ரோ. 5 : 6-8; ரோ. 10 : 9-10; எபே. 2 : 1-3).

★ திருச்சபை கிறிஸ்துவின் சரீரம். மேலே கூறப்பட்ட தேவனருளும் இரட்சிப்பை பெற்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு தெய்வீக அமைப்பு (1 கொரி. 12 : 13,17). இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டிகள். இவர்கள் அடங்கிய திருச்சபை, கிறிஸ்துவின் மணவாட்டி (வெளி. 21 : 2).

★ இவ்வுலகில் ஜீவிக்கும் தேவனுடைய பிள்ளைகள் மரிக்கும் போது, உயிர்த்தெழுதல் உண்டு என்ற நம்பிக்கையோடு மரித்து, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நடைபெறும் சரீர உயிர்த்தெழுதலில் மகிமையான சரீரம் பெற்று, தேவனோடு நித்திய நித்திய காலமாய் வாழப் போகிறார்கள். ஆனால் கிறிஸ்துவை விசுவாசியாதவர்களோ, நித்திய ஆக்கினையை அடைய உயிரோடெழுந்திருப்பார்கள் (வெளி. 20 : 11-13).

★ கிறிஸ்துவின் இரகசிய வருகையில் சபை எடுத்துக் கொள்ளப்படும். பின்பு 7 வருட உபத்திரவ காலம் வரும். அதன் பின்பு முதல் வருகையில், உயிரித்தெழுந்த இயேசு எப்படி பரமேறிச் சென்றாரோ அப்படியே வல்லமையோடும், மகிமையோடும் திரும்ப வருவார். ஆயிரம் வருஷம் நீதி, நேர்மை, சமாதானம் உண்டாக பூமியில் அரசாளுவார். அதன்பிறகு சாத்தான் நியாயந் தீர்க்கப்பட்டு அவன் தூத கணங்களோடு அக்கினிக் கடலில் தள்ளப்படுவான். பின்பு புதிய வானம் புதிய பூமி உண்டாகும். நித்திய நித்திய காலத்துக்கு புதிய எருசலேமில் தேவனுடைய பிள்ளைகள் வாழ்ந்திருப்பார்கள்.

(முற்றும்)

ஆசிரியரைப் பற்றி...

அருட்திரு. டாக்டர் ஜி. ராஜாபகதூர் அவர்கள் 1974 ஆம் ஆண்டு தேவஊழியத்திற்கான அழைப்பைப்பெற்று இந்திய சுவிசேஷத் திருச்சபையில் போதகராக திருப்பணியாற்றி வந்தார். தற்போது பேராயரின் சிறப்பு பிரதிநியாகவும் நிருபம் பத்திரிக்கையின் ஆசிரியராகவும் பணியாற்றுவ தோடு சென்னை இறையியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். 25க்கு மேற்பட்ட கிறிஸ்தவ நூல்களை தமிழாக்கம் செய்த இவர் "கொக்கரக்கோ", "ஆலமர நிழலில்", போன்ற பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ நவீனங்களையும் எழுதியுள்ளார். சமீபத்தில் இவர் எழுதிய **"வேதாகம சத்தியங்கள்"** என்று நூல் வேதாகமத்தை ஆவிக்குரிய பிரகாரம் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும்வகையில் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.

இந்நூலினைப்பற்றி...

புதிய ஏற்பாட்டின் 27 நூல்களை கிறிஸ்தவ விசுவாசிகள் எளிய முறையில் கற்று அதில் அடங்கியுள்ள இறையியல் கருத்துகளை புரிந்து கொண்டு கிறிஸ்தவ ஜீவியத்திலும் ஊழியத்திலும் அவர்கள் எழும்பிப் பிரகாசிக்க பெரிதும் பயன்படும் ஒரு சிறந்த நூல்.

WORD OF CHRIST MINISTRIES
No.100/3, Nirmala Apartments, Medavakkam Tank Road,
Kellys, Chennai - 10.